# விடுதலைப்புலிகள்

குரல்: 128 | மார்கழி, 2005 – தை, 2006 | அன்பளிப்பு: 12/=



03 உண்மை எப்போது சிங்களவரை...
04 எங்குபோய் முடியும்...
05 நாணற்புற் சிங்கள இராஜதந்திரம்...
06 வார்த்தைகளின் மறுபக்கம்.
07 படுகொலை வெறியுடன்...


# சமாதான முயற்சிக்கு இறுதிச் சந்தர்ப்பம்

**புலிகள் இயக்கமும் - சிங்கள அரசும் ஜெனீவாவில் சந்தித்துப் பேச ஒப்புக்கொண்டுள்ளன. பேச்சுக்குச் சம்மதித்த மகிந்த அரசின் நேர்மையில் தமிழ்மக்கள் பலத்த சந்தேகம் தெரிவிக்கின்றனர். சிங்கள கடும்போக்காளர்களை இணைத்துக் கொண்டு சிங்கள மக்களிடம் போருக்கு ஆணைகேட்டு தேர்தலை வென்று - பின்னர் பதவியேற்றதும் சிங்களப் போர் இயந்திரத்தை போர்வெறித் தளபதிகளின் பொறுப்பில் ஒப்படைத்து போருக்கான தயார்படுத்தல்களை செய்துவந்த மகிந்த அரசு; திடீரென சமாதானம் பேசுவதைப் பார்த்து மகிழ தமிழ்மக்கள் தயாராக இல்லை.**

**வழமைபோன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற சிங்கள அரசு முயல்கின்றதா! என்ற ஐயமும் தமிழ்மக்களிடம் எழுந்துள்ளது.**

ஆசியாக் கண்டத்தில்தான் பேச்சு - ஐரோப்பிய நாடுகளில் பேச்சில்லை - நோர்வே மத்தியத்துவப் பணியாற்றக் கூடாது என்றெல்லாம் அமைதிப்பேச்சுக்கு நிபந்தனைகள் விதித்த மகிந்த அரசு, இப்போது அவற்றைக் கைவிட்டு ஐரோப்பிய நகரான ஜெனீவாவில் பேச ஒப்புக்கொண்டுள்ளது.

இது சமாதானத்தை அடைவதற்காக சிங்கள அரசு செய்யும் விட்டுக்கொடுப்பல்ல. மாறாக, போருக்கான கால அவகாசத்தைத் தேடிப்பெறும் சிங்கள அரசின் வழமையான சதி அரசியல் என்றே தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தமிழர் தாயகத்தில் - தமிழருக்கெதிராக நிழல் யுத்தத்தைத் தொடக்கி - இராணுவ அட்டூழியத்தைக் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள அரசு, பெரும் போர் ஒன்றிற்குக் கட்டியம் கூறிவந்ததை தமிழ் மக்கள் நன்கறிவர்.

ஆயினும், தான் தொடக்கிய நிழல் யுத்தத்தில் தனது படைகள் சிக்குண்டு - சந்தித்த பேரிழப்புகளைக் கருத்திற்கொண்டு உடனடியாகப் போரைத்தொடங்கும் திட்டத்தை சிங்கள அரசு ஒத்திவைத்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

'புலிகள் பலமிழந்துள்ளனர்' என்ற சிங்களக் கடும்போக்காளர்களின் இராணுவக் கணிப்பை தலைகீழாக மாற்றுவதுபோல நிழல் யுத்த காலத்தில் தமிழ்மக்கள் வெளிப்படுத்திய போர் எழுச்சி சிங்களத்தைச் சிந்திக்க வைத்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் சிங்கள போர் இயந்திரத்தைப் பலப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு நன்கு தெரியும். அரசியல் ரீதியாக கடும் போக்காளர்களையும் - இராணுவ ரீதியாக பெயர் போன கொலைஞர்களையும் தேர்ந்தெடுத்து சிங்களப் போர் இயந்திரத்தின் தலைமைப் பொறுப்புகளில் நியமித்திருந்தார்.

போர்ச்செலவை மனதில் வைத்து 2006ஆம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனத்திற்கென பத்தாயிரம் கோடி ரூபாவையும் மகிந்த அரசு ஒதுக்கியிருந்தது. ஆனால் அந்தப் பெருந்தொகைப் பணத்தை திரட்டமுடியாத நிலையில் திறைசேரி உள்ளது என்ற உண்மை மகிந்த ராஜபக்ஷவுக்கு கூறப்பட்டது.

சிங்கள அரசிற்கென வெளிநாடுகள் ஒதுக்கிய பெருந்தொகைப் பணம் அரசின் சமாதான விரோதப் போக்கால் கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லை என்று சிங்களப் புத்தி ஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று சுனாமி அழிவைக் கண்டு உலகமக்கள் வழங்கிய பெருந்தொகை நிதியும் சிங்கள அரசின் தமிழர்விரோத நிலைப் பாட்டால் தடைப்பட்டுள்ளது.

புலிகளுடன் சமாதானப் பேச்சை தொடங்கினால்தான் இந்த நிதிகளை சிங்கள அரசு பயன்படுத்த முடியும் என்று உலகநாடுகள் கூறிவிட்டன.

முடங்கிப்போயுள்ள இந்தப் பெரும் நிதியை ஒரு அரசியல் காய்நகர்த்தல் மூலம் பெற்றுவிட மகிந்த அரசு துடிக்கின்றது. இந்த நோக்கத்துடனேயே நேற்றுவரை இனவெறி கக்கி - கடும்போக்கு நிலைப்பாடெடுத்த மகிந்த அரசு திடீரென பேச்சுக்குச் சம்மதித்து சமாதானப் பிரியனாக வேடம் போடுகின்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கத்தில்...)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# சமாதானத்தின் திறவுகோல் போர்நிறுத்த ஒப்பந்தமே!

சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் - காலத்தை இழுத்தடித்து போருக்குத் தயாராவதையும் இலக்காகக்கொண்டே சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை காலமும் பேச்சுவார்த்தைகளை பயன்படுத்தி வந்துள்ளனர்.

சிங்கள ஆட்சியாளர்களின் இந்த சந்தர்ப்பவாத அரசியலை புலிகள் இயக்கம், கடந்த நான்குவருட சமாதான காலத்தில் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டிவிட்டது.

இனியுமொரு அர்த்தமற்ற பேச்சை ஆரம்பத்திலிருந்து நடாத்தி - மீண்டும் ஒரு முறை சிங்கள அரசின் கபடத்தனத்தை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்திக் காட்ட வேண்டிய கடமையும் - அவசியமும் புலிகள் இயக்கத்திற்கு இல்லை.

பேச்சிற்கும் அதன் அரசியல் இலக்கான அரசியல் தீர்வுக்குமான ஒரு அடித்தளம் சிங்கள அரசாலும் - புலிகள் இயக்கத்தாலும் ஏற்கனவே போடப்பட்டுவிட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம்தான் அந்த அரசியல் அடித்தளம்.

இருதரப்பாலும் நீண்டநாட்கள் விவாதிக்கப்பட்டு - இரு தரப்பாலும் திருத்தங்கள் செய்யப்பட்டு இறுதியில் ஒரு இணக்கப் பாட்டிற்கு வந்து இருதரப்பாலும் கைச்சாத்திடப்பட்ட ஒரு அரசியல் உடன்பாடுதான் அந்த போர்நிறுத்த ஒப்பந்தம்.

அதை சரியாகவும் - முழுமையாகவும் நடைமுறைப் படுத்துவதன்மூலமே தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சியை அரசியல்தீர்வு நோக்கி நகர்த்தமுடியும்.

தமிழர் தாயகத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் அற்ற - இயல்புநிலை தோற்றுவிக்கப்படவேண்டியது அரசியல் பேச்சு வார்த்தைக்கு அவசியமானது என்பது புலிகளின் உறுதியான நிலைப்பாடாகும்.

நீண்டகாலப் போரால் தமிழரின் அன்றாட வாழ்க்கை சிதிலமடைந்துபோயுள்ளது. இந்த அமைதிக் காலத்திலேயே ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாது அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழர்களின் வீடுகள் - கோவில்கள் - பாடசாலைகள் - பொதுக்கட்டடங்கள் படையினரால் அபகரிக்கப்பட்டு இராணுவ முகாம்களாக மாற்றப் பட்டுள்ளன. தமிழ்மீனவர்களின் மீன்பிடி உரிமை படையினரால் பறிக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்களின் பயணங்கள் படையினரால் இடையூறுக்குள்ளாக்கப்படுகின்றன. சுற்றிவளைப்புக்கள் - கைதுகள் என்பன இன்றுவரை தொடர்கின்றன.

கடந்த ஒன்றரைமாத காலத்தில் மட்டும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். அண்ணளவாக அத்தொகையின் அரைவாசி அளவினர் படையினராலும் - ஒட்டுக்குழுக்களினாலும் கடத்தப்பட்டு காணாமல்போயுள்ளனர்.

இவ்விதம், தமிழ்மக்களின் அன்றாடவாழ்க்கை இராணுவ பயங்கரவாதத்தால் சீரழிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இராணுவ அட்டூழியங்களை இல்லாதுசெய்து மக்களை இயல்பு வாழ்க்கைக்குள் கொண்டுவரும் வழிமுறைகளைக் கொண்டதாகவே போர்நிறுத்த உடன்பாடு வரையப்பட்டிருந்தது.

ஆனால், அந்த உடன்பாட்டின் பிரகாரம் போர் ஓய்வு என்ற அம்சத்தை மட்டும் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்ட சிங்கள அரசு - நான்குவருடங்கள் பூர்த்தியடையும் இன்றைய நிலையிலும்கூட, அந்தச் சமாதான உடன்பாட்டை சரியாக அமுல்படுத்தவில்லை.

சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பமின்மையாலும் சிங்களப் படைகளின் ஒப்பந்த மீறல்களாலும் போர்நிறுத்த உடன்பாடு முறிவடையும் சூழல் ஏற்பட்டபோதே, மகிந்த அரசு, ஜெனீவா பேச்சுக்கு உடன்பட்டுள்ளது.

ஜெனீவா பேச்சுமேசையில் போர்நிறுத்த உடன்பாட்டை விரைவாகவும் - முழுமையாகவும் நடைமுறைப்படுத்துவது பற்றிப் பேசவே புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

இந்த உறுதியான நிலைப்பாட்டை சமாதானத் தூதரும் நோர்வே அமைச்சருமான எரிக்சொல்ஹெய்மிடம் தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறிவிட்டார்.

போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தங்கள் பற்றிப் பேசவோ! அல்லது இந்த உடன்பாட்டைப் புறந்தள்ளிவிட்டு அரசியற்தீர்வுகள் பற்றிப் பேசி வீணாகக் காலங்கடத்தவோ புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

ஜெனீவா பேச்சுக்கென திகதி குறிக்கப்பட்ட பின்னரும் இராணுவத்தினதும் - ஒட்டுக்குழுக்களினதும் அட்டூழியங்களை அடக்க மகிந்த ராஜபக்ஷ அரசு முன்வரவில்லை.

வெளிப்படையாகவே தமிழருக்கெதிரான கடும்போக்கு நிலைப்பாடெடுத்துள்ள மகிந்த அரசுடன் பேசுவதனால் ஏதேனும் நன்மைகள் உண்டா! என்று தமிழ்மக்கள் சந்தேகம் தெரிவித்தபடி உள்ளனர்.

போரைத் தவிர்த்து தமிழர் தாயகத்தில் அமைதிச்சூழல் ஏற்படுத்தப்படவேண்டுமெனில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை சரியாக அமுல்படுத்துவதே ஒரேயொரு வழியாகும்.

இன்றை அரசியற் சூழலில் சமாதானப் பேச்சுக்கான திறவுகோல் போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமே ஆகும்.

இந்தக் களயதார்த்தத்தை ஏற்றுக்கொண்டபடி ஜெனீவா பேச்சுமேசைக்கு மகிந்த அரசு வருவதே பேச்சுவார்த்தையை தொடரச் செய்யும் நம்பிக்கையை அனைவருக்கும் தரும்.

இதற்கு மகிந்த அரசு மறுத்து - காலங்கடத்த அது முயன்றால் - தலைவர் மாவீரர் நாள் செய்தியில் கூறியபடி - போராட்டத்தை தீவிரமாக்கி - தமிழரின் விடுதலை அபிலாசையை வென்றெடுப்பதைத் தவிர புலிகள் இயக்கத்திற்கு மாற்றுவழிகள் ஏதுமில்லாமல் போகும்...

புலிகளின் குரல்

## திரு.ஜோசப் பரராசசிங்கம், திரு.சச்சிதானந்தசிவம் ஆகியோருக்கு மாமனிதர் கௌரவம்



மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம்

தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

சுயநலவாழ்வைத் துறந்து, பொதுநல சேவையை இலட்சியமாக வரித்து, அந்த உயர்ந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த ஒரு உத்தம மனிதரை இன்று தமிழர்தேசம் இழந்துவிட் டது. தமிழீழ மண்ணினதும் தமிழீழ மக்களினதும் விடிவிற் காக ஓயாது ஒலித்த ஒரு உரிமைக்குரல் இன்று ஒடுங்கிவிட்டது. பகைவனின் கோழைத்தனமான கோர மான தாக்குதலுக்கு ஒரு மகத்தான மனிதர் பலியாகி விட்டார். இது தமிழீழ விடுதலை வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் துயர நிகழ்வு.

திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர். அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். இனிமையான பேச்சும், எளிமையான பண்பும், பெருந்தன்மையான போக்குமே அவரது ஆளுமையின் சிறப்பியல்புகள். நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்ட ஒரு உன்னதமான அரசியல்வாதி. தமிழீழ மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சிறந்த மனித உரிமைப் போராளி. அனைவரையும் கவர்ந்த ஒரு தமிழினப் பற்றாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு என்றுமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைக்குள் வாழ அவர் என்றும் விரும்பியதில்லை. இந்த அடக்குமுறைக்குள் தமிழீழ மக்களது வாழ்வு சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த அடக்குமுறையிலிருந்து தமிழீழ மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலைபெற்று சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரிந்துகொண்டார். இந்த இலட்சியத்தால் உந்தப்பெற்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக நின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழுமனதுடன் ஏற்று தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்தார். பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளில் பல்வேறு அச்சுறுத்தல் களுக்கும் ஆபத்துக்களுக்கும் மத்தியில் மிகுந்த துணிவுடன் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பல்வேறு வழிகளில் கைகொடுத்துதவினார். மட்டக்களப்பு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராகவும், வடக்கு – கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுனர் களில் ஒருவராகவும் தமிழீழ மக்களது உரிமைக்காக இடையறாது தொடர்ந்து உழைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களையும் உண்மைகளையும் உலகுக்குப் பரப்புரை செய்தார். அன்னார் ஆற்றிய அரும்பணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. என்றுமே பாராட்டுக்குரியவை.

திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப்பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசியவிருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சத்திய இலட்சியத் திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகனாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர் என்றும் வாழ்வார்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.



மாமனிதர் சச்சிதானந்தசிவம்

தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

தமிழீழ தேசத்தின் விடிவிற்காகவும், விடுதலைக்காகவும் அயராது பாடுபட்ட ஒரு அற்புதமான மனிதரை நாம் இன்று இழந்து விட்டோம். இந்த நல்ல மனிதரை இழந்து எமது தேசம் இன்று சோகக் கடலில் மூழ்கிப்போய்க் கிடக்கிறது.

ஞானரதன் அண்ணை என அனைவரும் அன்போடு அழைக் கும் திரு.வை.சச்சிதானந்தசிவம் அவர்கள் ஒரு நல்ல மனிதர். நெஞ்சத்தில் நேர்மையும் உள்ளத்தில் உயர்ந்த எண்ணமும் கொண்டவர். எளிமை அவரோடு கூடப் பிறந்தது. அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொள்வார். அனைவரையும் கவர்ந்துகொண்ட உயரிய பண்பாளர்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். எமக்கு ஒரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். அவர்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும் என துடியாய்த் துடித்தார். தேசப்பற்று அவரை எமது போராட்டத்தோடு இறுக்கப் பிணைத்தது. மக்களோடும், போராளிகளோடும் இணைந்து நின்று தாயக விடுதலைப்போரின் பெரும் பழுக்களைத் தானும் சுமந்துகொண்டார். நீண்டகாலமாக எமது விடுதலை இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளில் பெரும் பொறுப்புக்களைச் சுமந்து, தனது முதுமைக் காலத்திலும் உறுதியோடு உழைத்தார். தனது அறிவாற்ற லாலும் கடும் உழைப்பாலும் தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் ஆற்றிய பணி என்றுமே பாராட்டுக் குரியது.

இவர் தமிழீழ மண் தந்த தலைசிறந்த எழுத்தாளர். ஆற்றல்மிக்க ஒரு கலை இலக்கியப் படைப்பாளி. சிறந்த அரசியற் சிந்தனையாளர். சிங்கள – பௌத்த பேரினவாதத்துடன் சதா கருத்துப்போர் நடத்தினார். பத்திரிகை களிலும் சஞ்சிகைகளிலும் ஓய்வில்லாமல் எழுதினார். எமது மக்களிடத்தில் விடுதலை உணர்வையும் தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார். சிங்கள இனவாத அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு சாட்டையடி கொடுத்து எமது தேசத்தின் உண்மை நிலையை உலகிற்கு தெளிவாக எடுத்துக்கூறினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர் எமது விடுதலை இயக்கம் ஒளிப்படத்துறையில் இன்று நிகழ்த்தியுள்ள பெரும் பாய்ச்சலுக்கு நடுநாயகமாக நின்று செயற்பட்டார். நிதர்சனம் நிறுவனம் தோன்றிய காலம்முதல் இற்றைவரை அதன் வேராகவும் விழுதாகவும் அதனைத் தாங்கிநின்று செயற்பட்டார். எமது விடுதலைப் போராளிகளை ஒளிப் படத்துறையில் பயிற்றுவித்து அவர்களைச் சிறப்பாக வழிப்படுத்தி, நெறிப்படுத்தி ஒரு தேசியத் தொலைக்காட்சியை உலகம் பூராகவும் ஒளிபரப்புகின்ற அளவிற்கு வளர்த்தெடுப்பதில் அச்சாணியாக இருந்து செயற்பட்டார். சிறிய குறும்படம் முதல் முழுநீளத் திரைப்படம்வரை பல்வேறு ஒளிப்பேழைகளை ஞானரதன் என்ற பெயரில் தயாரித்து நெறிப்படுத்தினார். இரத்தம் சிந்தி உயிர்விலை கொடுத்து எமது விடுதலை இயக்கம் களத்திலே படைத்த சாதனை களையும் குவித்த வெற்றிகளையும் ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைகளாகவும் விவரணங்களாகவும் தயாரித்து அவற்றை உலகின் கண்களுக்குக் காட்சிப்படுத்த உதவினார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய விடுதலைப்பணி அளப்பரியது.

திரு.வை.சச்சிதானந்தசிவம்:ஞானரதன் அவர்களின் இனப் பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசியவிருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சுயவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து தேசவிடுதலை எனும் உன்னத இலட்சியத் திற்காக உறுதியோடு வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. அவர்கள் எமது தேச ஆன்மாவில் நீங்காத நினைவுகளாகக் காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

"திருகோணமலை நகரத்தில் உந்துருளியிலும் ஈருருளியிலும் ஏறி இராணுவத்தினரை தாக்கச் செல்கையில் குண்டுவெடித்ததில் அறு புலிகள் உயிரிழந்தனர்." (திவயின 03.01.2006)

இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியின் களங்கமாகப் பொசினியச் சேர்பியர் கருதப்படுவதுபோல இருபத்தோராம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியின் களங்கமாகச் சிங்களவர் கருதப்படுவர். "சேர்பியர் வரலாற்றிலிருந்து எதனையும் கற்கவுமில்லை. ஆனால் அதனை மறக்கவுமில்லை." என சேர்பியர் குறித்த வரலாற்றின் பட்டறிவு மொழி சிங்களவர்க்கும் மிகப்பொருத்தம். நாம் வெகுவேகமாக முன்னேறுவதற்கு இறந்தகாலம் நோக்கிப் பயணிப்போம் என்பதே மகிந்தரின் சிந்தனை. தமது வீழ்ச்சியினை உணரமுடியாமலும் இற்றைவரை தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உணராமலும் அதற்காக மனம் வருந்தாமலுமிருக்க எவ்வாறு சிங்களவரால் முடிகின்றது? எது அவர்களைத் தடுக்கின்றது? சிங்களவர் ஏன் சிந்திக்க மறுக்கின்றார்கள்?

இது பெருத்த அவலமான சூழலென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தகையதொரு போக்கின் விளைவாலே உண்மையறிதலென்பது சிங்களத்தில் நடக்காது போய் விட்டது. ஊடகங்கள் பேசும் வேளையில் நாம் அதன் எதிர்மறை பற்றி சிறிலங்காவின் தொடர்பில் பேசவேண்டியதாயுள்ளது.

சிங்கள ஆட்சியொழுங்கில் பேரினவாதச் சிந்தனை தொடர்ந்து தக்கவைக்கப் பட்டு ஆட்சியினைக் கைப்பற்ற அது மந்திரக் கோலாக மாறியது பற்றி அறியப் புகமுன்னர், சிங்களதேச ஊடகங்கள் பற்றி அறிய வேண்டும். வரலாற்றாய்வாளர் திருநாவுக்கரசு எழுதியதுபோல "அரைநூற்றாண்டிற்கு மேலான இலங்கைத் தீவின் அனைத்து அரசியற், சமூக, பொருளாதார முரண்பாடுகளும் தற்போது இன விவகாரத்திலேயே மையங்கொண்டுள்ளன. குடும்ப ஆதிக்கப் போட்டிகளை பதவி ஆதிக்க அவாக்களை உலகப் பொருளாதார அமுக்கங்களை, தத்தம் இயலாமையை எல்லாம் இனப்

வனங்களுக்குள் கட்டுப்படுவதாக I.M.S எனப்படும் சருவதேச ஊடகச்சேவை நிறுவனம் கணித்துள்ளது. (இலங்கையில் போர் நிறுத்தத்தின் பின்னான அமைதிக்கு ஊடகப் பங்களிப்பினை உறுதிப்படுத்த முயலும் திட்டத்தின் ஒரு அங்கமாக இவ்கள் வெளியிட்ட அறிக்கையிலிருந்து (யூன் 2002) சில தகவல்கள் நன்றியுடன் எம்மால் பயன்படுத்தப்படுகின்றது)

அச்சு ஊடகங்கள் வரிசையில் அசோசியேற்றட் செய்தித்தாள் நிறுவனம் (டெய்லி நியூஸ், சண்டே ஒப்சேவர், தினமின) விஜயா செய்தித்தாள் நிறுவனம் (டெய்லி மிரர், சண்டே ரைம்ஸ், லங்கா தீப) உபாலி செய்தித்தாள் நிறுவனம் (ஜலண்ட், சண்டே ஜலண்ட், திவயின) லீடர் செய்தித்தாள் நிறுவனம் (சண்டே லீடர், இறிதா பெரமுன) சுமதி வெளியீட்டு நிறுவனத்தின் லக்பிம (நாளாந்தம், வாரம்) நிதி மூலத்தோடும் அரச ஆதரவோடும் இயங்கும் ஏரிக்



# உண்மை எப்போது சிங்களவரை விடுவிக்கும்?

**- க.வே.பாலகுமாரன் -**

ஊடகவியல் உச்சம்பெறும் இத் தகவல் ஊழியில் உண்மை உணரப்படாமல் இருப்பதேன்? நவீன ஊடகவியலின் தந்தையாக அதன் எதிர்வு கூறலாளராகக் கருதப்படும் கேர்பேட் மார்சல் மக்லூகான் கூறுகின்றார். "உண்மை உம்மை விடுதலை செய்யும்" இதன் எதிர்மறை வடிவமே இன்றைய சிங்களதேசம்.

புங்குடுதீவில் சோதரி தர்சினி கொடுமையான பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு வீசப்பட்டபொழுது மருமமான அமைதி காக்கவும் அவருக்கும் கடற்படையினருக்கும் ஏற்கனவே தொடர்பிருந்ததாகத் திரித்துக் கூறவும் சிங்களத்தின் சிங்கள, ஆங்கில செய்தியூடகங்கள் முயன்றன. தொழில் யுகத்திலிருந்து தகவல் யுகத்திற்கு எப்போதோ உலகம் புகுந்த நிலையில் எண்ணங்கள் மூலதனமாக மாறும் புலனாக பொருண்மிய உலகில் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பில் நவீன காட்டு மிராண்டிகளாகத் தகவல்களை மறுக்கும், திரிக்கும் நிலையில் இன்றும் சிங்கள தேசமுள்ளது. இத்தகையதொரு போக்கின் விளைவாலே இன்றைய இனச் சிக்கலின் உச்ச முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டில் "ஊடகத்தினை புரிதல்: மனிதனின் நீட்சிகள்" என்கிற நூல் தொட்டு "உலகக் கிராமம்" (1989) என்கிற நூல்வரை ஊடகம் பற்றி ஒன்பது பிரபலமான நூல்களை எழுதிய மார்சல் மக்லூகானின் புகழ்மிக்க வார்த்தைகளிவை தொழில் பொறிமுறை யுகத்தில் விண்வெளிக்குள் மனிதன் தன் உடலை நீட்சியாக்கிக் கொண்டான். மின்னியல் தொழில்நுட்பத்தின் ஒரு நூற்றாண்டு வளர்ச்சியின் பின்னர் தன் மைய நரம்பு மண்டலத்தையே முழு உலகளாவிய அரவணைப்பிற்குள் மனிதன் நீட்சியாக்கிக் கொண்டான். இதன்மூலம் இப் புவியைப் பொறுத்தவரையில் காலத்தையும் நேரத்தையும் மனிதன் இல்லாதாக்கிவிட்டான். மனிதன் இத்தகைய நீட்சியின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறான். இவ்வாறு விளக்கும் மக்லூகான் மிக முக்கியமான கருத்துப் பதிவினை முன்வைக்கிறார். மனிதன் தன் புலன்களையும் நரம்பு மண்டலத்தையும் நீட்டிக் கொண்டது போல **"அறிதலின் ஆக்க பூர்வமான வழிமுறை கூட்டாகவும் ஒருங்கிணைவாகவும் முழு மனித குலத்திற்கும் விரிவாக்கப்படும்வேளை மனச்சான்றின் தொழில்நுட்ப தூண்டலென்பது நிகழ்கின்றது"** புரிதலுக்கு சிறிது கடினமாக விருந்தாலும் உண்மைகள் பொது; மறைக்க முடியாதவை என்பது மனிதனின் நீட்சியாய் நிகழ்ந்துவிட்டது என்பதே செய்தி.

கால்களின் நீட்சியாக வாகனங்கள், விமானங்கள். கண்களின், காதுகளின் நீட்சியாக வானொலி, தொலைக்காட்சியென நீட்சியாக மனிதன் விரிவடைந்த நிலையில் சிங்களப் பேரினவாதத்தின் நீட்சியாகவே சிங்கள ஆங்கில ஊடகங்கள் சிறிலங்காவில் இருக்கின்றன. வாகனங்கள் எவ்வாறு நடத்தல் எனும் நிலையைத் துண்டித்தது என்கிற பொருளில் ஒரு **துணித்தல்** (Amputation) செயற்பாடும் நடந்தேறியது என்கிறார் மக்லூகான். ஆனால் சிங்களத்தில் துண்டித்தல் / துணித்தல் என்பது உண்மைக்கே நடந்தது.

பிரச்சினையாக உருவமைத்து உருவேற்றி விடுகின்றனர்." இவ்வாறான இந்த உருவேற்றல் என்பது எவ்வாறு நடைபெறுகின்றது? இதனை அறியப் புகுவோருக்கு அதிர்ச்சியூட்டும் செய்தி காத்திருக்கின்றது. அருவருப்பான அலங்கோலமான அம்மணமான சிங்கள தேச ஊடகங்கள் சிங்கள மக்களைத் தமது கொழுக்கிகளுக்குள் சிக்கவைத்து அவர்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சிந்திக்க மறுக்கும் சிங்களவர்களாக்கிவிட்டனர்.

சிங்களத்தின் இரு பிரதான குடும்ப ஆதிக்க கூட்டுக்களின் பிடிக்குள் அவற்றின் பிரிக்கமுடியாத அங்கமாக சிறிலங்கா ஊடகத் துறை உள்ளது. சிறிலங்காவில் ஊடகச் சுதந்திரமென்பது மருந்திற்கு இல்லையெனினும் மாறிமாறிப் பதவிக்கு வருவோர் ஊடகங்களை நசுக்குவதே தம் முதன்மைப் பணியாகச் செய்து வந்ததையும் விரைவில் மகிந்தரும் அதனையே செய்ய ஆயத்தமாகின்றாரெனபதும் ஒன்றும் இரகசியமல்ல. சிங்கள ஆட்சியொழுங்கின் முத்தெய்வங்கள் (1) அவசரகால / பயங்கரவாத தடைச்சட்டம் (2) தொலை இயக்கியால் இயக்கப்படும் செய்தித் திரிபு ஊடகங்கள் (3) இனவெறியின் இருப்பிடமான முப்படை என்பனவே. எனவே **இத்தீவில் உண்மையான அமைதி வேண்டுமாயின் முதலில் செய்யப்படவேண்டியது இன்னொரு போர் நிறுத்தமே. தமிழ்பேசும் மக்கள் மீதான ஊடக, இராணுவ இன வெறிப் போரை சிங்களதேச ஊடகங்கள் உடன் நிறுத் தவே இப்போர் நிறுத்தம்.**

சிறிலங்காவின் ஊடகத்துறை இன்று பிரதானமாக எட்டு தொடரிய வெளியீட்டு நிறுகரை நிறுவனம் எவர் பதவிக்கு வந்தாலும் அவர் ஊதுகுழலாக கனத்திற்குக் கனம் மாறும் பச்சோந்தி நிலையிலுள்ளது. ஆனால் தொடக்கத்தில் ஏரிக்கரை நிறுவனத்தின் உரித்தாளரான ரணிலின் மிக நெருங்கிய உறவினரான D.R.விஜயவர்த்தனா ஐ.தே. கட்சி ஆள் என்பதால் ஏரிக்கரையை அரசாங்க உடைமையாக்க 1964 இல் சிறிமாவோ முயன்று




தோற்று அரசாங்கத் தையே இழந்தார். பின்னர் 1973இல் அது அரசாங்க உடைமையானது. தொடக்கத்தில் ஐ.தே.கட்சியின் ஊதுகுழல் இப்போது இரண்டு கட்சிக்கும் ஊதுகுழலான விசித்திரமிது. விஜயவர்த்தனா அப்போது நட்டத்திலியங்கிய விஜயா வெளியீட்டு நிறுவனத்தை (ரைம் ஒவ் சிலோன், டெய்லிமிரர்) தன்னுடமையாக்கினார். இப்போது இங்கிருந்து வெளிவரும் சண்டேரைம்ஸ், டெய்லி மிரர் என்பன விற்பனைக்காக நடுநிலைபோல காட்டிக்கொண்டாலும் ஐ.தே.கட்சி ஆதரவுப் போக்கினையும் தமிழர் விரோதப் போக்கினைக் கடைப்பிடிப்பது ஒன்றும் இரகசியமல்ல.

**புங்குடுதீவில் சோதரி தர்சினி கொடுமையான பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு வீசப்பட்டபொழுது மருமமான அமைதி காக்கவும் அவருக்கும் கடற்படையினருக்கும் ஏற்கனவே தொடர்பிருந்ததாகத் திரித்துக் கூறவும் சிங்களத்தின் சிங்கள, ஆங்கில செய்தியூடகங்கள் முயன்றன. தொழில் யுகத்திலிருந்து தகவல் யுகத்திற்கு எப்போதோ உலகம் புகுந்த நிலையில் எண்ணங்கள் மூலதனமாக மாறும் புலனாக பொருண்மிய உலகில் அறிவை அடிப்படையாகக்கொண்ட சமூக அமைப்பில் நவீன காட்டு மிராண்டிகளாகத் தகவல்களை மறுக்கும், திரிக்கும் நிலையில் இன்றும் சிங்கள தேசமுள்ளது. இத்தகையதொரு போக்கின் விளைவாலே இன்றைய இனச் சிக்கலின் உச்சமுரண்பாடு தோற்றுவிக்கப்பட்டது.**

உபாலி நிறுவனம் உபாலி விஜயவர்த்தன எனப்படும் பெரும் தொழிலதிபரால் (இவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர் என்றும் பின்னர் மருமமாக கொலை யானதும் இதில் பிரேமாவின் கையிலிருந்த தாகவும் பேசப்பட்டது) உருவாக்கப்பட்டு இப்போது பெரும் பேரினவாதியும் ஆயுதத் தரகரும், போர்வெறியூட்டும் மனநிலை கொண்டவருமான சிவலி றத்வத்தையின் கையில் சிக்கிச் சீரழிகின்றது. மிக நாசகாரத் தன்மை வாய்ந்த மிக இழிவான நிலையில் செயற்படும் ஜலண்ட், திவயின இத்தீவின் அழிவினையே இலக்காகக் கொண்டவை. இங்குள்ள குறிப்பு என்னவென்றால் ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த ஆங்கில ஏடுகளைவிட சிங்களச் செய்தித்தாள்கள் மிக மோசமான பொய்மைக் கருத்துக்களை விதைப்பதுதான். உதாரணம் சண்டே ரைம்ஸ், டெய்லிமிரரை விட லங்காதீப பச்சை இனவாதம் பேசும். ஞாயிறு சிங்கள வார இதழ்களில் லங்காதீபவே மிகக் கூடுதலான (ஏறத்தாழ 276000 - 2000ஆம் ஆண்டு புள்ளி விபரமொன்றின்படி வாசகரைக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளை எவ்வித நெறிமுறையுமற்று செய்திகளை மிக மோசமாகத் திரிபுபடுத்தும் லக்பிம (ஞாயிறு) $1^1/_2$இலட்சத்திற்கு மேல் விற்பனையாவதாக முன்னைய தகவலொன்று தெரிவிக்கின்றது.

சண்டே ரைம்சின் இக்பால் அத்தாஸ் சிறிலங்கா பாதுகாப்புப் படையின் பாதுகாவலராகக் கருதி எழுதியும், ஜலண்டின் சமிந்திரா பெர்னாண்டோ இராணுவச் செய்திகளை திரிபுபடுத்தி புலிகளை இழிவுபடுத்தும் பணியையும் இடைவிடாது வாரம்தோறும் செய்துவருகின்றனர். எதுவும் உண்மை எழுதப்பட்டாலும் அதுவும் புலிகளை அழிப்பதற்கான விழிப்புக் கருதி எழுதப்பட்டதாகவே இருக்கும். இதனைவிட கணிசமான பெரும் தொகுதி சிங்கள, ஆங்கில எழுத்தாளர் சிங்கள மக்களை மீளமுடியாத ஒரு சூழ்ச்சிப் பொறிக்குள் தள்ளிவிடும் இலக்கில் ஓயாது பேரினவாத நஞ்சை நாளாந்தம் விதைத்து வருகின்றனர். அனைத்து அழிவிற்கும் புலிகளே காரணமென்கின்ற விபரீத மனநிலை வெகு நுணுக்கமாக உருவாக்கப்பட்டுவிட்டது. மனிதமே கொல்லப்பட்ட மகத்தான சிங்கள ஊடகப்பணியிது. மின்னியல் ஊடகங்களின் கதையோ இன்னும் விசித்திரமானது. அரசாங்க ஏவலில் அதிகளவு வலுவோடு இயங்கும் ரூபவாஹினி, 1979 அரசுடமையாக்கப்பட்ட ஜரின் என்பன இயங்கும் விதம் தெரிந்ததே. மகாராஜா நிறுவனத்தின் (சக்தி, சிரச, எம்.ரி.வி) தொலைக்காட்சி, பண்பலை வானொலிகள் ஏ.பி.சி வலைப் பின்னலின் பண்பலை வானொலிகள் (சூரியன், கோல்ட் பண்பலைகள்) தத்தம் நலன் சார்ந்து அடக்கி வாசித்தும் நீட்டி வாசித்தும் செயற்படுகின்றன. சில தவிர்க்க முடியாமல் அவ்வவ் மொழிசார்ந்த மக்கள் நலன்பற்றி பேசினாலும் பல்வேறு அழுத்தங்கள் இவர்கள்மீது உரிமையாளர்களாலும், அரசாலும் பிரயோகிக்கப்பட்ட வண்ணமேயுள்ளன. சுருக்கின் அறிஞர் நோம் சொம்ஸ்கி கூறியது போல் "போரென்றால் அமைதி, சனநாயகமென்றால் அடிமைத்தனம், அறியாமையென்றால் பலம்" என்கிற புது அகராதி இங்கு உருவானமையே ஊடகப்பணி.

மிக அண்மையில் வெளியான "ஊடகம் இரண்டாவது கடவுள்" என்கிற தனது நூலில் ரொனிசுவாட்ஸ் கூறுகின்றார். "கடவுள் எல்லாமறிந்தவர், எங்கும் வியாபித்திருப்பவர், சகல ஆற்றலுமுள்ளவர். ஆன்மாவாக உள்ளவர், பௌதிக உடலற்றவர். உள்ளும் புறமும் இயங்க வல்லவர். எம்மோடு கூடவே எப்போதும் உள்ளவர், மருமமானவர், ஒருபோதும் அவரை எம்மால் முழுமையாக அறியமுடியாது." இவ்வாறு ஊடகங்களின் இணையற்ற வலு விளக்கப்படுகின்றது. சிங்கள தேசத்தில் இந்நூல் ஊடகம், இரண்டாவது சாத்தான் என்றே பொருள்படும். ●

# எங்குபோய் முடியும் இந்தப் பேச்சு?

- பிருத்திரன் -

சமாதானத்திற்கும் யுத்தத்திற்குமான விளிம்பில் மேசைவைத்து மீண்டும் பேசவிருக்கின்றார்கள். நான்கு வருடமாக சர்வதேச ஈடுபாட்டுடன் நடந்த பேச்சுமுயற்சி இப்போது முடிவாக யுத்த நிறுத்தத்தைப் பற்றி பேசப் பின்சென்றுவிட்டது. நடப்பில் இருப்பது யுத்தமா சமாதானமா என்று விளங்கமுடியாத இடத்தில்தான் பேச்சு மேசை வைக்கப்பட்டிருக்கின்றது. ஒன்றில் இந்தப் பேச்சு வழுக்கி யுத்தத்துக்குள் விழவேண்டும் அல்லது பேச்சு வளர்ந்து தீர்வைத்தரவேண்டும். இதில் நடக்கக் கூடியது எது?

கடந்த இரு மாதத்தில் வடக்கு கிழக்கில் கொல்லப்பட்ட மக்கள் 150க்கு மேல். கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி காணாமல் போனவர்கள் யாழ்.குடாநாட்டில் மாத்திரம் 33பேர். இடம்பெயர்ந்த குடும்பங்கள் வடக்கு கிழக்கு முழுவதுமாக 20,000வரை, இவற்றைவிட கண்காணிப்புக்குழு அலுவலகம் மீது குண்டு வீசப்பட்டிருக்கின்றது. மாலை 6.00 மணியுடன் மக்களின் நடமாட்டம் இராணுவத்தினரால் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிராகரிக்கப்படுகின்றது. சுற்றிவளைப்புக்களும் தேடுதல்களும் தொடர்கின்றன. கொழும்பில் தமிழர்கள் பெருவாரியாகக் கைது செய்யப்படுகின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் வழமை மறுப்புப் போராட்டங்கள் தொடர்கின்றன. யாழ்.பல்கலைக் கழகம் செயலிழந்துவிட்டது. இவை அனைத்தும் ஒருங்குசேர்த்துள்ள புறச்சூழலில் யுத்தநிறுத்தம் அமுலில் இருப்பதாக உணர்ந்துகொள்வது எப்படி?

பேச்சு மேசை என்பது இரு தரப்பும் தமது பிடிகளைத் தளர்த்துவதற்கான இடம். தமது பிடிகளை இறுக்குவதற்கான இடமல்ல. சமரசம் என்பதன் உள்ளார்ந்த தத்துவமே இரு தரப்பும் தமது பிடிகளை தளர்த்தி எதிர்நிலையில் இருப்பவருக்கு நம்பிக்கையூட்டுவது என்பதிற்றான் பொருள் கொண்டிருக்கின்றது.

இங்கு நான்குவருடத்தின் முன்பு இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதோடு சமரச முயற்சி தொடங்கப்பட்டது. முற்றுகைக்குள்ளான மக்களின் பாதைகள் திறக்கப்பட்டன. முற்றுகையிடப்பட்ட இராணுவத்திற்கு வழிகள் பிறந்தன. ஆனால் பேச்சு மேசையிலோ நிலைமை வேறு. சமரசத்திற்கான பாதைகள் அடைபட்டு வந்தன.

இதனை பெருவெட்டாகப் பார்த்தால் தீர்வுகுறித்து பேச்சை முன்னெடுக்க முடியாதவாறு இலங்கையின் அரசியல் அதிகாரம் ஜனாதிபதி என்றும் அமைச்சரவை என்றும் இரண்டுபட்டுக் கிடந்தது. அப்போதிருந்த ரணில் அரசாங்கம் தமக்கான இந்த நெருக்கடிகளைக் காரணம் காட்டி இத்தகைய பேச்சை ஒத்திப் போடுமாறு விடுதலைப்புலிகளை வேண்டிக் கொண்டது. மீள்கட்டுமானத்திற்காக உருவாகிய 'சிரான்' அமைப்பை பின்னர் அரசியல் யாப்பிற்கு உட்படவில்லையெனக் கூறி செயலிழக்கவைத்தது அரசு. இதை யடுத்து எழுந்த சூழலின் நிமித்தமாகப் பேச்சு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை நோக்கிப் பின்தள்ளப்பட்டது. இ.த.க.சபையை உருவாக்குவது பற்றிப் பேச வாய்ப்பான சூழலை உருவாக்க அரசு மனம்கொள்ளவில்லை. அப்போது உடனடியாக எழுந்த சுனாமி அனர்த்தத்தைக் காரணம் காட்டி சுனாமிப் பொதுக் கட்டமைப்பை நிறுவுவது குறித்துப் பேச்சைப் பின்தள்ளியது. பொதுக்கட்டமைப்பை நிறுவுவது தொடர்பில் விடுதலைப் புலிகளின் பிரேரணைகள் மறுதலிக்கப் பட்டபோது, நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்ட பிரேரணையைப் புலிகள் ஏற்றுக்கொண்டனர். அரசுத் தரப்போ அதிலும் திருத்தம் வேண்டும் என்று வாதாடியது. ஆயினும் திருத்தங்களுடன் அது புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கைச்சாத்தாகியது. ஆயினும், பொதுக் கட்டமைப்பை நடைமுறைக்கு வரவிடாது அரச பொறிமுறைகளுக்கூடாகத் தடுத்து நிறுத்தியது அரசாங்கம். இதன்மூலம் நிலைமைகளை மேலும் பின்தள்ளியது அரசதரப்பு.

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இராணுவ வன்முறைகள் தொடங்கின. கொலைகள் நடந்தன. புங்குடுதீவில் இளம்பெண் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள். சாவகச்சேரியில் சிறுவன் இரவுநேரம் வீட்டினுள் புகுந்த இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டான். திருமலையில் ஐந்து மாணவர்கள் இராணுவத்தினால் சுடப்பட்டனர். பதட்ட சூழலைத் தணிவிக்கும் நோக்கோடு கண்காணிப்புக்குழுவிடம் அமைதிப் பேரணி செய்த யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் மீது வீதியில் வைத்து இராணுவம் நடத்திய ஆயுதத் தாக்குதலில் துணைவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் காயமுற்றனர். நிலைமைகள் இப்படியே தொடர்ந்தன. பிரகடனப்படுத்தப்படாத ஊரடங்கை அமுற்படுத்த இராணுவம் வன்முறைகளைக் கையாண்டது. மக்கள் இடம்பெயர்ந்தனர். இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இளைஞர்கள் இராணுவக் காவலரண்கள் மீதும் வாகனங்கள் மீதும் குண்டுகளை எறிந்தனர். இளைஞர்களின் இத்தகைய பதிற்செயற்பாடு புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய சகோதரியைச் சடலமாகக் கிணற்றிலிருந்து மீட்கும்போதும் வீடுபுகுந்து சகோதரனைச் சுட்டுக்கொல்லும்போதும், குழந்தைகளும் வயோதிபர்களும் கூட தெருவில் சுட்டு வீசப்படும்போதும், அதன் உறவுச் சூழலில் உள்ள இளைஞர்கள் பதிலுக்கு ஏதாவது செயலில் இறங்கத் தூண்டப்படுவது நிச்சயம் புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

யுத்தமா? சமாதானமா? நிலவுகின்றது என்கின்ற கேள்விக்கான சூழலினை நோக்கி நிலைமைகள் இவ்வாறுதான் பின்தள்ளப்பட்டன. பேச்சு மேசையில் தனது பிடிகளைத் தளர்த்தத் தயாரில்லாத அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட சூழலிது. நான்கு வருடத்தின் பின்னும் யுத்தநிறுத்தம் பற்றியே பேசவேண்டியதாய் ஆயிற்று.

வலுச்சமநிலை மீதுதான் பிடிகள் தளர்வது சாத்தியம். பிடிகள் தளர்வதிற்றான் சமரசம் கட்டியெழுப்பப்படுவது சாத்தியம். ஆக்கிரமிப்பு மனோபாவம் ஒருபோதும் பிடிகளைத் தளர்த்த இடம் தருவதில்லை. அது மேசையில் வலுச் சமநிலையை மாற்றியமைக்கவே வழியைத் தேடுகிறது.

இழந்துபோன வலுச்சமநிலையை இட்டுநிரப்பி வலுச்சமநிலையில் மேலாதிக்கம் செலுத்த ஆக்கிரமிப்பு அரசு உலக நாடுகளுடனான உறவை நாடுகின்றது. சர்வதேச அமைப்புக்களின் நட்பினைத் தேடுகின்றது. இதன்மூலம் வலுச்சமநிலை மேலாதிக்கத்திற்கான இடைவெளி இட்டு நிரப்பப்படுகின்றது. சமரசம் பின்தள்ளப் படுகின்றது.

போராடும் தரப்பு அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டு சுற்றிவளைக்கப் படும்போது யுத்தம் பிறக்கின்றது. ஒன்று, ஆக்கிரமிக்கும் தரப்பு மறுதரப்பினைத் தோற்கடிப்பதில் நம்பிக்கையுற்று உற்சாகம் கொள்கின்றது. மற்றது, போராடும் தரப்பிற்கு வலுச்சமநிலையை இழக்காதிருக்க வேறு மார்க்கங்கள் அற்றுப் போகின்றது. இத்தகைய சூழலிற்றான் யுத்தம் தவிர்க்கவியலாததாகி விடுகின்றது.

ஒடுக்கும் தரப்பிற்கும், போராடும் தரப்பிற்கும் இடையிலான சமரசம் பற்றிய உலகளாவிய வரலாற்றறிவு இதைத்தான் சொல்கின்றது. இப்போது வேண்டியதும் இந்த வரலாற்றறிவுதான்.

இதுதான் இலங்கையரசு இராஜிக உறவுகொண்டிருக்கும் சர்வதேச நாடுகள், அமைப்புக்கள் புரிந்துகொள்ளவேண்டிய மிக முக்கியமான அம்சம். இலங்கையரசு சமாதானத்திற்கு சிங்கள மக்களைத் தயார்ப்படுத்தவில்லை. சர்வதேச அரங்கில் புலிகளைச் சுற்றிவளைப்பதையும், புலிகளுக்குப் பொறி வைத்ததையும் பற்றியே தம்பட்டம் அடித்தது. இந்தப் பின்னணியின் துணையோடு பார்த்தால் பேச்சுமேசை விளிம்பு நிலையில் வைக்கப்பட்டிருப்பதை விளங்கமுடியும். இது குறித்து சனாதிபதி ராஜபக்ஷ தமிழ் நாளேடொன்றிற்குப் பேட்டியளித்தார். "இதுவரை நடந்த சமாதானத்தை விட்டுவிடுவோம். இது புதிய அரசாங்கம் எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவோம் வாருங்கள்" என்று.

இந்தச் சொல்லாடல் சர்வதேச சமூகத்திற்குப் புதிதாக இருக்கலாம், ஆனால், தமிழர்களுக்கு அப்படியல்ல. பண்டாரநாயக்காவுடன் செல்வநாயகம் செய்துகொண்ட சமஷ்டித் தீர்வு உடன்பாட்டை பின்வந்த டட்லியின் அரசாங்கம் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பிய போதும் பண்டா - செல்வா உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. இது புதிய அரசாங்கம் எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவோம் என்றனர். டட்லி - செல்வா ஒப்பந்தம் உருவாகியது.

பின்னர் ஜே.ஆர் ஆட்சிக்கு வந்தபோது தீர்வுகாண விரும்புவதாகச் சொன்ன ஜே.ஆர் தனது கட்சியினால் செய்துகொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார். எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவோம் வாருங்கள் என்றார் அவர். மாவட்ட அபிவிருத்திசபைத் தீர்வை முன்மொழிந்தார்.

பிரேமதாசா ஆட்சிக்கு வந்ததும் தீர்வை அங்கு விடப்போவதாகக் கூறிய அவர் மாகாண சபையைப் புறம்தள்ளி விட்டு எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவோம் என்றார். இறுதியில் சர்வகட்சி மாநாடு என்று கூட்டி ஆனது ஒன்றும் இல்லை. பின்னர் சந்திரிகா இப்படிச் சமஷ்டியிலிருந்து இறங்கு முகமாகச் சமரசத்தைப் பின்தள்ளிய கதை எங்கள் வீட்டு முற்றத்தில் பாட்டி சொல்லும் கதையாகப் பரிட்சயம் ஆகிவிட்டது.

இப்போது "இது புதிய அரசாங்கம் எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவோம் வாருங்கள்" என்றால் இந்தச் சொல்லாடலின் அர்த்தம் தமிழரின் வரலாற்று அறிவிற்கு நன்கு விளங்கும். ●


பண்டா


டட்லி


ஜே.ஆர்


பிரேமதாசா


சந்திரிகா


ராஜபக்ஷ

வலுச்சமநிலை மீதுதான் பிடிகள் தளர்வது சாத்தியம். பிடிகள் தளர்வதிற்றான் சமரசம் கட்டியெழுப்பப்படுவது சாத்தியம். ஆக்கிரமிப்பு மனோபாவம் ஒருபோதும் பிடிகளைத் தளர்த்த இடம் தருவதில்லை. அது மேசையில் வலுச்சமநிலையை மாற்றியமைக்கவே வழியைத் தேடுகிறது.

# நாணற்புற் சிங்கள இராஜதந்திரம்: வெளிநாட்டவர்களின் காலைப் பிடிக்கும் தமிழர்களின் குடும்பியைப் பிடிக்கும்

- சாரணன் -

"சாத்தியக் கூறுகளை கையாளும் கலைக்கு" பெயர்தான் இராஜதந்திரம். யதார்த்தம் பல சாத்தியக் கூறுகளை முன்வைக் கின்றது. அவற்றுள் பொருத்தமான சாத்தியக்கூறைத் தெரிவுசெய்பவன் வரலாற்றை முன்னேற்றுகின்றான். குறித்த சமூகத்தின் குறித்த சூழ லின் யதார்த்தமும் அச் சமூகத்தின் வரலாற்று முன்னுதாரணங்களும் தீர்மானங்களை எடுக்க வழி சமைக் கின்றன.

இத்தகைய நிலையில் சிங்கள ஆட்சியாளர்களின் தீர் மானங்கள் இலங்கைத் தீவிற்குரிய வரலாற்றுச் சூழலிலிருந்தும் இதற்கு முன்பு சிங்களத் தலைவர்கள் எடுத்துவந்த தீர்மான மரபுகளி லிருந்தும் உதித்தெழ முடிகின்றன. இந்தவகையில் அரசியற் தீர்மானங் களுக்கெனக் குறித்த பண்பாட்டுச் சாய்வுகள் உள்ளன.

இலங்கை இந்துசமுத் திரத்தின் மத்தியிலுள்ள கவர்ச்சிகர மான ஒரு சிறிய தீவு. ஆதலால் அது எப்போதும் அந்நியத் தாக்கு தல்களுக்கு உள்ளாகக்கூடிய பலவீனமான அமைவிடத்தைக் கொண்டுள்ளது. அத்தகைய பல வீனத்தின் பின்னணியில் அது எப் போதும் ஒத்தோடித் தன்னைத் தக்கவைக்கும் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளது. அதாவது அந்நியர் பொறுத்து நாணற்புல் போல் வளை ந்து நெழியும் அரசியற் கலாச்சார த்தை சிங்கள இராஜதந்திரம் கொண்டுள்ளது.

கி.மு.மூன்றாம் நூற்றாண் டில் இந்திய சாம்பிராச்சியத்தின் அசோகச் சக்கரவர்த்தி தனது ஆதிக்கத்தைப் பரப்புவதற்கான "தூதை" மதத்தின் பெயரால் இலங் கைக்கு அனுப்பிவைத்தார். அநுராத புரத்து மன்னனாயிருந்த திஸ்ஸ சக்கரவர்த்தி "தூதுக்கு" பணிந்து மதம்மாறி ஆதிக்கத்தை ஏற்று 'பரிசுப்பொருள்' என்றதன் பெயரில் அசோகச் சக்கரவர்த்திக்கு திறை கொடுத்தனுப்பினான். அசோகச் சக்கரவர்த்தியின் பெயரால் மீள் மூடிசூடப்பட்டு பட்டாபிசேக நாமமும் சூடப்பட்டது. அதன்படி தேவநம்பிய திஸ்ஸ எனப் பெயர் பெற்றான். பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்ட தேவநம்பிய திஸ்ஸ மன் னன் பௌத்த மதத்தை வளர்ப்பதை தர்மமாக ஏற்றுக்கொண்ட அசோகச் சக்கரவர்த்திக்கு அனுப்பிய பரிசுப் பொருட்களின் தொகுதியில் "இளமை யின் இதழ்விரிக்கும் அழகிய நங்கை யர் நால்வரும்" ஒரு தொகுதியாகும். இவ்வரிகள் மகாவம்சத்தில் உள் ளவை. இப் பரிசுப்பொருள் விவ காரம் வரலாற்றில் உறுதிப்படுத்தப் பட்டுள்ள ஒரு தகவலாகும். இப்படி ஆற்றோர நாணற் புல்லாய் சிங்கள இராஜதந்திரம் வடிவம் பெறத் தொடங்கியது. இந்தவகையில் அந்நியருக்கு அடிபணியும் ஒரு மெருகான வடிவத்திற்குத் தேவநம்பிய திஸ்ஸ முதற்பெரும் முன்னுதாரண மானான். இப்பாதை தொடர்ந்து நீண்டு நெடுப்பதாயிற்று.

ஐரோப்பியர் வருகையின் போது மன்னன் தர்மபாலன் போர்த் துக்கேயருக்கு அடிபணிந்து தன்னை மதம் மாற்றி டொன் யுவான் தர்ம பால என முடிநாமம் சூட்டிக் கொண் டான். இப்படியாக தனது இராச்சிய த்தை அந்நியரிடம் தாரைவார்க்கத் தொடங்கினான்.

அரசியல் ஆதிக்கத்தின் பொருட்டு தேவநம்பிய, டொன் யுவான் என்ற மதமாற்ற பெயர்மாற்ற வரிசையில் பிரித்தானிய காலத்தில் சிங்களத் தலைவர்களின் பட்டியல் கள் நீண்டன. சொலமன் வெஸ்ட் றிச்வே டயஸ் பண்டார நாயக்காக் கள், டொன் ஸ்ரீபன் சேனநாயக்காக் கள், பீரிசுகள், கொறியாக்கள், ஜோன் கொத்தலாவலக்கள் என நீண்ட பாரம்பரியம் உண்டு.

டி.எஸ்.சேனநாயக்கா ஆரம் பத்தில் பிரித்தானியருக்கு எதிரான தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவராய் விளங்கிய போதிலும் பின்பு பிரித் தானியரின் அரவணைப்புக்குள் சிக்குண்டு இலகுவில் சோரம் போய் விட்டார். அப்படி பிரித்தானியருடன் கூட்டுச்சேர்ந்து பிரித்தானியத் தளங் களை அமைத்ததுடன் பனிப்போர் காலப் பிரித்தானிய திட்டத்தின் ஒரு பகுதியாகவும் செயற்பட்டார். இதற்கு கைமாறாக தமிழர்களுக்கு எதிராக பிரித்தானியரை பயன் படுத்தினார். தன்னை முழு நீள மேற்குலக விசுவாசியாய் பிரகடனப் படுத்தியிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த் தனா பலமான இந்திய எதிர்ப்பாள ராகவும் செயற்பட்டார். ஆனால் இந்தியாவின் கைகள் இலங்கை அரசியலில் ஓங்க முற்பட்டபோது இந்தியாவின் கரங்களை அணைத்து, அக் கரங்களினால் தமிழரைக் கொல்லவும் வல்ல அரசியல் நிலைப் பாட்டைப் பின்பற்றினார். அதில் அவர் இந்தியாவை எதிர்த்துச் செயற்படும் கோட்பாட்டைக் கை விட்டு இந்தியாவை அணைத்துக் கெடுக்கும் கோட்பாட்டுக்குள் போனார். இப்படி எதிர்த்துப் பார்ப்பார்கள் அல் லது அணைத்துக் கெடுப்பார்கள்.

"போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று டச்சுத் தளபதிக்கு மன்னன் விமலதர்மசூரியன் அனுப்பிய விதி விலக்கான அறைகூவல் வரலாற் றில் உண்டேயாயினும் வரலாற்று விதியின்படி தம்மால் எதிர்நிற்க முடியாதென அவர்கள் கருதும் ஒவ் வொரு கட்டத்திலும் அந்நியருக்கு அடிபணிந்து சென்ற வரலாற்றினைத் தான் சிங்கள ஆட்சியாளர்கள் முன் வைத்துள்ளனர்.



இந்தவகையில் அணைத்து தம்மை தக்கவைத்தல், அல்லது அணைத் துக் கெடுத்தல் என்பது சிங்கள இராஜதந்திரத்தின் ஒரு பண்பாட்டு இயல்பாயுள்ளது.

சிங்களத் தலைவர்கள் எல்லாவற்றையும் அரசியல் அதிகாரத் திற்கான வழிகளாகத்தான் பார்க் கின்றார்களே தவிர எதனையும் கொள்கைகள் கோட்பாடுகள் வகைப் பட்டலல்ல. இந்தியாவை ஜே.ஆர் திட்டமிட்டு அணைத்து திட்டமிட்டே காலைவாரினர். இத்தகைய வரிசை யில் மிகப் பிந்திய உதாரணமாய் இருப்பவர் தற்போதைய சனாதிபதி திரு.ராஜபக்ச ஆவார். அந்நிய சக்தி களுடன் ஒட்டி உறவாடுவதில் சிங்களத் தலைவர்களுக்கு இடது, வலது என்ற வேறுபாடில்லை. இடதுசாரிகளோ அன்றி வலதுசாரி களோ எவராயினும் அந்நிய சக்தி களிடம் இலகுவாக சோரம்போகும் பண்பாடு சிங்கள இராஜதந்திரத்திடம் உண்டு. தம்மைத் தீவிர இடதுசாரி களாகக் காட்டும் ஜே.வி.பியினர் எத்தகைய அந்நிய எதிர்ப்புக்களை பிரகடனப்படுத்தி வந்துள்ளபோதிலும் நடைமுறையில் இவர்கள் அத்த கைய அந்நிய சக்திகளின் கால் களை இறுகப் பற்றியுள்ளார்கள். சிங்கள அரசியற் தலைவர்கள் எவரும் தம் கதிரையைத் தவிர வேறெதிலும் விசுவாசமில்லாதவர் கள். அவர்களுக்கு ஜனநாயகம், சோஷலிசம், மனித உரிமை, இன ஐக்கியம் போன்ற எவற்றிலும் அக்கறையில்லை. இவற்றில் எதைப் பலியிட்டேனும் கதிரையைப் பெற் றால் போதும் என்பதுதான் இவர் களது முழுநீளச் சித்தாந்தம். இந்த வரிசையில் மேலும் ஒரு முக்கிய உதாரணமாகவே மகிந்த ராஜபக்ஷ வும் ஜே.வி.பியினரும் உள்ளனர்.

கட்சி தாவல் தடைச் சட்டத்தை உலகிற்கு அறிமுகப் படுத்திய நாடு இலங்கை. ஆனால் அச்சட்டத்தை ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திற்கு முற்றிலும் சாதக மாக வடிவமைத்துள்ளமையானது முற்றிலும் ஜனநாயக விரோதத் தன்மை வாய்ந்ததாகும். அதாவது ஆளும் கட்சியிலுள்ளவர் எதிர்க் கட்சிக்குமாற வகையில்லை. ஆனால் எதிர்க் கட்சியிலுள்ளவர் ஆளும் கட்சிக்கு மாறலாம். அதாவது ஒருவர் கட்சி மாறுமிடத்து நாடாளுமன்றத் தின் பெரும்பான்மையால் அவரின் ஆசனத்தை காலியாகாது தடுக்க லாம். அதன்படி எப்போதும் ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பெரும் பான்மைப் பலம் இருக்கமுடியும் என்பதால் எதிர்க் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு ஒருவர் கட்சி தாவுவது சாத்தியம். இப்போது பதவி ஆசையைக்காட்டி ராஜபக்ஷ அரசாங்கம் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் களைத் தம்பக்கம் மாற்றி வருவ தென்பது "கட்சிக்கு" வாக்கு என்ற ஜனநாயகக் கோட்பாட்டை மீறும் செயலாகும். இங்கு கொள்கைகளை விடவும் அவர்களுக்கு கதிரைகளே முக்கியம். பதவிக்கு வரவல்ல பலம் பொருந்திய மாற்றுக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இப்படி சனாதிபதியால் செயற்பட முடியுமென்றால் தமிழ்பேசும் மக்கள் பொறுத்து அது எப்படி நடக்கமுடியும் என்பதை நாம் இலகுவாகவே ஊகிக்க முடியும்.

**தற்போது காணப்படும் உள்நாட்டு அரசியற் பொருளாதார நெருக்கடியினதும், சர்வதேச அரசியல் அழுத்தத்தினதும் பின் னணியில் தப்பிப் பிழைக்கும் தந்திரமாக வும், காலம் கனியவைக்கும் உபாயமாக வுமே ராஜபக்ஷ அரசாங்கம் "சமாதானம்", போர்நிறுத்தம் என்பன குறித்து பேசுகின்றதே தவிர தீர்வைப்பற்றிய சிந்தனையிலிருந் தல்ல.**

ராஜபக்ஷ - ஜே.வி.பி அணியினர் பதவிக்காகப் பேசிய தீவிர இனவாதமானது சிங்கள மக்களை முற்றிலும் இனவாத மயப்படுத்திவிட்டது. தமிழ்மக்களுக் கான எந்தொரு நியாயத்தையும் சிங்கள மக்கள்முன் கூறமுடியாத அளவிற்கு அவர்கள் விதண்டவாத மான எதிர்வாதங்களை சிங்கள மக் கள் மத்தியில் ஸ்தாபித்துவிட்டனர். ஆதலால் தமிழ்பேசும் மக்களுக்கான எந்தொரு தீர்வையும் முன்வைக்க முடியாத களநிலை யதார்த்த முள்ளது. தற்போதைய உள்நாட்டு, சர்வதேச சூழலின் நிமித்தம் யுத்தம் புரியமுடியாத ஒரு யதார்த்தம் இருப் பதால் அதன் பொருட்டு தந்திரோ பாய ரீதியில் ஒரு பொய்ச் சமாதா னம் பற்றிப் பேசுகிறார்களே தவிர அவர்களின் மனங்களிலும் செயல் களிலும், இலட்சியங்களிலும் சமா தானம் இல்லை.

சுனாமி கட்டமைப்பின் பொருட்டு சிங்கள அரசாங்கம் விடு தலைப் புலிகளுடன் செய்துகொண்ட உடன்பாட்டை ஒருதலைப்பட்சமாக ராஜபக்ஷ கிழித்தெறிந்துவிட்டு பழையவற்றைப் பேசவேண்டாம் புதியவற்றைக் கதைப்போம் என்கிறார். எந்தொரு ஒப்பந்தமும் கையெழுத் திட்ட மறுகணத்திலிருந்தே பழையது தான். இப்படியாக ராஜபக்ஷ கையெழுத்திடக் கூடிய எந்தவொரு ஒப்பந்தமும் மறுகணம் பழையதாகி விடும். எனவே எந்தவொரு ஒப்பந் தத்தையும் பழையதென்று கூறி ராஜபக்ஷவால் கிழிதெறிய முடியும். அதேவேளை ஒப்பந்தம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயானதே தவிர இரண்டு நபர்களுக்கிடையேயான தல்ல. இந்தவகையில் எரிந்து கொண்டிருக்கும் சுனாமிப் பிரச்சினைக் கான உடன்பாட்டை பழையதென்று பொறுப்பற்ற வார்த்தைகளைக் கூறும் ஒரு தலைவனிடமிருந்து தமிழ்மக்கள் தமக்கு நியாயமான தீர்வெதனையும் எதிர்பார்க்க முடி யாது.

தற்போது காணப்படும் உள்நாட்டு அரசியற் பொருளாதார நெருக்கடியினதும், சர்வதேச அரசி யல் அழுத்தத்தினதும் பின்னணியில் தப்பிப் பிழைக்கும் தந்திரமாகவும், காலம் கனியவைக்கும் உபாயமாக வுமே ராஜபக்ஷ அரசாங்கம் "சமா தானம்", போர்நிறுத்தம் என்பன குறி த்து பேசுகின்றதே தவிர தீர்வைப் பற்றிய சிந்தனையிலிருந்தல்ல.

தமிழ்மக்களின் ஜனநாயக பூர்வ உரிமைக்கான போராட்டத்தை "பயங்கரவாதம்" என முத்திரை குத்தி புலிகளுக்கு எதிராகச் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை சிங்கள அரசு முடுக்கிவருகின்றது. ஆதலால் இவ்விடத்தில் புலிகள்மீது தமது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் சர்வ தேச சமூகத்திற்கு மேற்படி ஏமாற்று கரமான சிங்களத் தலைவர்களிட மிருந்து தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு பெரிதும் உண்டு. உண்மையில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின் பெயரால் புலிகள் சமரசத்திற்குத் தயாராகவில்லை மாறாக சர்வதேச சமூகத்திற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கும் முகமாகவே புலிகள் சமரசத்திற்குச் செவிசாய்த் துள்ளனர்.

பலவான் முன் வளைந்து கொடுப்பதும், பலவீனமானவன் முன் கொடுங்கோல் புரிவதும் சிங்கள இராஜதந்திரத்தின் சிறப்பியல்பாகும். உலக வரலாற்றில், உள்நாட்டு மக்கள் பொறுத்து கொடுங்கோல் ஆட்சிக்கு சிங்கள மன்னர்கள் பெயர் பெற்றவர்கள். அதேபோல் பலமான அந்நிய சக்திகளுக்கு வளைந்து கொடுத்து காலை வாருவதிலும் அவர்கள் பெயர் பெற்றவர்கள். இத்த கைய வரலாற்றுப் பாடத்தில் தமிழ் பேசும் மக்கள் விழிப்பாகவே உள்ள னர். ■

# வார்த்தைகளின் மறுபக்கம்



விடுதலைப் புலிகளுடனான போரிலே தங்கள் உச்சவலு பிரயோகிக்கப்பட்டாகிவிட்டது என்பது சிங்களப் படைத்தலைவர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் புதிதாகப் பொறுப்பேற்ற எந்தத் தலைவரும் தோல்வியையோ தங்கள் இயலாமையையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கிழக்கு மாகாணத்தின் வெலிக்கந்தைப் பகுதியில் தலைமையகம் அமைத்து படையமர்ந்திருக்கும் 23வது டிவிசனின் புதிய தலைமை அதிகாரி தயாரத்தனாயக்க இந்த வருடத்தின் முற்பகுதியில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதை அறிக்கை என்பதைவிட சூழுரை என்பதே சாலப்பொருத்தம். தனது பொறுப்பிலுள்ள பகுதியில் (Tactical Area Of Responsibility) இருக்கும் சுமார் 1500 வரையான புலிகளை இலகுவாகப் படையினர் தோற்கடித்து விடுவார்கள் என்பதுதான் அவரின் முக்கிய செய்தி. 23வது டிவிசன் என்பது மட்டக்களப்பு பட்டணப் பகுதியை உள்ளடக்கி பொலநறுவை மாவட்ட எல்லைவரையும் அதேபோல வாகரைப் பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ள தரைப்பகுதியில் நடவடிக்கைகளைச் செய்வதற்காக நிறுத்தப்பட்டுள்ள படைப்பிரிவு என்பதையும் சமாதான நடைமுறைகளை அபாயகரமான விளிம்புகளுக்குக் கொண்டுசென்ற 'ஒட்டுப்படை'களின் உல்லாசபுரி இந்தப் பகுதியினுள்தான் அமைந்திருப்பதையும் இங்கே கவனிக்கவேண்டும்.

அவர்களுக்குப் பிடித்தமானதாக செய்திகளைத் தருகின்ற ஊடகங்களின் பங்களிப்பும் படையினரிடையே மகிழ்ச்சி அலையைப் பரவச் செய்வதில் பெரும்பங்கு வகித்தன. கருணாவும் அவரின் சார்பான சிலரும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அஞ்சி திரிபான செய்திகளுடனான பிரதேசவாதத்ததை முன்வைத்த போது இனிமேல் கிழக்கில் புலிகளின் அச்சுறுத்தல் இருக்காது அப்பாடா என்று சிங்களப் படைத்தரப்பு உள்ளூரக் குளிர்ந்துபோனதும் மெய்யே. ஆனால் விடுதலைப் புலிகளின் மத்திய கட்டுமாணம் மிகவும் நிதானமாகவும் உறுதியுடனும் நடவடிக்கை மேற்கொண்டு கருணாவை அங்கிருந்து ஓடவேண்டிய நிலைக்கு உள்ளாக்கியபோது சிங்களத்தரப்பு சுதாகரித்துக் கொண்டிருக்க வேண்டும். மாறாக, கருணாவின் பெயரை வைத்து பிரதேசவாதத்தை எப்படியாவது நிலைப்படுத்திவிடலாம் என்ற கருத்தியலின் அடிப்படையிலேயே கிழக்கு நிலவரத்தை சிறிலங்கா அரசும் அதன் படைநோக்கர்களும் கையாண்டனர்.

கிழக்கிலே புலிகள் வலுவிழந்து நிற்கிறார்கள் என்ற செய்தியையே திரும்பத் திரும்ப தங்கள் படையதிகாரிகளின் வாயாலும் சார்பூடகங்களின் வழியாகவும் ரசித்துக்கொண்டிருந்த படையினரிடையே கிழக்கின் அண்மைக்கால மாற்றங்கள் கேள்விகளை எழுப்பத் தொடங்கிவிட்டன. அண்மைக்காலமாக நடைபெற்று வரும் பெருமெடுப்பிலான எழுச்சி நிகழ்வுகளும் அதிலே மக்களின் பிரதிநிதிகளால் பேசப்படும் விடயங்களும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் பயிற்சிகள் பற்றிய செய்திகளும் புதிதாகத் தோன்றியிருக்கும் மக்கள்படையின் செயற்பாடுகளும் அதனால் தங்கள் உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சமும் அரச படைகளிடையே பாரிய ஏமாற்றத்தையும் கிலேசத்தையும் ஏற்படுத்தவே செய்தன. இந்த நிலையில் அவர்களை மேலும் ஒரு போருக்காகத் தயார்பட்ட மனநிலைக்குக் கொண்டுவருவதற்காக ஏதாவது செய்யவேண்டிய நிலையில் புதிதாகப் பொறுப்பேற்ற 23வது டிவிசனின் கட்டளைத் தளபதி இந்தத் தேற்றுதல் அறிக்கையை விடுத்திருக்கிறார்.

பீரங்கி கொண்டுவருகிறார்கள் என்பது சுங்கச் சாவடியினூடாக யானையைக் கொண்டுவருவதற்கு ஒப்பானது" என்று கடற்படையின் சார்பில் முன்பு கருத்து வெளியிடப்பட்டமையானது இதில் இருக்கும் சிக்கல்களுக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

இரண்டாவது, புலிகளின் நகர்வுகளில் ஆட்தொகை என்ற காரணியின் பங்கு பற்றிய கணிப்பீடு. புலிகளின் தாக்குதல்கள் தந்திரோபாயத்தையும் தரைதோற்றம் முதலான காரணிகளையும் மையப்படுத்தியே அமைந்திருப்பவை என்பது இந்தக் கால்நூற்றாண்டுகாலப் போரையும் அதிலே படையினர் எதிர்கொண்ட நிலைமைகளையும் திரும்பிப் பார்த்தாலே தெரிந்திருக்கும். ஆட்தொகையையும் படைக்கலன்களையும் முன்னிலைப்படுத்தியதாக இருந்திருந்தால் இந்தியப் படைகளுக்கு எதிராக நின்றுபிடிப்பதோ, இதுவரை காலமும் சிறிலங்காப் படைகளை எதிர்த்து வளர்ச்சிப் படிகளிலேயே ஏறிக்கொண்டிருப்பதோ விடுதலைப்புலிகளுக்குச் சாத்தியமாகியிருக்குமா?




படைத்துறைப் பேச்சாளராக இருந்து வெளிநாடு சென்று திரும்பிய கையோடு மகிந்த ராஜபக்ஷவின் போருக்கான தயார்படுத்தல் என்று கொள்ளக்கூடிய படை அதிகார வரிசையின் மாற்றங்களின் ஒரு பகுதியாக 23வது டிவிசனின் கட்டளையதிகாரியாகப் பொறுப்பேற்ற பின் இதைச் சொல்லியிருக்கிறார் பிரிகேடியர் தயா ரத்னாயக்க. இற்றைக்கு சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு (சரியாகச் சொன்னால் 19வருடங்கள்) தமிழர் தாயகப் பகுதிக்கு படை கொண்டுவந்த இந்திய தென்மண்டலப் படைத் தளபதியின் "எழுநூறு சாறன்கட்டிய இளைஞர்கள்" என்ற பிரபல கூற்றையும் பின்பு அந்த வசனத்திற்காக அவர் வாழ்நாள் முழுவதும் வெட்கப்பட நேர்ந்ததையும் இது நினைவூட்டினாலும், நாங்கள் வேறு ஒரு கோணத்தில் இதைப் பார்ப்பதே இன்றைய நிலைமைக்குப் பொருந்தும்.

2004இன் முற்பகுதியில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காப் படைகளின் மனதில் கொஞ்சம் நிம்மதியை வரவைத்தது என்னவோ உண்மைதான். ஊடகங்களும், குறிப்பாக சிங்களச் சிப்பாய்கள் விரும்பிப் படிப்பதற்கென்றே

அடித்தளமற்றதும் ஒருமித்த தாயகத்திற்கான பாரிய தியாகத்தின்முன் எடுபடாமற் போனதுமான பிரதேசவாதம் ஆவியாகி, அதை நிலைநிறுத்துவதற்கான ஒட்டுப்படைகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளும் புண்ணியமற்ற படுகொலைகள் என்றே நோக்கப்பட்டு கருணாவின் பெயரும் இதற்கு முந்திய ஒட்டுப்படையாட்களின் பட்டியலில் இயல்பாகச் சேர்ந்துகொண்டதால் பேரினவாதத்தின் பிரித்தாளும் தந்திரோபாயம் மீண்டுமொரு தடைவை தோல்விகண்டது. மக்களை விழிப்புடனும் விபரமறிந்தவர்களாகவும் வைத்திருக்கப் பாடுபட்ட அறிவியல் மற்றும் சமூக முன்னோடிகளை ஒட்டுப்படையின் சாக்கில் சுட்டுத் தள்ளியபோதும், பேரணிகள் பொதுக் கூட்டங்கள் கருத்துரைகள் கதவடைப்புக்கள் புறக்கணிப்புக்கள் என்பன மக்களின் உறுதியில் மாற்றமில்லை என்பதை அடித்துக்காட்டி நின்றன. இந்நிலையில்தான் கிழக்கு மாகாணத்தின் தந்திரோபாயச் செயற்பாடு சார்பான கொள்கை மாற்றமொன்றை ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குப் புதிய ஆட்சியாளர் ராஜபக்ஷ தள்ளப்பட்டார். பிரதேசவாதத்தினூடாக மக்களை அரவணைத்து அரச சார்பாளர்களாக மாற்றுதல் என்ற கனவுலகிலிருந்து விடுபட்டு, அச்சுறுத்திப் பணியவைத்தல் என்னும் சிங்கள யதார்த்த வாதத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய தளபதியாக பிரிகேடியர் தயா ரத்னாயக்க அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த நிலையில், கிழக்கிலே புலிகள் வலுவிழந்து நிற்கிறார்கள் என்ற செய்தியையே திரும்பத்திரும்ப தங்கள் படையதிகாரிகளின் வாயாலும் சார்பூடகங்களின் வழியாகவும் ரசித்துக்கொண்டிருந்த படையினரிடையே கிழக்கின் அண்மைக்கால மாற்றங்கள் கேள்விகளை எழுப்பத் தொடங்கிவிட்டன. அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் பெருமெடுப்பிலான எழுச்சி நிகழ்வுகளும் அதிலே மக்களின் பிரதிநிதிகளால் பேசப்படும் விடயங்களும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் பயிற்சிகள் பற்றிய செய்திகளும் புதிதாகத் தோன்றியிருக்கும் மக்கள் படையின் செயற்பாடுகளும் அதனால் தங்கள் உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சமும் அரச படைகளிடையே பாரிய ஏமாற்றத்தையும் கிலேசத்தையும் ஏற்படுத்தவே செய்தன.

அந்த அறிக்கையின்மூலம் அன்னாருக்கு இரண்டு விடயங்களில் தெளிவில்லை என்பது புரியவருகிறது. ஒன்று புலிகளின் ஆட்பலம் பற்றிய தகவல். புலிகளின் ஆட்தொகை பற்றி உலகப் புகழ்பெற்ற புலனாய்வு நிறுவனங்களே ஊகங்களைத்தான் வைத்திருக்கின்றன. இன்றும் சில தகவற் தளங்களில் சிறிலங்காப் படைகளின் வகைதொகை பற்றிய விபரங்கள் விலாவாரியாக இருந்தாலும் புலிகளின் படைபலம் பற்றி வரும்போது பெருமட்டான கணிப்பீடுகளையே காணமுடிகிறது. அவற்றின் கீழே "இந்தத் தொகை மாறுபடலாம்" என்ற குறிப்புக்களும் மறக்காமல் போடப்பட்டிருக்கின்றன. உண்மையில் புலிகளின் ஒட்டுமொத்த

**- இராசையா -**

ஆட்பலம், சேமப்படை, செயற்பாடுகள் மற்றும் களஞ்சியம் போன்றவை பற்றிய விபரங்கள் அங்குள்ள பிரதான தளபதிகளுக்கே முழுமையாகத் தெரிந்திருப்பதில்லை. (கருணாவும் அதற்கு விதிவிலக்கு அல்ல)

வலுச்சமநிலைபற்றி ஆய்வு செய்பவர்கள்கூட ஒட்டுமொத்த சிறிலங்காப் படைகளின் எதிர்ப்பைத் தாங்கிநிற்பதற்கும் சிலவேளைகளில் அகற்றுவதற்கும் புலிகளால் முடிகிறது என்று கூறினாலும் அச்சமநிலையின்பால் செல்வாக்குச் செலுத்தும் படைப்பரம்பல் (Deployment) மற்றும் வழங்கல் (Logistic) சார்பாக கருத்துவெளியிடத் தயங்குவதுண்டு. புலிகளுக்கான பீரங்கிகள் சிறிலங்கா இராணுவத்தாலேயே வழங்கப்படுகின்றன என்பதை நியாயப்படுத்த "கடல்வழியாகப் புலிகள்

முன்பு இரண்டு கட்டளைப் பிராந்தியங்களே இருந்த கிழக்கில் இப்போது அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என மூன்று தனியான கட்டளைப் பிராந்தியங்களும் அவற்றிற்கான தனியான அலகுகளும் உருவாகியிருப்பதையும் துறைசார் படையணிகள் படைக்கல மற்றும் ஆட்பல எண்ணிக்கையில் விரிவடைந்திருப்பதையும் தேசிய துணைப்படைக் கட்டமைப்பு பரவலாக்கப்பட்டுள்ளதையும் மக்கள் நலன்நாடும் நோக்குடனான ஊரக மேம்பாட்டுப்பேரவை போன்ற நிரந்தர சேவைக் கட்டமைப்புக்கள் தோன்றியிருப்பதையும் படைச் சிப்பாய்கள் அவதானிக்கத் தவறியிருக்க மாட்டார்கள். யாழ்.குடாநாட்டில் இருக்கும் அவர்களின் நண்பர்கள் தங்கள் உடைமைகளை விற்கத்தொடங்கிய தகவலை அவர்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்வார்கள் என்று நினைத்து ஒரு பொறுப்புள்ள படையதிகாரிவாளாயிருக்கமுடியாது.

தவிர, இதையெல்லாம் தாண்டிய ஒரு கலவரமூட்டும் விடயம் அண்மைக்காலமாக நிகழ்ந்து கொண்டிருப்பதையும் அவர் தனது அறிக்கையில் வேண்டுமென்றே புறக்கணித்ததாகத் தெரிகிறது. தமிழர் தாயகப் பகுதியெங்கும் வீச்சுடன் விரிந்துகொண்டிருக்கும் மக்கள் படையின் செயற்பாடுகளை அவர் தெரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. மக்கள் படையின் துரித வளர்ச்சிக்குத் தூபமிடுவது போன்ற நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் அரங்கேறி வருகின்றன.

விடுதலை ஆர்வலர்களும் கல்வி மற்றும் சமூக முன்னோடிகளும் மாத்திரமன்றி இளைஞர்களும் சிறார்களும்கூட படையினரால் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். தமிழ்ச் சமூகம் என்றுமே சகித்துக்கொள்ள முடியாத பாலியல்வதைக் கொலைகளும் ஆரம்பித்துவிட்டன. இதன் காரணமாகத் திரண்டெழும் மக்கள் படையினர் புலிகளைப்போல தேர்ச்சி பெற்றவர்களாக இல்லாதிருப்பினும் படையினருக்கு வேலை வழங்குபவர்களாக நிச்சயம் இருக்கப்போகிறார்கள். இது, ஒரு பிரதேசத்தைத் தக்க வைப்பதற்கான படையினரின் அளவையும் படையினர் மீதான அச்சுறுத்தல்களையும் முன்பைவிட அதிகரிக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, விடுதலைப்புலிகளுடனான போரிலே தங்கள் உச்சவலு பிரயோகிக்கப்பட்டாகிவிட்டது என்பது சிங்களப் படைத்தலைவர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் புதிதாகப் பொறுப்பேற்ற எந்தத் தலைவரும் தோல்வியையோ தங்கள் இயலாமையையோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அவரால் புதிய பதவிகள் வழங்கப்பட்ட படைத் தளபதிகளுக்கும் இது புதுக் குதிரை யோட்டம். அவர்களுக்கும் கனவுகள் காணும் உரிமை உண்டு. பேச்சுவார்த்தை மேசைகளிலே புரிந்து கொள்ளமுடியாத ஒடுக்கப்பட்டவர்களின் நியாயங்கள் களங்களிலே அவர்களுக்கு கட்டாயக் கல்வியாகப் புகட்டப்படும்.

இவ்வகையான சிக்கலான சூழலில் பிரிகேடியர் தயா ரத்னாயக்கவின் இடத்தில் இருக்கக்கூடிய எவருக்குமே எதையாவது சொல்ல வேண்டிய இக்கட்டான நிலை எழுவது இயல்பே. வெல்லமுடியும் என்று சொன்னவர் அதற்கான உதாரணங்களையோ அல்லது எப்படி என்பதையோ சேர்த்துச் சொல்லியிருந்தால் அவரின் வீரர்களின் பதட்டத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

மீண்டும் தொடங்கியிருக்கும் பேச்சுவார்த்தையை படைச் சிப்பாய்கள் ஆவலுடன் எதிர் பார்க்கலாம். ஆனால் படையியல் யதார்த்தங்களையும் எதிர்த் தரப்பினரின் வாதங்களையும் அவர்களின் தலைவர்கள் எப்படிப் புரிந்துகொள்கிறார்கள் என்பதின் அடிப்படையிலேயே சிறிலங்கா படைச்சிப்பாய்களுடைய நம்பிக்கைகளின் வாழ்க்கைக் காலம் தங்கியிருக்கும். ●

# படுகொலை வெறியுடன் சிங்களப் படைகள்

- எல்லாளன் -

இராணுவ அட்டூழியங்கள், தமிழர்தாயகத்தில், எல்லை தாண்டிச் சென்றுகொண்டிருக்கின்றன.

வீதிகளில் - காவலரண்களில் நின்றபடி படையினர் நடாத்தும் கண்மூடித்தனமான கொலைத் தாக்குதல்கள் ஒருபுறம், மாவீரர் - போராளி குடும்பங்கள் மற்றும் தேச பக்தர்களைக் குறிவைக்கும் படையினரின் திட்டமிட்ட தாக்குதல்கள் மறுபுறமுமாக படுகொலைகள் தீவிர மடைந்துள்ளன.

படையினரின் இக் கொலைவெறி தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தாண்டவமாடுகின்றது.



இந்த மக்கள் படுகொலையையிட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எதுவுமே கூறாது மௌனம்காத்து வருகின்றது. சர்வதேச சமூகமும் வாய்மூடி மௌனியாக உள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கு சிங்களப் படையினரே பொறுப்பாகும். ஆனால் சிங்களப் படைகளே பகிரங்கமாகச் சுட்டுக் கொல்வதும், ஆடு, மாடுகளை அடிப்பதுபோல கொட்டன்களால் எலும்புகளை உடைப்பதும், மண்டைகளை நொருக்குவதுமாக மிருகத் தனமாக நடந்துகொள்கின்றார்கள்.

காயம்பட்ட மக்கள் எல்லாம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். காயம் பட்டவர்களின் நிழல்படங்கள் பத்திரிகைகளில் வருகின்றன. வானொலிகளுக்கு - பத்திரிகைகளுக்குப் படையினரின் அட்டூழியங்கள் பற்றி வாக்குமூலம் கொடுக்கின்றனர்.

இவ்வளவு விடயங்கள் நடந்தும் ஒன்றுமே நடவாததுபோல போர்நிறுத்த கண்காணிப் புக்குழு சுடலை அமைதி காப்பது தமிழ் மக்களை விரக்திக் குள்ளாக்கியுள்ளது.

படையினர் கொல்லப்படும்போது அதைக் கண்டிக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு படையினரால் மக்கள் படுகொலை செய்யப்படும்போது தீவிர மௌனம் காப்பது மக்களை சீற்றமடையச் செய்துள்ளது.

தர்சினி பாலியல் வல்லுறவுக் கொலை - மன்னாரில் ஒரு குடும்பம் எரித்துக் கொலைசெய்யப்பட்டது - திருமலையில் மாணவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டது - மாணிப்பாயில் ஒரு குடும்பம் வேட்டையாடப்பட்டது... போன்ற பயங்கரவாதச் செயல்களையேனும் கண்டித்து சிங்கள அரசுக்கு அழுத்தம் கொடுத்து - படுகொலைகளை நிறுத்த சர்வதேச சமூகம் முன்வராதது தமிழ்மக்களுக்கு பல்வேறு ஐயங்களை எழுப்பியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழர்களைப் படுகொலை செய்ததிலும் - சமாதான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட்டதிலும் பிரபல்யமான பேரினவாதிகள் இப்போது சிங்கள இராணுவ இயந்திரத்தின் தலைமைப் பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் கண்ணசைவின்படி படையினர் கொலைகளைப் புரிகின்றனர். இவர்களது கொலைவெறியை சர்வதேச சமூகமோ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ தடுத்து நிறுத்த முன்வராத நிலையில் யார்தான் இக் கொலைஞர்களைத் தடுப்பது!?

> **‘‘இரண்டு வாரங்களுக்கு எல்லா அலுவல்களையும் நிறுத்தி, வடக்கு - கிழக்கிற்குச் சென்று புலிகளுடன் போர் புரிந்து அவர்களை முற்றாக அழித்தொழிக்க வேண்டும்’’ என்று தென் இலங்கைப் பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் அமைப்பொன்று சிங்களவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பாதுகாப்பமைச்சின் செயலாளரும் சிறிலங்காவின் சனாதிபதியின் சகோதரருமாகிய கோட்டபாய ராஜபக்ச அவர்களின் உத்தரவுப் படியே திருமலைக்கு தனது கட்டுப்பாட்டிலுள்ள அதிரடிப்படையை அனுப்பியதாக கொட்டகதெனியா பகிரங்கமாகவே பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

இந்த அதிரடிப்படையே திருமலையில் 5 தமிழ்மாணவர்களை அநியாயமாகச் சுட்டுக் கொன்றது. இப்படுகொலைகள் திருமலையில் பதட்ட நிலையைத் தோற்றுவித்துவிட்டன என்று ஒரு சிங்கள அமைச்சர் கருத்துத் தெரிவித்து - கொட்டகதெனியாவின் படுகொலைச்செயலை மறைமுகமாகக் குற்றம்சாட்டியிருந்தார். ஆனால் குறித்த அமைச்சர் தன்னுடைய வேலையை மட்டும் செய்தால் போதும் பாதுகாப்பு அமைச்சின் வேலைபற்றிக் கதைக்க அவருக்கு உரிமையில்லை என்று கொட்டகதெனியா காட்டமாகப் பதில் கூறி - படுகொலைகளை நியாயப்படுத்தியுள்ளார்.

சிங்கள இராணுவ இயந்திரத்தின் தலைமைப் பொறுப்புக்களில் உள்ள **‘சிவிலியன் தலைவர்கள்’** இவ்வாறு தமிழருக்கு எதிராக இனவெறி கக்கும்போது - கொலைவெறி பிடித்த சாதாரண சிங்களச் சிப்பாய்கள் தமிழ் மக்களை எப்படிச் சித்திரவதை செய்து கொல்வார்கள் என்பதை ஊகித்தறிய முடியும்.

தமிழர் தாயகத்தில் உள்ள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இப்போது சிவில் நிர்வாகம் என்ற ஒன்றே இல்லை. கடுமையான இராணுவ ஆட்சியே அங்கு நடைபெறுகின்றது. அங்கே கொலைகளும் - பாலியல் வல்லுறவுகளும் - கொள்ளைகளும் - ஆட்கடத்தல்களும் நிலவுகின்றன.

இவை அனைத்தும் சிங்களப் படையினராலும் - அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களினாலும் நடாத்தப்படுகின்றன.

இந்த இராணுவ அராஜகத்துக்குப் பயந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடி வருகின்றனர். நாலாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் பதினையாயிரம் மக்கள் இதுவரை அபயம் தேடி ஓடிவந்துள்ளனர்.

இந்த அகதிகளுக்கு அடிப்படைத்தேவைகளை வழங்கி - அவர்களை ஆற்றுப்படுத்தவும் சர்வதேச சமூகம் இதுவரை முன்வரவில்லை.

தமிழர் படுகொலைகளை நிறுத்துமாறு கூறி - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிபேதம் காட்டாமல் ஒற்றுமையாகக் குரல் எழுப்பி - கவன ஈர்ப்புப் போராட்டம் நடாத்தியபோதும் சிங்கள நாடாளுமன்றம் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

இப்போராட்டத்தின் விளைவாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவை அழைத்துப் பேச்சு நடாத்திய சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள், தமிழர் படுகொலைகளை நிறுத்த தான் என்ன நடவடிக்கைகளை எடுப்பார் என்று கூறுவதற்குப் பதிலாக நாடாளுமன்றில் அவசரகால நிலையை நீடிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான வசதியாக நாடாளுமன்றைக் குழப்ப வேண்டாம் என்றே அவர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டார்.

சிறிலங்கா சனாதிபதியிலிருந்து அடிமட்டச் சிங்களச் சிப்பாய் வரை அவர்கள் ஒரே கருத்துடனும் - ஒரே இலக்குடனும் இருந்து, ஒரே விதமாகச் சிந்திக்கின்றனர்.



புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படையினரால் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தர்சினி

தமிழர்கள் கொல்லப்படவேண்டிய எதிரிகள் என்பதே அவர்களது ஒருமித்த கருத்து. தமிழர்களைக் கொன்று அடிபணிய வைப்பதுதான் அவர்களது இலக்கு. தமிழர்களை அழிப்பது என்பது புலிகளை அழிப்பது என்றே அவர்கள் சிந்திக்கின்றனர்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்காக என்ன செய்யவேண்டும்?

திருமலையில் கொல்லப்பட்ட அப்பாவி மாணவர்களில் ஒருவரது அன்னையார் மகனின் இறுதிச் சடங்கில் கூறியதாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி - தமிழ்மக்கள் அனைவருக்குமான செய்தியாகவே உள்ளது.

“இப்படி என் மகனுக்கு நடக்குமென்று தெரிந்திருந்தால் அவனை இயக்கத்திற்கு அனுப்பியிருப்பேனே!..” என்று கூறி அந்தத் தாய் அழுது புலம்பினார்.

இந்தத் திருமலைவாழ் தாயினது மனவுணர்வு மட்டுமல்ல இராணுவ அட்டூழியத்திற்கு பிள்ளைகளை இழந்த தமிழ்த் தாய்மார் அனைவரினதும் பொது உணர்வாக மேற்குறித்த அங்கலாய்ப்பே இருக்கும்.

சிங்களப் படைகள் விரட்டியடிக்கப்பட்டு மீட்கப்பட்ட ஊர்களே தமிழரின் வாழ்வுக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கும் இடங்களாக விளங்கமுடியும்.

ஆயுதங்களுடன் இருக்கும் தமிழர்களைக் (புலிகளை) கண்டு சிங்களப்படைகள் அஞ்சுவதும் - ஆயுதங்கள் அற்ற அப்பாவித் தமிழர்களைக் கண்டால் கொலைவெறியுடன் தாக்குவதும் சிங்களப்படைகளின் இன்றைய மனநிலையாகும்.

தமிழர்கள் ஆயுதமேந்துவதுதான் அவர்களுக்குப் பாதுகாப்பானது. இது இலங்கைத்தீவின் இன்றைய யதார்த்தம்.

தமிழர் தாயகத்தில் சிங்களப்படைகள் நடாத்தி வருகின்ற தற்போதைய படுகொலைகள் ஒருபெரும் இனப்படுகொலைக்குக் கட்டியம் கூறும் நிகழ்ச்சியாகவே நாங்கள் பார்க்கவேண்டும்.

போர் இல்லாமலே இவ்வளவு இராணுவ அட்டூழியம் இருக்கும் என்றால் போர் தொடங்கினால் எவ்வளவு அட்டூழியங்களைச் சிங்களப் படைகள் புரியும் என்று நாங்கள் சிந்திக்கவேண்டும்.

**‘‘இரண்டு வாரங்களுக்கு எல்லா அலுவல்களையும் நிறுத்தி, வடக்கு - கிழக்கிற்குச் சென்று புலிகளுடன் போர் புரிந்து அவர்களை முற்றாக அழித்தொழிக்க வேண்டும்.’’** என்று தென் இலங்கைப் பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் அமைப்பொன்று சிங்களவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழர்மீதான ஒரு இறுதிப் போரை - இன அழிப்புப்போரைத் தொடங்க சிங்களதேசம் தயாராகின்றது என்பதை தமிழ்மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கேற்றாற்போல் சிங்களப் போர் இயந்திரத்தின் தலைமைப் பொறுப்புக்களில் தமிழர் விரோத தீவிர இனவெறித் தளபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போர்வெறியர்களிடம் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது இளைஞர் - யுவதிகளின் கடமையாகும்.

நெருக்கடி நிலையில் எழும் இந்தத் தேசியக்கடமையை எமது இளம்சந்ததியினர் உணர்ந்து - போராட முடிவெடுத்து - புலிகள் இயக்கத்தில் இணைய முன்வர வேண்டும்.

ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர் - யுவதிகள் ஆயுதப் பயிற்சியெடுத்து - களம் புகும் போது வெற்றியை நாங்கள் சுலபமாகப் பறிக்கமுடியும். சிங்களப்படைகளை எமது ஊர்களில் இருந்து விரட்டியடிக்க முடியும். எமது குடும்பத்தினரை எமது மக்களை நிம்மதியாக - கௌரவமாக வாழ வைக்க முடியும்.

***"உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே."***

***- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -***

இருபத்தியொராம் நூற்றாண்டின் முதன்மை அடையாளமாக இனத்தேசியம் (ETHNIC NATIONALISM) ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. பெரும்பாலான உள்நாட்டுப் போர்கள் இன விடுதலைக்காகவே நடைபெறுகின்றன. பல்லின நாடுகளில் எண்ணிக்கையில் கூடிய இனம் சிறுபான்மையினரை அடக்கி ஆள விளையும்போது விடுதலைப் போர் வெடிக்கின்றது. சிங்கள இனத்தவர் தம்மை 'மகா ஜாதிய' என்றும் தமிழரை 'சுளு ஜாதிய' என்றும் அழைக்கின்றனர். இதே துவேச மனப்பான்மை வேறுபல நாடுகளிலும் காணப்படுகிறது. "வெள்ளை நிறவெறி உடற்தோல் அளவு ஆழமானது. சிங்கள இனவெறி உடலை ஊடுருவி ஆன்மாவரை செல்கிறது" என்றார் முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேற்பிள்ளை.

உரிமைப்போர் செய்யத் துணிகின்றனர். நாடு உருக்குலைந்து சீரழிவதற்குத் தமிழர்களின் சம்மதமின்றி உருவாக்கப்பட்டு அவர்கள் மீது திணிக்கப்பட்ட 1972, 1978ஆம் ஆண்டுகளின் அரசியல் சாசனங்கள் காரணம் என்று உணரப்பட்டுள்ளது. உருப்படியான சீர்திருத்தம் செய்யப்படாத காரணத்தால் பிரிவினைக் கோரிக்கை வலுப்பெறுகின்றது.

ஒரு விடுதலைப்போரில் மிகக் கூடுதலான பாதிப்படைபவர்கள் பொதுமக்களே. எதிரிப்படைகள் பொதுமக்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர். வெற்றிக்கான வேகமான குறுக்குவழி பொது மக்களை மிரட்டிப் பணியவைப்பதே என்று இராணுவம் நம்புகிறது. போரில் ஈடுபடாத சிவிலியன் மக்கள் என்று ஒருவரையும் ஒதுக்கிவிட முடியாது என்று விடுதலைப்போர் நடத்துவோர்



# அரச ஒடுக்குமுறையும் மக்கள் துயரமும்

நம்புகின்றனர். பார்வையாளர் களாக ஒருவரும் விலகி இருக்கமுடியாது. விடுதலைப்போர் என்று வந்துவிட்டால் விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செய்தே ஆகவேண்டும். புராதன காலந்தொட்டு போர்க்காலத்தில் பொதுமக்களின் துயரம் உச்சமடைகிறது. நாடு நகரத்தை முற்றுகையிட்டு உணவு, நீர் போன்றவற்றை மக்கள் பெறுவதைத் தடுக்கும் நடைமுறை அன்றே தொடங்கிவிட்டன. இன்றைய பொருளாதாரத் தடையும், பயணத்தடையும் அதன் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. பொருளாதாரத் தடையால் இராணுவமோ அரசியல் தலைமையோ பாதிப்படைவதில்லை. பெருவிலை கொடுப்பவர்கள் பொதுமக்கள்தான். அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஐ.நா ஊடாக ஈராக் மீது முன்பு விதித்த பொருளாதாரத்தடை, மருந்து, பால்மா தடை என்பன காரணமாகப் பல்லாயிரம் குழந்தைகளும் சிறுவர்களும் உயிரிழந்தனர். எமது விடுதலைப்போர் தொடங்கிய பின் சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீது பொருளாதாரத் தடையையும் பிரயாணத் தடையையும் இறுக்கியுள்ளது. இன்னும் ஏதோ வொரு வகையில் இத் தடைகள் நீடிக்கின்றன.

***இருபத்தியொராம் நூற்றாண்டின் முதன்மை அடையாளமாக இனத்தேசியம் (ETHNIC NATIONALISM) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான உள்நாட்டுப் போர்கள் இன விடுதலைக்காகவே நடைபெறுகின்றன. பல்லின நாடுகளில் எண்ணிக்கையில் கூடிய இனம் சிறுபான்மையினரை அடக்கி ஆள விளையும்போது விடுதலைப்போர் வெடிக்கின்றது. சிங்கள இனத்தவர் தம்மை 'மகா ஜாதிய' என்றும் தமிழரை 'சுளு ஜாதிய' என்றும் அழைக்கின்றனர். இதே துவேச மனப்பான்மை வேறுபல நாடுகளிலும் காணப்படுகிறது. "வெள்ளை நிறவெறி உடற்தோல் அளவு ஆழமானது. சிங்கள இனவெறி உடலை ஊடுருவி ஆன்மா வரை செல்கிறது."***

சிங்கள அரசியல் கட்சிகளுக்கிடையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை முன்னெடுக்கும் போட்டாபோட்டி நடக்கிறது. இதைச் சர்வதேச ஆய்வாளர்கள் கவனத்தில் எடுத்துள்ளனர். நியூயோர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நீல் டெவொற்றா இப்போட்டியைப் பகிரங்க ஏலவிற்பனைக்கு ஒப்பிடுகிறார். சிறிலங்காவின் பிரிவினைக் கோரிக்கைக்கு சிங்களக் கட்சிகள் தம்மிடையே நடத்தும் ஏலவிற்பனைக்கு நிகரான சூடான போட்டி தான் காரணம் என்கிறார் நீல் டெவொற்றா. (FROM ETHNIC OUTBIDDING TO ETHNIC CONFLICT: THE INSTITUTIONAL BASIS FOR SRILANKA'S SEPARATIST WAR BY NEIL DEVOTTA, POLITICAL SCIENCE DEPARTMENT, HARTWICK COLLEGE, NEWYORK, 2005) தமது வன்முறைகள்மூலம் தமிழர்களைப் பிரிந்து செல்லும்படி தூண்டும் சிங்கள ஆட்சியாளர்கள் பிரிவினையைத் தடுப்பதற்காக இராணுவ நடவடிக்கையையும் நடத்துகிறார்கள் என்று அவர் கூறுகின்றார். சுதந்திரம்பெற்ற நாட்தொட்டு இன்றுவரையிலான இத்தீவின் வரலாறாகவும் இது அமைகிறது.

பிரிவினைக்குத் தூபமிடும் நான்கு முக்கிய அம்சங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன - அரசியல் கட்டமைப்பு, தூர நோக்கற்ற அரசியல்வாதிகள், சிறுபான்மையினரின் போர்க்குணம், அவர்கள் வாழும் தனித்துவமான தரைப்பரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காக அரசியல்வாதிகள் செய்யும் நிறைவேற்ற முடியாத மேடைப் பேச்சுக்கள் சிறுபான்மையினரை விழிப்படையைச் செய்கின்றன. இதன் காரணமாக அவர்கள்



"அரசியல் வன்முறை" (POLITICAL VIOLENCE) என்ற சொற்தொடர் 1960கள் தொடக்கம் சர்வதேச அரங்கில் பாவிக்கப்படுகிறது. உள்நாட்டில் அரசுக்கும் ஆயுதம் தரித்த விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் உள்நாட்டுப் போர் நடக்கும்போது நிகழும் வன்முறைகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. தொடக்கத்தில் அரசியல் வன்முறை என்ற சொற்தொடர் அரசுக்கு எதிரான போராட்டம், அரசுத் தலைவர்களின் படுகொலை, அரச இயந்திரத்தைச் செயற்படாமல் தடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிட்டது. பின்பு அரசியல் வன்முறை என்பது அரசின் ஒடுக்குமுறைகள் தனது குடிமக்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்கள், காணாமற்போகச் செய்தல், மர்மக் குழுக்கள் மூலமான படுகொலைகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. இத்தொடரில் "அரச பயங்கரவாதம்" (STATE TERRORISM) என்ற சொற்கள் அரசு குடிமக்கள் மீது நடத்தும் எல்லாவகை வன்முறைகளையும் குறிப்பிட உதவுகின்றது. அதே சமயத்தில் விடுதலை இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகள், தற்காப்பு நடவடிக்கையாக இருப்பினும் "பயங்கரவாதம்" (TERRORISM) எனப்படுகிறது. பயங்கரவாதம் என்றால் என்னவென்று சரிவர வரையறை செய்யப்படாத நிலையில் சில உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்திருப்பதானது வேதனை அளிப்பதாயுள்ளது.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் முன்னாள் ஆலோசகரும் தற்போதைய ஐ.நா பணியாளருமான அம்றித்றோகான் பெரேரா தனது கலாநிதி பட்டத்திற்காக எழுதிய நூலில் (INTERNATIONAL TERRORISM BY AMRITH ROHAN PERERA: VIKAS PUBLISHING HOUSE, NEW DELHI 1997) தமிழீழ விடுதலைப்புலிகளை கடுமையாகச் சாடியுள்ளார். 27, ஜூன் 1997 புரொன்ட்லைன் சஞ்சிகையில் இந்த நூலை ஆய்வு செய்த ஏ.ஜீ.நூராணி பின்வருமாறு கூறுகின்றார். "உலகின் எந்தவொரு நாடாகிலும் பயங்கரவாதம் பற்றிய நிலையான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. பயங்கரவாதம், மனித உரிமை பற்றியெல்லாம் பேசும் அமெரிக்கா தானும், தனது கூட்டாளிகளும் செய்யும் அத்து மீறல்களைக் கணக்கில் எடுப்பதில்லை" பயங்கரவாதப் பிரச்சினை நெடிய வரலாற்றைக் கொண்டது எனினும் வசதிக்கேற்ப பயன்படும் சொற் பிரயோகமாகவே அது இன்றுவரை பயன்படுகிறது.

மக்கள் ஆதரவை இழந்த அல்லது ஆதரவைப்பெறாத ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை இராணுவ பலத்தின் மூலம் நடத்துகின்றனர். வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவம் கொழும்பின் பிரதிநிதியாகவும் சிங்கள ஆதிக்கத்தின் நீட்சியாகவும் இடம்பெறுகின்றது. பூகோள மேலாதிக்கச் சிந்தனையைக்கொண்ட சக்திகள் ஆயுத தளபாட உதவி, இராணுவப் பயிற்சி, பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றை அதற்கு வழங்குகின்றன. இதனால் ஆக்கிரமிப்பு தொடர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இராணுவப் புலனாய்வு அமைப்பை நம்பியிருக்கிறது. மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் தேசவிரோத கும்பல்களை இனங்கண்டு தம்மோடு இணைத்துக்கொள்வதில் இராணுவப் புலனாய்வுத்துறையினர் முனைப்புக் காட்டுகின்றனர். தென் ஆபிரிக்கா, குவத்தமாலா போன்ற நாடுகளில் மிகவும் கொடிய கொலைக்குழுக்களை (DEATH SQUADS) இராணுவம் பயன்படுத்தியதை நாம் நன்கு அறிவோம். இப்படியான குழுக்கள் 'கருணா குழு', 'றாசீக் குழு' என்ற பெயர்களில் இராணுவ ஆதரவோடு தமிழீழத்தில் இயங்குகின்றன. ஈ.பி.டி.பி அமைப்பினரும் இராணுவத் துணைப்படையாகவும் மேற்கூறிய கொலைக் குழுவாகவும் செயற்படுகின்றனர். இவர்கள் செய்யும் அட்டூழியங்களால் பொதுமக்கள் படும் அவலம் கொஞ்ச நஞ்சமல்ல. கருணா, றாசீக் போன்ற பெயர்களைத் தாங்கியபடி இராணுவத்தினரே மறைமுகமாகச் செயற்படும் வாய்ப்பு நிறைய இருக்கிறது. இக்குழுக்களும் சிங்கள இராணுவமும் ஒரு பொதுவேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இராணுவப் புலனாய்வு அமைப்பு மக்களைக் கண்காணிப்பது, மக்கள் சம்பந்தமான தகவல்களைச் சேகரிப்பது, தேவைப்படும் போது மக்களை நேரடியாகவோ தமது கொலைக்குழுக்கள் மூலமாகக் கொன்றொழிப்பது போன்ற மூன்று முக்கிய கருமங்களைச் செய்கின்றது. தகவல் சேகரிப்பு அதன் பிரதான இலக்காக இருக்கிறது. அதிலிருந்து மற்றவை விரிவடைகின்றன. ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கும் புலனாய்வு அமைப்பு அதன் கண்ணும், காதுமாகவும், எதிர்ப்பை முறியடிக்கும் சக்தியாகவும் செயற்படுகிறது. தன்னிடமுள்ள வளங்கள் யாவற்றையும் ஒன்றுதிரட்டி இப்பணியில் அது ஈடுபடுகிறது. மக்கள் மத்தியில் கிளர்ச்சி, குழப்பம், எதிர்ப்பு மற்றும் மாற்று அபிப்பிராயம் தோன்றாமல் பார்த்துக்கொள்ளல், ஊடகத்துறையினர் மீது தாக்குதல் நடத்துவது மூலம் செய்தித் தணிக்கை அமுலாக்கம் செய்தல், ஆட்சியாளர் விரும்பும் அபிப்பிராயங்களைக் கட்டியெழுப்புதல் என்பன இராணுவப் புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகளாகும். இவை அனைத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழீழத்தில் இன்று காணலாம்.

வெள்ளை நிறவெறி அரசின் காலத்தில் செயற்பட்ட கொலைக் குழுவின் தலைவன் இயூஜீன் திகொக் எழுதிய சுயசரிதையில் கொலைக்குழுக்களின் நடவடிக்கைகள் விவரிக்கப்பட்டுள்ளன. (A LONG NIGHT'S DAMAGE, AUTOBIOGRAPHY: EUGENE DE KOCK. 1998) இவர் தென்னாபிரிக்கப் பொலிஸ்படையில் கேணல்தர அதிகாரியாகப் பணியாற்றியவர். கறுப்பின அரசு நிறுவப்பட்டபின் (1994) இவர் மீது

**- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -**

107 கொலை, சித்திரவதை மற்றும் கொள்ளைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. இவர் தலைமைவகித்த கொலைக்குழுவின் பெயரான விளாக்பிளாஸ் (VLAKPLAS) அப்போது வெளிவந்தது. வெள்ளை ஜனாதிபதிகளான பி.டபிள்யூ.போத்தா (P.W. BOTHA), தீ கிளேர்க் (DE KLERK) ஆகியோருக்கு விளாக்பிளாசின் நடவடிக்கைகள் பற்றி நன்கு தெரியும் என்று சொக் தனது நூலில் தெரிவித்துள்ளார். தனது அணியினர் லிசொத்தோ, சுவாசிலாந்து ஆகிய பகுதி களுக்குள் ஊடுருவி அங்கு தலைமறைவாக வாழ்ந்த ஏ.என்.சி தலைவர்களையும் ஆதரவாளர்களையும் கொன்றதையும் நூல் தெரிவிக்கிறது. மண் போன்றவற்றை அள்ளிப்போட உதவும் 'சவள்'தான் (SHOVEL) தன்னுடைய கொலைக்கருவி, உடலில் இருந்து தலையைப் பிரிப்பதற்கு அதைப் பயன்படுத்தியதாக இயூஜீன் தீ கொக்கின் நூல் கூறுகிறது. விசாரணை நடத்திய நீதிமன்றம் இவருக்கு 262வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

முதலாம் உலகப்போர் முடிந்தபின் ஜேர்மன் தென்மேற்கு ஆபிரிக்கா, அதாவது நபீபியா தென் ஆபிரிக்க நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் விடப்பட்டது. தமது சுதந்திரத்திற்காக நபீபிய மக்கள் சாம் நுஜோமா தலைமையிலான சுவப்போ (SOUTH WEST AFRICA



கொக்கட்டிச்சோலைப் படுகொலை

PEOPLE'S ORGANIZATION - SWAPO) அமைப்பின் கீழ் இருபத்திநான்கு வருடம் போராடினர். 21 மார்ச்சு 1990 இல் நபீபியா சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த மக்கள்மீது தென்னாபிரிக்கப் படைகள் சொல்லொணாத் தாக்குதல்களை மேற்கொண்ட னர். இவ்வருடம் (2006) முதல் மாதத்தின் முற்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் புதைகுழிகள் வட நபீபியாவில் கண்டுபிடிக்கப்பட்டன. ஓரிடத்தில் பல சடலங்கள் படுகொலை செய்யப்பட்டபின் புதைக்கப்பட்ட இடம் 'மாஸ்கிறேவ்ஸ்' (MASS GRAVES) அதாவது கூட்டுப் புதைகுழிகள் என்று அழைக்கப்படுகின்றன. கூட்டுப் புதைகுழிகள் இராணுவ ஆட்சியின் பரிசாகப் பார்க்கப்படுகின்றன. செம்மணிப் புதைகுழி, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயப் புதைகுழி, யாழ்.துரையப்பா விளையாட்டரங்குப் புதைகுழி என்பன பிரபலமானவை. தென் தமிழீழத்திலும் எண்ணற்ற புதைகுழிகள் உண்டு. சத்துருக்கொண்டான் பனிச்சையடியில் 187 தமிழர்களின் புதைகுழி இருக்கிறது. படைமுகாம்கள் வடகிழக்கில் எங்கிருந்தாலும் அவற்றிற்கு அருகில் புதைகுழிகளும் எலும்புக் கூடுகளும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசுகள் தமது குடிமக்களுக்கு எதிராகச் செய்கின்ற கொடூரங்கள், அநீதிகள் என்பனவற்றிற்கு எதிராக அனைத்துலக அபயஸ்தாபனம் 1998இல் வெளியிட்ட அறிக்கையில் சிறிலங்கா இடம்பெறுகிறது. இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்ட குற்றங்கள் இன்றும் நீடிக்கின்றன. சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான அராஜகம், சட்டத்திற்குப் புறம்பான கைதுகள், விசாரணையின்றிய படுகொலைகள், இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவுகள் போன்றவை பட்டியலில் அடங்குகின்றன. சித்திரவதைகள், படுகொலைகள் கைதுசெய்தபின் காணாமற்போதல் போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் 141 நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என அந்த அறிக்கை தெரிவிக்கிறது. 1998இல் வெளிவந்த மேற்கூறிய அறிக்கை 2006ஆம் ஆண்டிற்கும் பொருத்தமாகவுள்ளது. ஈழத் தமிழர்களின் துன்ப வரலாறு தொடர்ந்த வண்ணம் உள்ளது.

ஜேர்மனியில் அடொல்ப் ஹிற்லரின் சர்வாதிகார ஆட்சி நிலவிய காலத்தில் நடுநிசிக் கைதுகளும் படுகொலைகளும் 'வீட்டுக் கதவைத் தட்டுதல்' (KNOCK ON THE DOOR) என்று பூடகமாக அழைக்கப்பட்டன. இந்த நான்கு ஆங்கிலச் சொற்களும் இன்று அரச பயங்கரவாதத்தின் குறியீடாகக் கருதப்படுகின்றன. இராணுவமும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களும் பொதுமக்களின் வீட்டுக்கதவை தட்டித் திறக்கச் செய்தபின் உள்நுழைவார்கள். அடுத்ததாக வீட்டில் இருப்பவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள் அல்லது அங்கேயே கொல்லப்படுவார்கள். இது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வழமையாகிவிட்டது. அதேபோல் தெருக்களில் செல்வோர் பட்டப்பகலில் 'இலக்கத் தகடற்ற வெள்ளை வானில்' (WHITE MOTOR - VANS WITHOUT NUMBER PLATES) கடத்திச் செல்லப்படுகிறார்கள். அதன்பின் கடத்தப்பட்டவர்கள் காணாமற் போனவர்களாகி விடுகிறார்கள். தமிழர்கள் மத்தியில் 'வெள்ளை வான்' என்ற சொற்களைக் கேட்டதும் பயமும் பீதியும் ஏற்படுவது இயற்கை. ஆட்கடத்தலுக்காக இலக்கத் தகடற்ற வெள்ளை வானைப் பயன்படுத்தும் நடைமுறையை 1992 - 1993 காலப்பகுதியில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மட்டக்களப்பில் பணியாற்றும்போது ஆரம்பித்துவைத்தார். இப்போது இது சிறிலங்கா இராணுவத்தின் பாரம்பரிய நடைமுறையாக மாறிவிட்டது. தமிழர் படுகொலையில் சாதனை படைக்கும் சிங்கள இராணுவத் தளபதிகளுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கும் பாரம் பரியத்தை சிறிலங்கா அரசு கடைப்பிடிக்கிறது. செம்மணிப் படுகொலைகளோடு நேரடித் தொடர்புடைய மூன்று தளபதிகளான ஜானக பெரேரா, சிறிலால் விஜயசூரிய, றொகான் தளுவத்த ஆகியோர்

***ஓரிடத்தில் பல சடலங்கள் படுகொலை செய்யப்பட்டபின் புதைக்கப்பட்ட இடம் 'மாஸ்கிறேவ்ஸ்'*** (MASS GRAVES) ***அதாவது கூட்டுப் புதைகுழிகள் என்று அழைக்கப்படுகின்றன. கூட்டுப் புதைகுழிகள் இராணுவ ஆட்சியின் பரிசாகப் பார்க்கப்படுகின்றன. செம்மணிப் புதைகுழி, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயப் புதைகுழி, யாழ்.துரையப்பா விளையாட்டரங்குப் புதைகுழி என்பன பிரபலமானவை. தென் தமிழீழத்திலும் எண்ணற்ற புதைகுழிகள் உண்டு. சத்துருக்கொண்டான் பனிச்சையடியில் 187 தமிழர்களின் புதைகுழி இருக்கிறது. படைமுகாம்கள் வடகிழக்கில் எங்கிருந்தாலும் அவற்றிற்கு அருகில் புதைகுழிகளும் எலும்புக்கூடுகளும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.***

முறையே இந்தோனேசியா, பாகிஸ்தான், பிறேசில் ஆகிய நாடுகளில் சிறிலங்காத் தூதுவர்களாக இப்போது பணியாற்றுகின்றனர்.

சிறிலங்காவின் வரலாறு காணாத தமிழர்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசினால் திட்டமிட்டு 1983ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. அவை ஜூலை மாதத்தில் நடைபெற்ற காரணத்தால் தமிழர்கள் அந்த மாதத்தை 'கரிஜூலை' (BLACK JULY) என்று குறிப்பிடுவர். தமிழர்களுக்கும் அவர்கள் தம் விடுதலைப்போருக்கும் எதிர்நிலை எடுக்கும் கூல் குடும்பத்தைச் சேர்ந்த இராஜன் கூல் 1983 ஜூலைச் சம்பவங்கள் பற்றியதொரு ஆய்வுநூல் எழுதியுள்ளார். (SRILANKA, ARROGANCE OF POWER BY RAJANHOOLE) தமிழர்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கிய யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் 2001ஆம் ஆண்டு பிரசுரமான இந் நூலில் தரப்பட்டுள்ளது. பட்டியலில் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பெயர் இடம் பிடித்துள்ளது. மனித உரிமை அமைப்பான மார்கா அமைப்பின் (MARGA INSTITUTE) தலைவர் கொட்பிறே குணத்திலக்கா பற்றியும் இதில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. "அரசு சார்பாக இயங்குவதிலும் சம்பவங்களுக்கு 'வெள்ளை வர்ணம்' பூசுவதிலும் மார்காத் தலைவர் ஈடுபடுபவர்" என்பது நூலாசிரியரின் தீர்ப்பு. பிந்தினுவேவாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 25 தமிழ் இளைஞர்கள் சிங்கள ஆயுததாரிகளால் பொலிஸ்படையின் உதவியோடு ஒக்ரோபர் 25, 2000ஆம் நாள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கொட்பிறே குணத்திலக்கா மூடிமறைக்க உதவினார் என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க ஆதரவோடு இராணுவ ஆட்சி நடைபெற்ற தென் அமெரிக்காவின் குவத்தமாலாவில் 1954 தொடக்கம் கொந்தளிப்பு நிலை காணப்படுகிறது. 11மில்லியன் மக்கள் தொகையில் 60 வீதமானோர் சுதேசிகளான மாயா இந்தியர்கள் அமெரிக்காவின் வாழைப்பழத்தோட்டம் என்றும் வர்ணிக்கப்பட்ட இந்த நாட்டில் சுதேசிகளின் உரிமை அடியோடு மறுக்கப்பட்டது. இராணுவ ஜெனரல்கள் அமெரிக்காவின் பாரிய பெருந்தோட்ட நிறுவனங்களோடு இணைந்து ஆட்சியைத் தமது கைகளில் வைத்திருந்தனர்.

சிலகாலம் சிவில் நிர்வாகம் நடைபெற்றபோது திரைமறைவில் இராணுவம் செயற்பட்டது. 1960தொடக்கம் 1996வரையிலான 36வருடகாலம் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது பெருமளவு நிதி மற்றும் இராணுவ உதவிகளை அமெரிக்கா குவத்தமாலா ஆட்சியாளர்களுக்கு வழங்கியது. தென் அமெரிக்காவின் மிக நீண்டகாலம் நீடித்த இந்த உள்நாட்டுப்போரில் 150,000 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் ஏதிலிகளாகினர். கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்களை 1994இல் ஐ.நா தொடங்கியது. ஆனால் போர் தொடர்ந்தது. டிசெம்பர் 29, 1996இல் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டாலும் இன்றுவரை உண்மையான அமைதி ஏற்படவேயில்லை. தென் அமெரிக்க விவகாரங்களில் கொலைக்குழுக்களை முதன் முறையாகப் பயன்படுத்திய வரலாறு குவத்தமாலா ஆட்சியாளருக்கு உண்டு. இதை கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கை (COUNTER - INSURGENCY) என்று ஆய்வாளர்கள் கூறுவர். (THE BATTLE FOR GUATEMALA: REBELS, DEATH SQUADS AND U.S.POWER BY SUSANNE JONAS. BOULDER, COLO, USA 1991)

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரசு அதை இரகசியமாகக் குழப்பும் தந்திரோபாயத்திற்கு உதாரணமாகத் தென் ஆபிரிக்காவில் நடந்தவற்றைக் குறிப்பிடலாம். பெப்பிரவரி 1990இல் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்ட பின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (AFRICAN NATIONAL CONGRESS) மீதான 40வருட தடையும் நீக்கப்பட்டது. அதன்பின் தீ கிளேர்க் (DE KLERK) தலைமையிலான வெள்ளை அரசுக்கும் கறுப்பினத் தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. ஜனாதிபதி தீ கிளேர்க் இழுத்தடிப்பு உபாயத்தைக் கடைப்பிடித்ததோடு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் மீதான படுகொலைத் தாக்குதல்களுக்கும் மறைமுக அனுமதி வழங்கினார். இன்காதா சுதந்திரக் கட்சியினர் (INKATHA FREEDOM PARTY) அவருடைய சூழ்ச்சி வலையில் வீழ்ந்தனர். ஒரு மில்லியன் றான்ற் பணம் இக்கட்சிக்கு அரசினால் வழங்கப்பட்டது. பாரம்பரிய ஆயுதங்களை பகிரங்கமாக எடுத்துச்செல்லும் உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஜூலை 1990இல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. வெள்ளைநிறப் பொலிசார் தாக்குதல் அணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கினர். இதுபற்றி பொலிஸ் ஆணையருக்கு முறைப்பாடு செய்யப்பட்டபோது அவர் யாதொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நவம்பர் 1990இல் அதே மாதிரியானதொரு இன்றுமோர் தாக்குதல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களின் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டது. இம்முறையும் நிராயுதபாணிகளான பல அப்பாவிகளும், பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

பேச்சுவார்த்தைகள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தபோது பல நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்கள் நடைபெற்றன. பேச்சுக்கள் முறியும் கட்டத்தை நெருங்கியது. தாக்குதலின் பின்னணியில் அரசு செயற்படுவதாக நெல்சன் மண்டேலா ஜனாதிபதி தீ கிளேர்க் மீது குற்றஞ் சுமத்தினார். அத்தோடு பாதுகாப்பு அமைச்சர், சட்டம் ஒழுங்கிற்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோரைப் பதவிநீக்கம் செய்யும்படி அவர் கேட்டார். தாக்குதல்களை வழிநடத்தும் இரகசியக் குழுக்களைக் கலைக்கும்படியும் மண்டேலா கேட்டார். அரசு அசையவில்லை. ஜூன் 17, 1992இல் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை இன்காதாக்கள் அரசின் பாதுகாப்போடு நடத்தினர். ஒரே வாரத்தில் நடத்தப்பட்ட நான்காவது படுகொலைத் தாக்குதலாக அது அமைந்தது. பொலிசார் நடவடிக்கை எடுக்க மறுத்தனர். பேசுவதில் பயனில்லை என்பதை மண்டேலா உணர்ந்தார். 'THERE WAS NO POINT IN TALKING' என்று அவர் தனது சுயசரிதையில் எழுதியுள்ளார். (LONG WALK TO FREEDOM: NELSON MANDELA: LITTLE BROWN & CO NEW YORK, LONDON 1994/1995) பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதை நிறுத்திக்கொள்வதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஆகஸ்து 3,4,1992 தென்ஆபிரிக்க வரலாற்றின் மிகப் பெரிய வேலைநிறுத்தம் நடைபெற்றது. 4 மில்லியன் கறுப்பினத்தவர்கள் இதில் பங்குபற்றினர். அரச இயந்திரம் ஸ்தம்பிதம் அடைந்தது. அதற்குப்பின் படிப்படியாக வெள்ளை நிறவெறி அரசு தனது நாசகார வேலைகளை நிறுத்தியது. ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும் இன்காதா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் ஒரு உள்நாட்டுப் போரைத் தொடக்கிவிடுவதுமூலம் கறுப்பினத்தவர்களின் உரிமைகளை வழங்காமல் வெள்ளைநிற அரசைத் தொடரலாம் என்ற திட்டம் நிறைவேறவில்லை. 1994 இல் கறுப்பினத்தவர் ஆட்சி மண்டேலா தலைமையில் உதயமாகியது.

கிட்டத்தட்ட மேற்கூறியவற்றை ஒத்த நிகழ்ச்சிகள் அமைதிப்பேச்சுக்கள் தொடங்கிய 2002இல் இருந்து சிறிலங்காவில் நடைபெறுகின்றன. நிழல்யுத்தமாக ஆரம்பித்தது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. நவம்பர் 2005இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலோடு தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழப்பு பன்மடங்காகியுள்ளது. ஆட்கடத்தல், காணாமற்போதல், வீடு புகுந்து சுட்டுக்கொல்லுதல் போன்றவையும் பாலியல் வல்லுறவுகளும் இணைந்து தமிழர் வாழ்வை நரகமாக்கியுள்ளது. இராணுவ ஆட்சி மீண்டும் யாழ்.குடாவில் தொடங்கியுள்ளது. இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று அரச அதிபர் கிராமசேவையாளர்களுக்கு விடுத்த சுற்றுநிருபம் இதற்குச் சாட்சியாகிறது. யாழ்.செயலகம் இராணுவத்தின் கீழ் இயங்குவதை மறுப்பதற்கில்லை. தமிழீழத்தில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஒட்டுக்குழுக்களும் இப்போது தமது முகங்களைக் கறுப்புத் துணியால் சுற்றிக் கட்டி மறைத்துள்ளனர். ஆகஸ்து 30,1999இல் கிழக்குதிமோரில் நடந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 78.5வீதத்தினர் சுதந்திரத்திற்காக வாக்களித்தனர். அதன்பின் இந்தோனேசியப் படைகள் ஏவிய கொலைக்குழுக்கள் கிழக்குத் தீமோரில் வெறியாட்டம் ஆடிப் பெரும் உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தினர். இக்குழுக்களைச் சேர்ந்த அனைவரும் தமது முகத்தைக்



யாழ்.குடாநாட்டின் இராணுவ பிரசன்னம்

கறுப்புத் துணியால் கட்டியிருந்தனர்.

உலகில் இன்று முனைப்புப் பெற்றுள்ள தேசிய இனங்களின் பிரச்சினையில் சிறிலங்கா விவகாரம் முதலிடம் பிடிக்கிறது. சிறிலங்கா அரசின் நிலைப்பாடு இராணுவத் தீர்வாக இருக்கிறது. ஆனால் அரசியல்தீர்வை நாடும் போக்கை இது வெளிக்காட்டுகிறது. சர்வதேச சமுதாயம் இராணுவத்தீர்வை ஏற்க மாட்டாது என்பதே இப்போக்கின் காரணம். கூர்ந்து நோக்கும்போது அரசின் உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. எதுவரினும் பாதிப்புக்களைச் சுமப்பவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் மாத்திரமே. ■

# விடியலின் சோதியாய் மேஜர் சோதியா

**விடுதலைப்புலிகள்** மகளிர் படையணி தனி நிர்வாக அலகாக 'விடியல்' தளத்திலே இயங்கத் தொடங்கிய ஆரம்பகாலம். படையணியின் தளபதியாகத் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மேஜர் சோதியா.

புதியவர்கள் படையத் தொடக்கப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பயிற்சியை முடித்தவர்கள் மூத்தவர்களுடன் கலந்து புதிய அணிகளாகப் பிரிக்கப்படவிருந்தனர். அணிகளைப் பிரிப்பதற்கேற்ப பட்டியலிடும் வேலையைக் கேணல் விதுஷாவிடம் ஒப்படைத்துவிட்டு வேறு வேலையாகச் சோதியா போய்விட்டார்.

அணித்தலைவர்களை மனதிலே வரிசையிடத் தொடங்கினார் விதுஷா. கப்டன் அஜித்தா, மேஜர் சஞ்சிகா என்று தொடர்ந்த பட்டியல் மேஜர் தாரணி வரை நீண்டதும் நின்றுவிட்டது. சோதியாவும், 'மாமி' என்று அழைக்கப்படுகின்ற தாரணியும் தலைவர் அவர்களின் நேரடிக் கவனிப்பில் தமிழ்நாட்டில் ஒன்றாகவே ஒருவருடம் பயிற்சி செய்தவர்கள். சோதியாவைவிடத் தாரணி வயதில் இளையவர். அமைதியும் பொறுமையும் கொண்ட சோதியாவுக்கு நேர் எதிர்த் துருவம் இவர். சட சடவெனச் சொற்களைப் பொரியும் தாரணி எப்போதும் சோதியாவின் முடிவுகளைக் குறுக்கு விசாரணை செய்பவர். வழமைபோலத் தாரணியை அணித்தலைவராக இம்முறையும் விட்டால் நிர்வாகத்தைச் சீராகச் செய்வதில் சிலவேளை சோதியாவுக்குத் தடங்கல்கள் ஏற்படலாம் என நினைத்த விதுஷா, அவரை அணியில் ஒருவராகப் பட்டியலிட்டார்.

வேலை முடிந்து வந்த சோதியா, பெயர்ப் பட்டியலை வாங்கிப் பார்த்த உடனேயே கேட்டார்,

“ஏன் தாரணியை லீடராகப் போடவில்லை?”

“தாரணியக்கா எப்பவுமே உங்களோடு முரண்படுவா. வேலை செய்யிறது சிக்கல்...”

விதுஷாவின் காரணத்தைக் கூர்ந்து கேட்ட சோதியா,

“திறமைக்குத்தான் எப்பவுமே முதலிடம். தாரணி திறமையான போராளி. நல்ல லீடர். எனக்குத் திருப்பிக் கதைக்கிறது அவவின்ர இயல்பு. அதுக்காக அவவுக்குத் தலைமையைக் குடுக்காமல் விடேலாது.”

என்று விளக்கிவிட்டு, பட்டியலில் மாற்றம் செய்யும்படி கூறினார். மேஜர் தாரணி அணித்தலைவரானார்.

“1989ஆம் ஆண்டு காட்டிலே சோதியாக்கா கதைத்தது, பிறகு பல தடவைகள் எனக்கு உதவியிருக்கின்றது. போராளிகளின் தனிப்பட்ட இயல்புகளையும் திறமையையும் சரியாக எடைபோட வேண்டும். மேலானவர்களுடன் முரண்படுகிறார் என்பதற்காக ஒரு போராளியின் திறமையைப் புறம்தள்ளிவிட முடியாது.”

என்று சொல்கின்ற விதுஷா மேஜர் சோதியாவை ஆழ்மன மடிப்புகளின் பதிவுகளில் வைத்திருக்கின்றார்.

*******

எப்போதுமே திறமைக்குத்தான் முதலிடம். லெப்.காரிகை திறமையானவர் என்பதை நெருக்கடி மிகுந்த கிளிநொச்சிச் சமர்க்களம் வெளிக்காட்டியது.

1998ஆம் ஆண்டு எட்டாம் மாதம் நான்காம் திகதியும், எட்டாம் திகதியும் கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்த சிங்களப் படைகள் முறிகண்டி நோக்கிய திசையில் முன்னேற முயன்றபோது இரு தடவையுமே யாழ்.நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்து அரணமைத்திருந்தது மேஜர் சோதியா படையணியே. இரண்டுமே கடுஞ் சண்டைகள்தான். எந்தத் தரப்பின் கை மேலோங்குகின்றது என்பதைச் சண்டை முடியும்வரை ஊகிக்கமுடியாத சண்டைகள்.



லெப்.காரிகை ஒரு காப்பரணின் பொறுப்பாளர். அவரிடமும், கூட நின்ற போராளிகளிடமும் சுடுகலன்கள் இருந்தன. முன்னேறி வந்த இராணுவமோ கனரக ஆயுதச் சூட்டின் செறிவை மேலும் கூட்டிக்கொண்டிருக்க, எறிகணைகள் பின்னரங்கில் விழுந்துவெடிக்க, காது செவிடுபடும்படி சண்டை தொடர்ந்தது.

ஒரு சுடுகலனின் உடமையாளராக இருந்தாலும் கனரகச் சுடுகலன்களும் காரிகைக்குப் பழக்கப்பட்டவை. சுடுகலன்களின் வழுத் திருத்தங்களைப் பயின்றுவிட்டு, சிலகாலம் அவ்வேலையில் ஈடுபட்டதால், எதையும் எந்த நேரமும் இயக்க அவரால் முடியும்.

**இருவர் தமது உடல்களின் கீழ் கையெறிகுண்டுகளின் பாதுகாப்பு ஊசியைக் கழற்றிவிட்டு வைத்திருந்தார்கள். எல்லோரும் வீழ்ந்ததும் நெருங்கிவந்த இராணுவம் ஒரு போராளியின் உடலை இழுக்க முயற்சிக்க, குண்டு வெடித்தது. இழுத்த இராணுவமும் இறந்து வீழ்ந்தது.**

இப்போது இவர்களுக்கு வசதியாக ஒரு இராணுவம் எல்.எம்.ஜி உடன் சுட்டபடி முன்னே வர இவர்களின் அடி இலக்குத் தவறவில்லை.

கைக்கெட்டும் தூரத்தில் ஒரு கனரக ஆயுதம். தவழ்ந்துபோய் அதை இழுத்துவருமாறு ஒரு போராளியை விட்டுவிட்டுத் தானும் இன்னொருவருமாகக் காப்புச்சூடு வழங்க, எல்.எம்.ஜியும் ரவைகளும் காரிகையின் காப்பரணுக்கு வந்து சேர்ந்துவிட்டன.

அடுத்தடுத்த காப்பரண்கள் எதிலிருந்தும் எதையுமே எதிர்பார்க்க முடியாது. எல்லோருக்குமே சண்டை. எதிர்பாராமல் எதிர்த் தரப்பிலிருந்து வந்த இந்தத் 'திடீர் சப்ளை' அந்தக் காப்பரண் சண்டையின் நிலைமையை மாற்றிவிட்டது.

சண்டையின் முடிவில் கிளிநொச்சி மண்ணிலேயே விழிமூடிய லெப்.காரிகை, தனது தனித் திறமையால் சண்டையின் போக்கையே சிறிதுநேரம் திசைமாற்றியிருந்தார்.

*******

எமது விடுதலைப் போராட்டத்தில் பல திருப்பங்கள் ஏற்படக் கால்கோளாக அமைந்த ஓயாத அலைகள் – 03 சமர் தொடங்கிய அடுத்த நாள்.

1999.11.04 மேஜர் அகிலாவுடன் மேஜர் சோதியா படையணியின் கொம்பனியொன்று நெடுங்கேணிச் சந்தியிலிருந்து புறப்பட்டு, குளவிசுட்டான் பகுதிக் காட்டை ஊடறுத்துக் காவல் நிலைகளை அமைத்துக்கொண்டு சென்றது.

முதல் நாள் அதிகாலை ஒட்டிசுட்டானிலிருந்து தலைதெறித்த ஓட்டத்தில் வந்த பெருந்தொகைப் படையினர் குளவிசுட்டான் காட்டுக்குள் பதுங்கியிருந்தனர். புளியங்குளத்துக்குப் போவதுதான் அவர்களின் முடிவாக இருந்திருக்க வேண்டும். அதற்குள் குளவிசுட்டான் காட்டினுள்ளும் புலிகள் ஊடுருவியதை அறியாத இராணுவம் காட்டினூடே நகர்ந்துவர, இடையில் இவர்கள் நிற்க, சண்டை தொடங்கிவிட்டது.



காவல் நிலைக்கான இடங்கள் முழுமையாகத் தெரிவுசெய்யப்பட்டு ஆட்கள் விடப்பட்டு முடியவில்லை. அரண்களுக்கான இடத்தில் விடப்பட்டவர்கள் தமக்கான காப்பரண்களை அமைக்கத் தொடங்கவில்லை. காப்பாக காட்டு மரங்கள்தான் நின்றன. எனவே இராணுவத்தைக் கண்டவர்கள் தமக்கு வாய்ப்பான காப்புக்களைத் தேடிக்கொண்டு சண்டையிட்டனர்.

முன்னுக்குச் சண்டை தொடங்கிவிட்டது. தொங்கல்வரை முழுப்பேரும் விடப்பட்டு முடிவதற்கிடையில், நிலைமைக்கேற்ப முன்னுக்கு நோக்கி நெருங்கியும் இடம் மாறியும் நின்று அணிகள் சண்டையிட்டதில், தொங்கலிலே மேஜர் அகிலா உட்படப் பத்துப்பேர் தனித்துவிட்டார்கள். தமக்கும் ஏனையவர்களுக்குமான இடைவெளியைக் கணக்கிடவும் முடியவில்லை. அதற்குள் அவர்களுக்கும் சண்டை தொடங்கிவிட்டது.

ஒரு கனரக ஆயுதம்கூட இல்லாத நிலைமையில் நின்ற பத்துப்பேரும், தப்பியோடும் நோக்கங்கொண்ட படையினரின் பாய்ச்சல் நகர்வை எதிர்கொண்டனர். கதைத்துப் பேசிச் சண்டையிடவும் வாய்ப்பிருக்கவில்லை. பத்துப்பேருமே ஒரே நேரத்தில் சுடுவதைத்தவிர மாற்று வழியேதுமில்லை. அப்படியிருந்தும் ஓரிருமுறை அகிலாவின் குரல் வானலையில் வந்தது.

“பி.கே யை அனுப்புங்கோ.”

அனுப்புகின்ற நிலையில் யாருமேயில்லை. கனரக ஆயுதங்கள் ஏற்கனவே படையினரை நோக்கித் தீ கக்கியபடிதான் இருந்தன. இருக்குமிடத்தை விட்டுப் புறப்பட்டு அகிலாவிடம் போக, முன்னே நின்று சண்டையிடும் எதிரி ஒப்புதலளிக்கவில்லை.

இருக்கும் ரவைகள் முடியும்வரை அவர்கள் சண்டையிட்டனர். அந்தப் பத்துப் போராளிகளது சண்டைத் திறமையைக் குருதி தேங்கிக்கிடந்த இராணுவத் தலைக்கவசங்கள் பறைசாற்றின. வீழ்ந்து கிடந்த ஒன்பது பேரும் தமது காயங்களுக்குக் கட்டுப்போட்டுவிட்டுத் தொடர்ந்தும் சண்டையிட்டதைக் குருதி தோய்ந்த பஞ்சணைகள் சொல்லின. கடும் காயங்களுடன் தப்பிய எஞ்சிய போராளியும் சொன்னார்.

இருவர் தமது உடல்களின் கீழ் கையெறிகுண்டுகளின் பாதுகாப்பு ஊசியைக் கழற்றிவிட்டு வைத்திருந்தார்கள். எல்லோரும் வீழ்ந்ததும் நெருங்கிவந்த இராணுவம் ஒரு போராளியின் உடலை இழுக்க முயற்சிக்க, குண்டு வெடித்தது. இழுத்த இராணுவமும் இறந்து வீழ்ந்தது.

இவை வெற்றுடம்புகளல்ல.
வெடிமருந்துப் பொதிகள்.

(கவிதைக்கு நன்றி கப்டன் கஸ்தூரிக்கு)

● *மலைமகள்* ●

# தமிழர் தேசமும் சிங்கள தேசமும்



- சென்ற இதழின் தொடர்ச்சி -

தொடர்ந்து 1956ஆம் ஆண்டு அரச இயந்திரத்தை முழுமையான சிங்களமயமாக்கும் வகையில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. அதேவேளை மலையக மக்களை ஒடுக்கும் வகையில் 1948 இல் பிரஜாவுரிமைச்சட்டம் , 1949இல் இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம், தேர்தல்கள் திருத்தச் சட்டம் என்பவை கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து 1967 இல் சிறீமா – சாஸ்திரி ஒப்பந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டங்கள் எல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபோது சோல்பரியின் காப்பீடுகளினால் இவற்றினைத் தடுக்க முடியவில்லை. யாப்பின் 29ஆவது பிரிவு எந்த இனத்தையோ, மதத்தையோ பாதிக்கும் சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றக் கூடாது எனக்கூறியிருந்தது. ஆனால் அந்தப் பிரிவை மீறி சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது அதனை மறுபரிசீலனை செய்ய அதிகாரம் பெற்றிருந்த நீதித்துறையும் அச்சட்டங்களுக்குச் சார்பாக தீர்ப்பினை வழங்கியது. இப்போக்கு நீதித்துறையும் பேரினவாதமயப்பட்டு இருந்ததையே காட்டி நின்றது. பிரித்தானிய கோமறைக்கழகமும் இது விடயத்தில் போதிய பாதுகாப்பினை தமிழர் தேசத்திற்கோ மலையக மக்களுக்கோ வழங்கவில்லை.

பிரசாவுரிமைச் சட்டத்தைத் தெரிந்து இந்திய வம்சாவழியினரான கொடக்கன்பிள்ளை வழக்குத் தொடர்ந்தார். மேற்படி சட்டம் சோல்பரி யாப்பின் 29ஆவது பிரிவிற்கு எதிரானது என வாதிடப்பட்டது. நீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியது. கொடக்கன்பிள்ளை பிரித்தானிய உயர் நீதிமன்றமான கோமறைக்கழகத்திற்கு முறையிட்டார். கோமறைக்கழகம் ஒரு இறைமை பெற்ற பாராளுமன்றம் தன்னுடைய பிரஜை யார்? என்பதனை தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றது எனக் கூறி அரசாங்கத்திற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பின் மூலம் சட்டத்திற்கு அப்பால் தனது காலணித்துவ அரசாங்கத்தால் குடியேற்றப்பட்ட ஒரு பிரஜையின் வாழ்விட உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பினையும் கோமறைக்கழகம் உதாசீனம் செய்தது. அரசியல் யாப்பின் 29ஆவது பிரிவு முதலாவது தடவையாகக் கேலிக்கிடமாகியது. ஒற்றைத் தன்மை வாய்ந்த அரச அதிகாரக் கட்டமைப்பில் ஒட்டு ஏற்பாடுகள் என்பவை வெறும் கேலிப் பொருட்களே என்பது முதலாவது தடவையாக நிரூபிக்கப்பட்டது.

ஒட்டு ஏற்பாடுகளின் இரண்டாவது அனுபவம் தனிச்சிங்களச் சட்ட நிறைவேற்றத்தோடு தெரிந்தது. அரசாங்க எழுதுவினைஞரான கோடீஸ்வரன் இச்சட்டத்தினை எதிர்த்து வழக்குத் தொடுத்தார். மேற்படி சட்டம் யாப்பின் 29ஆவது பிரிவிற்கு எதிரானது என வாதிடப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் கோடீஸ்வரனுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியிருந்தது. அரசாங்கம் கொழும்பு உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தது. கொழும்பு உயர்நீதிமன்றம் முன்னைய தீர்ப்பினைப் போல இறைமையுடைய பாராளுமன்றத்திற்குத் தனது நாட்டிற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் உண்டு என்ற வகையில் தீர்ப்பு வழங்கியது. கோடீஸ்வரன் பிரித்தானிய கோமறைக்கழகத்திற்கு மேன்முறையீடு செய்தார். கோமறைக்கழகம் மேற்படி சட்டம் யாப்பின் 29ஆவது பிரிவிற்கு எதிரானது என்றவகையில் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அரசாங்கம் இத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்தவில்லை.

பொதுவாகவே பேரினவாதத் தலைவர்கள் காலணித்துவ ஆட்சிக் காலத்தின்போது யாப்பு உருவாக்கத்தில் தமிழ்மக்களுக்குச் சார்பாக எதனையும் எழுத விடுவதில்லை. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி அதிகாரம் தங்களின் கைகளில் இருந்தமையினால் எழுதியவற்றையும் நடைமுறைப்படுத்துவதில்லை. எழுதியவற்றிற்கு எதிரான வகையிலேயே சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்துவர். தமிழ்மக்கள் நீதிமன்றங்களில் முறையிடும்போது நீதிமன்றங்களும் பேரினவாத இயந்திரமாக இருந்தமையினால் தமிழ்மக்களுக்கு எதிராகவே தீர்ப்புக்களை வழங்கும். தற்செயலாக தமிழ்மக்களுக்குச் சார்பாக தீர்ப்புக்களை வழங்கினாலும் அவை ஒருபோதும் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. சோல்பரி யாப்பு இது விடயத்தில் பாரிய அனுபவங்களை தமிழ்மக்களுக்குத் தந்தன.

1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டபோது இந்த ஒட்டு ஏற்பாடுகளையும் சிங்கள ஆட்சியார்கள் இல்லாமல் செய்தனர். இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்பில் தமிழ்மக்களுக்கு பெயரளவில் இருந்த இடமும் இல்லாமல் போயின. இலங்கை அரசு முழுமையான சிங்கள அரசாங்கமாக மாற்றம் பெற்றது. இவைபற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

இரண்டாவது தந்திரோபாயம் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுடன் ஆரம்பமாகியது. தமிழர் ஒரு தேசமாக வாழ்வதை சிதைப்பதுதான் அத்தந்திரோபாயம். தமிழ்த் தேசியத்தின் இருப்பினைச் சிதைக்க வேண்டுமானால் வடக்கிற்கும் கிழக்கிற்குமான நிலத்தொடர்ச்சியைத் சிதைக்கவேண்டும். இதற்கு நிலத் தொடர்ச்சியின் மையமாக இருக்கின்ற திருகோணமலை மாவட்டத்தையே அவர்கள் தேர்ந்தெடுத்தனர். ஆரம்பத்தில் குடியேற்றத்தந்திரோபாயம் கல்லோயாவில் ஆரம்பமாகியிருந்தது. அதனை முழுமையாக நிறைவுசெய்யும் பணியைத் தொடர்ந்த அதேவேளை சுதந்திரத்திற்குப் பின்னர் திருகோணமலை மாவட்டக் குடியேற்றங்களிலேயே அதிக கவனம் செலுத்தினர்.

திருகோணமலை மாவட்டத்தை ஒரு வில்போல வளைத்து இக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அல்லைத்திட்டம், கந்தளாய்த்திட்டம், மொறவேவாத் திட்டம், மகாதிவுல் வெவத் திட்டம், பதவியாத்திட்டம் என குடியேற்றத் திட்டங்கள் வளர்ந்தன. இத்திட்டங் கள் மூலம் திருகோணமலை மாவட்டத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் இடையிலான நிலத்தொடர்ச்சியும், திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடையிலான நிலத்தொடர்ச்சியும் சிதைக்கப்பட்டது. அதேவேளை திருகோணமலை நகரப் பிரதேசத்திற்குள் ஊடுருவி நகரத்திலுள்ள தமிழ்மக்களின் இருப்பினைச் சிதைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. துறைமுகம், கடற்படைத்தளம் என்பனவும் இராணுவமயமாக்கப்பட்டன. இச் சிதைப்பு நடவடிக்கையில் விவசாய அமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பன இணைந்து செயற்பட்டன. அரசதுறை, தனியார்துறை, மதபீடம் என்பவற்றுக்கிடையிலும் இது விடயத்தில் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் இருந்தன. காலப்போக்கில் சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், மீனவக் குடியேற்றங்கள், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றங்கள் என எல்லா வகைக் குடியேற்றங்களுக்குமான பரிசோதனைக் களமாக திருகோணமலை மாவட்டம் விளங்கியது.

இக் குடியேற்றங்களே பிற்காலத்தில் ஐந்து சிங்களப் பிரதேச சபைகளும், வாய்க்கால் போல் நீண்டு செல்லும் சேருவல என்ற சிங்கள தேர்தல் தொகுதியும் உருவாகக் காரணமாகியது.

திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்ட அதேவேளை தமிழர் தாயகத்தின் தென்பகுதிக் குடியேற்றமான கல்லோயாத் திட்டத்தினை பூரணப்படுத்தி அதற்கு அரசியல் அந்தஸ்த்துக் கொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 1959இல் இக் குடியேற்றத்தினை மையமாக வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் என்கின்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. இப் பிரதேசத்தில் அரச நிர்வாகத்தின் முக்கிய மையமாக கல்முனை இருந்தபோதும் குடியேற்றப் பிரதேசமான அம்பாறையே புதிய மாவட்டத்தின் தலைநகராக்கப் பட்டது. போதாக்குறைக்கு இம் மாவட்டத்தின் சிங்களச் சனத்தொகையினை செயற்கையாக அதிகரிப்பதற்காக பிற்காலங்களில் மொனராகலை மாவட்டத்துடன் இருந்த மகா ஓயா, பதியத்தலாவை என்கின்ற இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. 1959ஆம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டபோது இக் குடியேற்றப் பிரதேசத்தை மையமாக வைத்து அம்பாறை தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. இத் தேர்தல் தொகுதிதான் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது சிங்களத் தேர்தல் தொகுதியாகும். இம் மாவட்டத்தின் பெயர் சிங்களத் தன்மையுடன் இருக்கவேண்டும் என்பதற்காக தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருந்தும் பிற்காலத்தில் மாவட்டத்தின் பெயர் திகாமடுல்ல என மாற்றப்பட்டது. இன்று சிங்களப் பிரதேச சபைகளும் இம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டன.

1960களில் குடியேற்றச் செயற்பாடு வடமாகாணத்தின் எல்லைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. அதனை அடிப்படையாகக் கொண்டு வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவும் உருவாக்கப்பட்டது.

ஒற்றை அதிகாரக் கட்டமைப்பினைக் கொண்ட ஆட்சியமைப்பு சோல்பரி அரசியல் யாப்புடன் உருவாகி சிங்கள தேசத்துடன் கையளிக்கப் பட்டதைத் தொடர்ந்து ஓரிரு வருடங்களுள்ளேயே மலையக மக்கள் மீது அக் கட்டமைப்பு வாக்குரிமையையும் இல்லாமல் செய்தபோது தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் விழித்துக்கொண்டனர். மலையக மக்கள்மீது பாய்ந்த அதிகாரக் கட்டமைப்பு விரைவில் தங்கள்மீதும் பாயும் என்பதை உணர்ந்துகொண்டனர். கல்லோயாத் திட்டத்தினை முடுக்கிவிடுகின்ற செயற்பாடுகளும் நகர்ந்தபோது ஏற்கனவே பின்பற்றி வந்த அரசியல் கொள்கைகளினால் தமிழர் தாயகத்தின் இருப்பினைப் பாதுகாக்கமுடியாது என்பதையும் உணர்ந்துகொண்டனர்.

இதன் விளைவாகத்தான் இலங்கையின் ஒற்றையாட்சி அதிகாரக் கட்டமைப்பினை ஏற்றுக்கொண்டு அதற்குள் சமவாய்ப்புக்களைக் கோருகின்ற 50:50 கோரிக்கை கைவிடப்பட்டு தமிழர் தாயகத்தை வரையறுத்து அதற்கு அதிகாரத்தைக் கோருகின்ற சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப் பட்டது. இதனை முன்னெடுப்பதற்காகத் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக்கட்சியும் 1949இல் உருவாக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்துடன் தமிழர் அரசியலில் இரண்டு விடயங்கள் நடைபெற்றன.

**இரண்டாவது தந்திரோபாயம் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுடன் ஆரம்பமாகியது. தமிழர் ஒரு தேசமாக வாழ்வதை சிதைப்பதுதான் அத் தந்திரோபாயம். தமிழ்த்தேசியத்தின் இருப்பினைச் சிதைக்கவேண்டுமானால் வடக்கிற்கும் கிழக்கிற்குமான நிலத்தொடர்ச்சியைத் சிதைக்கவேண்டும். இதற்கு நிலத் தொடர்ச்சியின் மையமாக இருக்கின்ற திருகோணமலை மாவட்டத்தையே அவர்கள் தேர்ந்தெடுத்தனர். ஆரம்பத்தில் குடியேற்றத் தந்திரோபாயம் கல்லோயாவில் ஆரம்பமாகியிருந்தது. அதனை முழுமையாக நிறைவுசெய்யும் பணியைத் தொடர்ந்த அதேவேளை சுதந்திரத்திற்குப் பின்னர் திருகோணமலை மாவட்டக் குடியேற்றங்களிலேயே அதிக கவனம் செலுத்தினர்.**

## மதுசங்கர்

**(01)** இதுவரை கொழும்பு - யாழ்ப்பாணம் என்ற மட்டத்தில் மட்டும் செயற்பட்டுவந்த தமிழர் அரசியல் வடக்கு - கிழக்காகப் பரந்தது. இதன் மூலம் தமிழின அரசியல் தமிழ்த்தேசிய அரசியல் என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டது.

**(02)** இதுவரை காலமும் கோரிக்கைகள், மனுக்களை அனுப்புதல், சட்டசபைகளில் பேசுதல் என இருந்த தமிழர்களது அரசியல் அணுகுமுறைகள் மக்களை இணைத்த போராட்ட அணுகுமுறைகளாக மாறின. அத்தோடு பாராளுமன்ற அரசியலுக்குள்ளும் ஆளும்கட்சி அரசியலுக்குள்ளும் செல்லாது எதிர்க்கட்சி அரசியல் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த்தேசிய அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் கட்டமாக மாறும்வரை எதிர்க்கட்சி அரசியலே நடைமுறையிலிருந்தது. இடையில் சிறிதுகாலம் 1965 – 1968 காலப்பகுதியில் ஆளும்கட்சிக்கு ஆதரவான நிலையினைத் தமிழரசுக்கட்சி எடுத்திருந்தாலும் தேர்தல்மூலம் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் மந்திரிசபையில் சேரவில்லை. டட்லி – செல்வா ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதற்காக செனற்சபை உறுப்பினரான மு.திருச்செல்வம் மட்டும் உள்ளூராட்சி மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவரும் பின்னர் திருகோணமலை கோணேசர் ஆலயப்பகுதியினை புனிதப் பிரதேசமாக்கும் திட்டத்தினை அரசாங்கம் நிராகரித்ததினால் அமைச்சரவையிலிருந்து விலகினார்.

தமிழரசுக்கட்சி 1949இல் தோற்றம் பெற்றாலும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் தொடர்ந்தும் இருந்ததினால் 1952 தேர்தலில் பெரியளவிற்கு வெற்றியடைய முடியவில்லை. தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்த தந்தை செல்வா கூட ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்ட நடேசபிள்ளையிடம் காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியுற்றார். திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்ட இராசவரோதயமும், கோப்பாய் தொகுதியில் போட்டியிட்ட கு.வன்னியசிங்கமுமே தமிழரசுக்கட்சி சார்பில் வெற்றிபெற்றனர்.

எனினும் S.W.R.D பண்டாரநாயக்கா 1956இல் ஆட்சியினைக் கைப்பற்றுவதற்காக தனிச்சிங்களச் சட்டப் பிரச்சாரத்தினை முன்னெடுத்தபோது தமிழரசுக் கட்சியும் அதற்கு எதிரான அரசியலை முன்னெடுத்தது. 1956 தேர்தலில் வடகிழக்கின் தமிழ்த்தேர்தல் தொகுதிகளில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியது.

தொடர்ந்து தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதற்கெதிராக காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை நடாத்தியது. சத்தியாக்கிரகங்கள் சிங்களக் காடையர்களினால் மோசமாகத் தாக்கப்பட்டனர். தமிழ்த் தலைவர்களின் பலமான எதிர்ப்பிற்கு மத்தியிலும் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இடதுசாரிக் கட்சிகளைத் தவிர்த்த இரு பிரதான சிங்களக் கட்சிகளும் இச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. சோல்பரி தந்த யாப்பு அதிகாரத்தினைப் பயன்படுத்தி 1950இல் தேசியக்கொடி உருவாக்கத்தின் மூலம் அரச இயந்திரத்தில் சிங்கள அடையாளத்தைப் பொறித்த சிங்களதேசம் 1956 தனிச்சிங்களச் சட்டத்துடன் அரச இயந்திரத்தினைச் சிங்களமயமாக்குவதில் வெற்றிகண்டது.

தமிழரசுக்கட்சியின் போராட்டங்கள் தொடர்ந்தும் வளர்ந்தன. திருமலை, யாத்திரை சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டம் என வளர்ந்தபோது பண்டாரநாயக்கா சற்று இறங்கிவந்தார். பண்டா – செல்வா ஒப்பந்தம் 1957இல் கைச்சாத்திடப்பட்டது. ●

# தமிழ்மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனப்படுகொலைகள்



இலங்கைத்தீவின் வரலாறு அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக பௌத்த மதத்துக்கு முதலிடம், புத்தசாசன அமைச்சினூடாகப் பஞ்சசீலக் கொள்கைகளுக்குப் பிரத்தியேக இடமும் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் அது நடைமுறையில் பெருமளவுக்கு படுகொலைகளால் அறியப்படும் வரலாறாகவே இருந்துவருகிறது. இந்த தவிர்க்கமுடியாததும் சகிக்க முடியாததுமான துர்ப்பாக்கியமான நிலைக்கான அத்திவாரம், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பான காலத்திலேயே இடப்பட்டு இருக்கின்றது.

அப்போதிலிருந்தே இந்த நாட்டை ஆளத் தலைப்பட்ட சிங்களத் தலைவர்கள், சிங்கள பௌத்த தேசியம்கொண்ட ஒரு நாடாகவே இலங்கையை வைத்திருக்க முயன்றிருக்கின்றார்கள். அதனை நடைமுறையில் பேணுவதற்கு சிறுபான்மை இனங்களை அச்சுறுத்தி வைத்திருத்தல் என்ற உத்தியைக் கையிலெடுத்திருக்கின்றார்கள். இது 1883இல் ஆரம்பித்தது. வர்த்தகத்தில் ஈடுபட்ட மலையாளிகளுக்கு எதிராக இந்த நிலைப்பாட்டை அநாகரிக தர்மபாலா, ஏ.ஈ. குணசிங்கா போன்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிதாமகன்கள் முன்னெடுத்துச் சென்றார்கள். அதனை பின்வந்த சிங்களத் தலைவர்களும் தொடர்ந்தார்கள்.

அதற்காக அவர்கள் பிரயோகித்த மிகப் பயங்கரமான ஆயுதமாக இனப் படுகொலைகளே அமைந்தன. அதனை இலங்கை வாழ் தமிழ்பேசும் இனத்தை அச்சுறுத்திப் பணியவைக்கும் தந்திரமாகவே கையாண்டனர். ஆனால் அந்தப் படுகொலைகளை நிகழ்த்திய அரச பயங்கரவாதத்தை, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலம் எதிர்கொள்ளத் தொடங்கியபோது, சிங்களத் தலைமைகளின் திட்டங்கள் ஆட்டம் கண்டன.

இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழ் மக்கள் இணைந்து வாழமுடியாது என்ற முடிவை எடுக்கவேண்டி ஏற்பட்டபோது அதற்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் ஒரு காரணமாக முன்னின்றது. அதனை எதிர்கொள்ளவோ ஜீரணிக்கவோ திராணியற்ற சிங்களத் தலைமைகள் இன்னும் இன்னும் இனப்படுகொலைகளையே பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தன.

வயலில், கடலில், தொழிலில் ஈடுபடும் போது தரைவழி, கடல்வழி போக்குவரத்தில் ஈடுபடும்போது, சொந்தக் குடியிருப்புக்களில், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த போது என பல்வேறு வகையிலும் இனப் படுகொலைகள் இடம்பெற்றன.

இனப் படுகொலைகளின் தொடக்க கால அரசுத் தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவரைத் தொடர்ந்து வந்த டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய அனைத்துத் தலைவர்களினது காலங்களிலும் தமிழினப் படுகொலைகள் இடையறாது நிகழ்ந்திருக்கின்றன.

இலங்கை அரசின் நிகழ்ச்சிநிரலில் பிரதானமானதாக இருந்துவந்த படுகொலையினை ஒவ்வொரு தலைவர்களும் தத்தமது கால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிகழ்த்தியுள்ளனர். ஆயினும், அவை ஒருவரை விஞ்சியதாக மற்றவர் காலத்தில் நடந்திருப்பது தமிழ் மக்கள் எதிர்கொண்ட மிகப்பெரும் சவாலாகும்.

சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட இப் படுகொலைகள் ஒரு அரச பயங்கரவாதமாக பரிணாமமடைந்தபோது இதனை எதிர்கொள்ள, தமிழ்மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்தரிக்கப்பட்டன. அதற்கான சட்ட உருவாக்கங்களும் சிங்களப் பிரதிநிதித்துவத்தை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.



1985ஆம் ஆண்டு நெடுந்தீவு குமுதினிப் படகில் பயணம் செய்த தமிழ்மக்கள் மீது சிங்களக் கடற்படையினர் நடத்திய கொலை வெறியாட்டத்தில் குத்திக்கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மழலை.

1979ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதத்தினூடாக ஒடுக்குவதற்கும் தமிழினப் படுகொலையைப் பல்வேறு தளங்களில் விரிவாக்குவதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றினார். அது தொடர்ந்தும் இற்றைவரை நடைமுறையில் உள்ளது. பேரினவாதக் கட்சிகள் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றினாலும் இந்தச் சட்டத்தின்கீழ் எந்த மாற்றமும் நிகழவில்லை.

இந்தச் சட்டம் தென்னாபிரிக்காவில் போத்தா (Botha) அரசின் மிக மோசமான நிற ஒதுக்கல் சட்டத்தைவிடப் பயங்கரமானது என சர்வதேச யூரர் சபை, சர்வதேச மன்னிப்புச்சபை போன்றன எடுத்துக்காட்டி நீக்கும்படி கோரியபோதும் சிங்களத் தலைமைகள் இம்மியும் அசையவில்லை. இதன் மூலம் அரச பயங்கரவாதம் மேற்கொண்ட சகல இனப்படுகொலைகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளாகவே உலகின்முன் கொண்டுசெல்லப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் நடந்த மிகப்பெரும் படுகொலைகளும் இவ்வாறே நியாயப்படுத்தப்பட்டன; அல்லது மூடிமறைக்கப்பட்டன. ஆலயங்களிலும் அகதி முகாம்களிலும் கூடியிருந்த தமிழர்கள் மீதும் சிகிச்சைக்காக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைகள் மீதும் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது பாடசாலைகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் உயிர்கள் பறிக்கப்பட்டபோதும் அந்தச் சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டன: இது பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் என்று வேறுபாடில்லாமல் தமிழர்கள் என்பதற்காக அனைத்துத் தரப்பினர் மீதும் பிரயோகிக்கப்பட்டது.

சிங்களத் தலைமைகள் தமது அரசியல் ஆதாயத்துக்காக அரசியல் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொண்ட தமிழினப் படுகொலைகள் மிகக் குரூரமானவையாக — மனிதாபிமானம் அற்றவையாக இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டியே வந்துள்ளன. இதற்கு 1983, ஜூலை 11இல் ஜே.ஆர் லண்டன் டெலிக்கிராப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி நல்லதொரு சான்றாகும்.

*"நான் யாழ்ப்பாணத்து மக்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். அவர்களது உயிர், உடல்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன்: எனது அரசாங்கம் எதைச் செய்யவேண்டுமென முடிவெடுத்துவிட்டதோ அதைச் செய்தே தீரும்"* என்று கூறியிருந்தார்.

சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனை இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள நாட்டிற்குரியது என்பதாகக் கட்டி வளர்க்கப்பட்டுவர, காலத்துக்குக் காலம் தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. குற்றவியல் சட்டங்களினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள், ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் குடியேற்றப்பட்டனர்.

இச் சிங்களக் குடியேற்றமானது 1940இல் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய காணி, விவசாய அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்கா அரசமரக் கன்றொன்றை நாட்டிய பின் ஆற்றிய உரை கவனத்திற் கொள்ளத்தக்கது. *"இன்று நாட்டப்படும் இந்த அரசமரம் வளர்ந்து பெரு விருட்சமாகும்போது இந்த மண்ணில் உங்களைத் (குடியேற்றப்பட்ட சிங்களவரை) தவிர வேறெவரும் குடியிருக்கக்கூடாது."*

> **"1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (K.M.S) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக — பெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள்."**

இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் பலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டு நீண்டகால சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிய குற்றவாளிகளாவர். அவர்களைக் கொண்டு வந்து தமிழர்களின் எல்லைப்புறக் கிராமங்களில் குடியேற்றியதன் மூலமாக தமிழினப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தமிழர் வாழ்விடங்கள் துண்டுபோடப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டன. அத்துடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் இராணுவ மயப்படுத்தப்பட்டு அன்றாடம் தமிழ் மக்கள் தனித்தனியாகவும் கூட்டமாகவும் கொல்லப்படும் சம்பவங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

தமிழ்மக்கள் மீதான முதல் இனப் படுகொலை தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட தினமான 1956, ஜூன் 5ஆம் திகதி நடைபெற்றது. அம்பாறை கல்லோயாவில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அக் கிராமத்தில் பூர்வீகவாசிகளான தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பின்போது 150 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். அன்றைய தினமே ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமான பாலியல் வன்முறைச் சம்பவமும் ஆரம்பமானது.

தமிழர்களுக்குத் தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல சிறைச்சாலைகளிலும்கூட பாதுகாப்பு இல்லை என்பதையும் சிறிலங்கா அரசு காலத்துக்குக் காலம் நிரூபித்து வந்தது. வெலிக்கடைச் சிறை, பூசா, களுத்துறை, பெலவத்தை, பிந்துனுவெவ தடுப்பு முகாம்கள், திருகோணமலைச் சிறை போன்றவற்றில் நடைபெற்ற தமிழர் படுகொலை தொடர்பாக எவருமே தண்டிக்கப்படவில்லை. வெலிக்கடைச் சிறையில் 1983, ஜூலை 25இல் 35 தமிழர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் ஜூலை 27இல் அதே சிறையில் எஞ்சியோர் பதினெட்டுப்பேர் படுகொலை செய்யப்படக் கூடியதாக இருந்த தென்றால் தமிழர்களின் உயிர் தொடர்பாகச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் எவ்வாறிருந்தன என்பதை உணரமுடியும்.

இவ்வாறு நீண்ட இந்த இன அழிப்பு முயற்சிகளினால் இதுவரை அறுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். ஆயினும் இவற்றால் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் தடைப்படவில்லை. மாறாக அது முனைப்படைந்து கூர்மை பெற்றுள்ளது. இவ் விடுதலைப்போராட்டம் இன்று அரசியல், இராணுவ தளங்களில் மிகப் பலம் மிக்கதாக பரிணாமமடைந்துள்ளது. தேசிய விடுதலைப்போராட்டத்தின் தேவை வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் இதனைப் புலமைசார் நிலையில் வலியுறுத்தி வருபவர்களும் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படும் துர்ப்பாக்கிய நிலையை சிங்களப் பேரினவாதம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளது.

சட்டமேதை குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம் போன்றவர்களுடைய படுகொலைகள் சிங்களப் பேரினவாதத்தின் அகோர முகத்தின் வெளிப்பாடுகளாகும்.

தமிழினப் படுகொலைகளுக்காக உலகின் மிகக் கொடூரமான முறைகளை எல்லாம் தனது படைகளுக்குப் பயிற்றுவித்துச் செயற்படுத்திப் பார்க்கும் அரசியல் தலைமைத்துவங்கள் தொடர்ந்தும் இலங்கைத் தீவை ஆட்சிசெய்கின்றன. இதற்கென வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பயிற்சியளித்துள்ளனர். இதனைச் சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவரே வெளிப்படையாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். சிறிலங்கா இராணுவத்தில் விசேட குழுக்களின் உறுப்பினர்கள் என இனங்காணப்பட்ட 300—400வரையான ஆட்களுக்கு

(தொடர்ச்சி 13ஆம் பக்கத்தில்...)

# அறுவடை நாட்களின் வரை

நள்ளிரவுப்பொழுதில் 'சவுண்ட் அலேட்' அனைவரையும் துள்ளியெழவைத்தது. எல்லோரும் தங்களின் நிலைகளுக்கு விரைந்து நிலையெடுத்தார்கள். சில மணித்துளிகளில் உலங்குவானூர்திகள் தாளப்பறந்து சென்றன. அடர்ந்தகாடு என்பதால் அவர்களின் நிலைகள் வெளித்தெரிய வாய்ப்பிருக்கவில்லை.

முதன்மை ஆசிரியர்கள் இருவரும் ஒவ்வொரு நிலையாகப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். நிலைகள் சீராக இருந்ததால் சிறிதுநேரத்தில் 'வித்றோ சவுண்ட்' அடிக்கப்பட்டது. அவர்கள் தங்களின் தங்ககங்களுக்குத் திரும்பினார்கள்.

அது ஒரு படைய தொடக்கப் பயிற்சிமுகாம். அந்த முகாமிலிருந்து பல மைல்களுக்கப்பால் சிற்றாறு ஓடுகிறது. அதற்கப்பால் கண்காணிப்பு நிலைகள் உள்ளன. அந்த இடம் வரைதான் முகாமுக்குத் தேவையான பொருட்கள் வரும். அங்கிருந்து ஆற்றைக்கடந்து பயிற்சிமுகாம்வரை பொருட்களை 'கம்பால' அடிக்கவேண்டியிருக்கும். மழை நாட்களில் சிற்றாறு பெருக்கெடுத்து ஓடும். அந்த நாட்களில் ஆற்றின் இருபக்கமும் உள்ள மரங்களில் ஆற்றுக்குக் குறுக்காக 'கேபிள்' கட்டி பொருட்கள் பக்குவமாய் பரிமாற்றப்படும். நிலாக்காலப் பொழுதுகளிலும் சிலவேளைகளில் மழைக்கால இருளிலும் நீண்ட நடைப் பயணம் பாரச்சுமையுடன் தொடரும்.

மாசிப்பனி மூசிப் பெய்துகொண்டிருக்கும். முதன்மை ஆசிரியர் ஒருவருக்கு 'தொய்வு' இருந்தபோதும் அதனைப் பொருட்படுத்தாமல் அதிகாலையிலேயே எழுந்து பயிற்சியைத் தொடக்கி வைப்பார். மற்றையவர் கறுத்த மெலிந்த உருவமாக இருந்தாலும் காத்திரமான பயிற்சியாளராக இருந்தார். அவரே பயிற்சியாளர்களை வழிநடத்துவார்.

## பதிரப்படாத பக்கங்கள்

– ஆ.ந.பொற்கோ –



பயிற்சி முகாமுக்குத் தேவையான கிணறுகளை பயிற்சியாளர்களே வெட்டினார்கள். மண்வெட்டிகள் மடிந்துடைந்தன. பிக்கானில் பொறிபறந்தது. வாரமொருமுறை வரும் விடுப்பு நாளில் ஆற்றிலொரு அமுதக்குளிப்பு நடக்கும். அன்று அவர்களின் பல்துறை ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்வு அரங்கேறும். தொய்வு நோய்க்கான 'தொங்குமான் பொரியல்' சிலவேளை அவர்களுக்கும் கிடைக்கும்.

முதன்மை ஆசிரியர்களுடன் துணையாசிரியர்களும் இணைந்து புதிய போராளிகளை புடம்போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த ஆசிரியர்களின் அணுகுமுறை அவர்களைக் கவர்ந்தது. உணர்ச்சிபொங்க உத்வேகமாய் பயிற்சியெடுத்தார்கள்.

காடுமுழுவதும் 'உலுவிந்த மரங்கள்' நின்றன. உலுவிந்தப் பழங்கள் கருஞ்சிகப்பில் கண்ணைச் சிமிட்டின. அவர்களுக்கு அதில் அலாதியான விருப்பமிருந்தது. அதிகம் சாப்பிட்டால் உடல்நிலை பாதிப்படைந்துவிடுமென்பதால் ஆசிரியர்கள் அதற்கு ஒரு வரையறை போட்டிருந்தார்கள்.

அவர்களுக்கு சுகயீனம் ஏற்பட்டால் பராமரிக்க மருத்துவ விடுதியும் இருந்தது. ஆசிரியர்கள் அவர்களின் உடல்நலத்தில் கவனமாக இருந்தார்கள். அங்கு ஒரு தாயின் அரவணைப்புத் தென்படும். சுகயீனமாய் நடிப்பவர்களுக்கு சிறு ஒறுப்புகளுமிருக்கும்.

அந்தப் பயிற்சிமுகாம் அவர்களுக்கு ஒரு அற்புதமான உறவுநிலையை உருவாக்கியது. ஒருவருக்கொருவர் தங்களின் மனக்கிடக்கைகளை மனம்விட்டு பகிர்ந்துகொண்டார்கள். சகோதர உறவு இறுகப் பிணைந்தது.

பயிற்சி முடிவுநாள் வந்துசேர்ந்தது. பிரிய மனமின்றிப் பிரிந்துசென்றார்கள். பல வரலாற்றுச் சமர்களில் பங்கெடுத்தார்கள். அங்கு எதிர்பாராமல் ஆசிரியர்களையும், சக தோழர்களையும் சந்தித்து அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள்.

பல ஆண்டுகள் கடந்துவிட்டன. சக தோழர்கள் சிலர் சமர்களில் காவியமாகியிருந்தார்கள். அவர்களுக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களும் வீரச்சாவடைந்துவிட்டார்கள். ஆசிரியர்களால் புடம்போடப்பட்ட அவர்கள் பல்துறையாற்றலுடன் இலட்சியத்தில் இரண்டறக்கலந்து அறுவடை நாட்களுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். ●

(12ஆம் பக்கத் தொடர்ச்சி )

கட்டுப்பாடின்றிக் கொலை செய்வதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டதாக சண்டே லீடருக்கு வழங்கிய தகவலில் தெரிவித்திருக்கின்றார்.

பொதுப்படையாகவே சிறிலங்காப் படையினர் எத்தகைய மனோபாவத்துடன் தயார்ப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு விசேட பயிற்சியை அளிக்க வந்த பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரியே எடுத்துரைத்துள்ளார். அவர்களுக்கு நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. தமிழரைக் கொன்றொழிப்பதைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் இல்லை. நாங்கள் பயிற்சியளித்தவர்களில் சிலர் மிகக் கொடூரம் புரிந்தவர்கள் என Immediate Action என்ற தனது நூலில் விபரித்திருக்கின்றார்.

1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (K.M.S) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக-பெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்மக்களையும் தமது பிரஜைகளே என வெளியுலகிற்குக் கூறிக்கொள்ளும் தன்னை ஒரு ஜனநாயக அரசாகக் காட்டிக் கொள்ளும் சிறிலங்கா தமிழினத்தை அழிப்பதற்காக எவ்வாறு தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதற்கு இவை சிறு எடுத்துக்காட்டுக்களே.

சிறிலங்கா அரசினதும் படைத்துறையினதும் இருப்பும் வளர்ச்சியும் தமிழினப் படுகொலைகளையே நோக்கமாகக் கொண்டவை. இவையின்றி அவற்றால் தம்மைத் தக்க வைத்துக்கொள்ள இயலாது என்பதுதான் யதார்த்தமானது. கடந்த மூன்றரை வருடங்களாக நிலவும் சமாதானத்துக்கான சூழலிலும் இது புலப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

கிழக்கில் காஞ்சிரங்குடாவில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையும் மட்டக்களப்பு சந்திவெளியிலும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும் மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் சிறிலங்கா படைப் பாரம்பரியத்தின் வெளிப்பாடே ஆகும். இவ்வாறே படைகள் நேரடியாகப் படுகொலைகளை நிகழ்த்த முடியாது போயிருக்கும் சூழ்நிலைகளில் தனது புலனாய்வாளர்கள் ஊடாகத் தமிழ் மக்களை இலக்குவைத்து தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக கிழக்கிலும் தென்னிலங்கையிலுமாக ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

தமிழ்மக்களது போராட்டம் உரிமைப் போராட்டமாகத்தான் ஆரம்ப காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக சாத்வீகப் போராட்ட வடிவத்தையே பின்பற்றினார்கள். தமிழ்மக்களது உரிமைப் போராட்டம் இராணுவ பலத்தின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ளப்பட்டது.

சாத்வீகப் போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறையாலும் இனப் படுகொலைகளாலும் சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டன. இந்த நிலையில் இராணுவ ஒடுக்குமுறைகளையும், இனப் படுகொலைகளையும் எதிர்கொள்ளவே இளைஞர்கள் ஆயுதம் தாங்கினார்கள். இதனால் தமிழ்மக்களது உரிமைப் போராட்டங்கள் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பரிணமிக்கலாயின.

இந்த நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இனப் படுகொலைகளைத் தீவிரப்படுத்தலாயிற்று. மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் தமிழர் தாயகத்தை விடுவிக்கவும் அவர்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்கவும் விரிவாக்கம் பெற்றபோது அதுவொரு மக்கள் போராட்டமாக விரிவடையலாயிற்று. இந்தக் கட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு அரசியல், இராணுவ பரிமாணங்களில் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை, நிலைமை ஏற்பட்டது.

அதனால் விடுதலைப்புலிகள் ஒரு விடுதலை இராணுவமாகவும் அதேவேளையில் தமிழ்த்தேசியப் பாதுகாப்புப் படையாகவும் பல்வேறு தளங்களில் செயற்படலாயினர். இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காவிடில் இலங்கைத்தீவில் தமிழ்மக்களது வாழ்வும் இருப்பும் எத்தகைய அவலத்திற்குள்ளாகியிருக்கும் என்பதை சிங்களப் புத்திஜீவியான பிரபல சட்டத்தரணி சந்திரபால குமாரகே அவர்களது பின்வரும் கூற்று தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

'தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருக்காதிருந்தால் மக்களுடைய அழிவை யாராலும் தடுத்திருக்க முடியாது. விடுதலைப் புலிகள் பலம் பொருந்திய அமைப்பாக உருவெடுத்திருக்கின்றமையாலேயே தமிழ் மக்கள் இன்று ஓரளவு நிம்மதியாக வாழ்கின்றார்கள்.' (சட்டத்தரணி – ஊடகவியலாளர் சந்திரபால குமாரகே) ●

## விடுதலை வரலாற்றின் ஒரு காலம்

யார் கிட்டு என்று
யாரும் கேட்டால்
சொல்வதற்கு விடை
ஏதுமில்லை
ஏனெனில்
கிட்டு
எல்லாமாக இருந்தான்
அந்தச்
சகலகலா வல்லவனிற்கு
நிகர்
எவருமின்றி வாழ்ந்தான்.

கிட்டு மாமா
மகிழ்ச்சியில்
நிறையும்
மழலைகள் உள்ளம்

கிட்டு வாடா
தமிழீழத் தாய்களின்
வாயெல்லாம் சிரிக்க
வாரியொரு முத்தம்
நெற்றியில் விழும்

கிட்டண்ணை வாறார்
சந்தியில் நின்று
வம்பளப்போர்க்கு
தன்பாட்டில்
சலம்போகும்.

கிட்டண்ணை சொல்லுங்கோ...
நம்பிக்கையும் துணிவும்
சண்டைப் புலிகளிற்குள்
கண்டபடி நுழையும்
கிட்டுவா கொமாண்டர்
கோட்டைப் படைகள்
ஓட்டம் பிடிக்கும்.

கிட்டு ஒரு ஆசான்
ஆர்.பி.ஜீ இப்படி அடி
கமராவை இப்படி பிடி
ப்பாசி நருவதெப்படி
காவியம் எழுத

ஓவியம் வரைய
ஊடகம் சிறக்கக்
கற்றுக்கொடுத்தான்.

கிட்டன் வந்திருந்தால்
பாதிச் சுமையின்
பாரம் தாங்கியிருப்பான்
தலைவனின் தவிப்பிது.
கிட்டு...
அந்த மொட்டைத்
தலைக்குள்
தமிழர் நாட்டை
நிறுவும் கனவே
நிறைந்து கிடந்தது.

கிட்டுவின் வீரம்
வெளியே வந்தபோது
முகாம்களுக்குள்
முடங்கியது



– சேந்தோன் –

சிங்களச் செருக்கு

கிட்டுவின் காலம்
உதயமானபோது
புலர்வு கண்டது
புலிகள் அரசு.

கிட்டுவின் கால்கள்
நடந்த திசையினில்
பதிந்துகொண்டது
வெற்றி வரலாறு

கிட்டுவின் ஆற்றல்
விரிந்த பொழுதினில்
நிமிர்ந்து நின்றது
தமிழர் தேசம்

கிட்டுவின் தேகம்
எரிந்த பொழுதினில்
நொருங்கி உடைந்தது
தமிழரின் இதயம்.

எந்தச் சதியும்
எரியும் என்பதை
எடுத்துக் காட்டியது
அவன் மரணம்

வங்கக் கடலில்
முடிந்து கொண்டது
அவன் பயணம்
எங்கள் மனதில்
பதிந்து கொண்டது
அவன் விரதம்

கிட்டு மாமா...
காற்சட்டையோடு நின்று
உங்கள்
காரிற்கு கை காட்டியது
நேற்றைப் போல்
இருக்கிறது

இன்றும் நிறைவாக நெஞ்சில்
கிட்டண்ணாவாய்...

# அமைதியான ஆளுமை, ஆர்ப்பாட்டமற்ற ஆற்றல்

***மட்டக்களப்பு*** மாவட்டத்தின் விடுதலைப்புலிகளின் தளப்பிரதேசம். அடிப்படைப் பயிற்சி முகாம் ஒன்று நிறைவடைந்து புதிய போராளிகள் பல்வேறு முகாம்களுக்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இயல்பாகக் காணப்படும் புத்துணர்வும், கலகலப்பும் அவர்களின் முகங்களில் வெளிப்படையாகவே தெரிந்தது. ஆயினும் எமது முகாமிற்கு வரவிருந்த புதிய போராளிகள் அநேகரின் முகங்களில் ஒருவகையான கலக்கத்தை அவதானிக்க முடிந்தது.

காரணத்தை ஊகிப்பது அவ்வளவு கடினமல்ல.

படைத்துறைப் பயிற்சிப் பிரிவாக செயற்பட இம் முகாம் சற்று வித்தியாசமானதுதான். மிகக் கடுமையான விதிமுறைகளுக்கும், விசித்திரமான தண்டனைகளுக்கும் பெயர் பெற்றது. அதேவேளை ஆற்றல் விருத்திக்கு அது அடித்தளமாகவும் இருந்தது.

'பாவம் நல்லா மாட்டுப்பட்டுத்துகள், எப்படித்தான் நிண்டு பிடிக்கப்போகுதுகளோ' மூத்தபோராளி ஒருவன் பரிதாபப்பட்டான்.

'ஏன் அண்ண, உயிரையும் கொடுப்பம் எண்டுதானே போராட வந்தனாங்க, நிட்சயம் எதுக்கும் நிண்டுபிடிப்பம்.' மிக அமைதியான சுபாவம் கொண்ட அந்தப் புதிய போராளியிடமிருந்து வந்த நம்பிக்கையும், உறுதியுமிக்க வார்த்தைகள் எம்மை ஆச்சரியப்பட வைத்தன.

'தம்பி உங்கட பேரென்ன?'

'சித்தார்த்தன்'

ஆம். அவனிடம் தொனித்த அந்த நம்பிக்கை,உறுதி அவன் போராளியாக வாழ்ந்த காலம் முழுவதும் அவனிடம் நிறைந்தே இருந்தது... இன்னும் வலிமையாய்....

*******

மட்டக்களப்பில் 1992இல் தனது ஆரம்பப் பயிற்சியை நிறைவுசெய்த 'சித்தா' (நாங்கள் அவனை அப்படித்தான் அழைப்போம்) படைத்துறைப் பயிற்சிப் பிரிவில் இணைக்கப்படுகின்றான்.

**'லெப்.கேணல் சித்தா ஒரு அமைதியான சுபாவம் கொண்ட ஆற்றல்மிக்க லீடர், ஒரு நல்ல பயிற்சி ஆசிரியர், களத்தில் பலதடவை காயப்பட்டவர், கடைசிச் சண்டையில் கூட மிக உறுதியாகச் செயற்பட்டவர்....' என சித்தா மாஸ்ரரைப் பற்றி தேசியத்தலைவர் கூறிக்கொண்டுபோக எமக்கு ஆச்சரியமாகவும், அதேவேளை மிகப் பெருமையாகவும் இருந்தது. ஒரு உண்மை வீரனுக்குக் கிடைக்கக்கூடிய அதியுயர் கௌரவம் இதைத்தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்?.**

இந்தப் பிரிவில் நின்றுபிடிப்பது கஸ்டம் என்று கூறப்பட்ட அந்த நாட்களில் அவன் இங்கு தன்னை மிக விரைவாக தகவமைத்துக் கொண்டான். தொடர்சியான பயிற்சி, மிகக் கடினமான வேலைகள், புதிரான பாடங்கள், எதிரியின் தாக்குதல்கள், எமது வலிந்த தாக்குதல் முன்னெடுப்புகள் என்றிருந்த அந்த நாட்களில், சராசரிக்கு மேற்பட்ட ஒரு போராளியாக அவன் இனங்காணப்பட்டான்.

மிக அமைதியான சுபாவமும், உதவும் பண்பும், கடினமான வேலைகளைக்கூட தானாக விரும்பி ஏற்றுச் செய்யும் பக்குவமும், அவனது செயற்திறணும் போராளிகள் மத்தியில் அவனுக்கென்றொரு இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.

*******

பூநகரி கூட்டுப்படை முகாம் மீதான தவளை நடவடிக்கையே வடதமிழீழத்தின் அவனது முதற் களமாக அமைந்தது. சமர் முடிந்த கையோடு எழுதுமட்டுவாள் பகுதியில் பயிற்சி ஆசிரியர்களுக்கான மேலதிக பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப் பயிற்சிக் காலத்தில் பயிற்றுவித்த ஆசிரியர்களே பெருமைப்படக்கூடிய அளவிற்கு அவனது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அதேபோன்று, அவன் பயிற்சி வழங்கத் தொடங்கியபோது, வழமையான 'பயிற்சி ஆசிரியர்கள்' என்ற தோற்றப்பாட்டிற்கு அப்பால் ஒரு வித்தியாசமான பயிற்சி ஆசிரியராக அவன் இனங்காணப்பட்டான். செயற்திறண், முன்மாதிரி, அணுகுமுறை என்பவற்றால் 'சித்தா மாஸ்ரர்' என்ற பெயர் போராளிகளின் மனங்களில் நிலைபெற்ற ஒன்றாக மாறிவிட்டிருந்தது.

படைத்துறை தொடர்பிலான தொழிநுட்பக் கற்கைநெறி ஒன்றினைப் பூர்த்திசெய்து தென்தமிழீழம் திரும்பத் தயாரான வேளை சிறிலங்காப் படையினரால் 'முன்னேறிப்பாய்தல்' நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்நடவடிக்கைக்கு எதிராக எம்மால் முன்னெடுக்கப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' உட்பட்ட தாக்குதல்களில் பங்கு கொண்டான். இவற்றைத் தொடர்ந்து கொக்குளாய் இராணுவமுகாம் தாக்குதலிலும் பங்கெடுத்தான்.

அவன் சார்ந்திருந்த ஜெயந்தன் படையணி மீண்டும் தென்தமிழீழம் திரும்பியபோது சித்தாவும் புறப்பட்டான்.

*******

பயிற்சி ஆசிரியர் பிரிவில் 1992 இல் இணைந்து கொண்டவன் மிக விரைவிலேயே அப்பிரிவின் பொறுப்பாளராக உயர்ந்தான். இக் காலகட்டத்தில் மட்டக்களப்புப் பகுதியில் இடம்பெற்ற பல தாக்குதல்களில் பங்கு கொண்டான்.

1993இல் ஜெயந்தியாய இராணுவ முகாம் தாக்குதலுடன் ஆரம்பமான இவனது சமர்க்களப் பட்டறிவு, மாவடிவேம்பு இராணுவ முகாம் , கிண்ணையடி இராணுவ முகாம், குடாப்பொக்கணை பொலிஸ் நிலையம், புளுகுணாவ விசேட அதிரடிப்படை முகாம், மாவடிவேம்பு இராணுவ முகாம், கறப்பள இராணுவ முகாம், வவுணதீவு இராணுவ முகாம் என விரிந்ததுடன் எம்மால் நடாத்தப்பட்ட பல்வேறு பதுங்கித் தாக்குதல்களும் முற்றுகை முறியடிப்புகளும் அப்பட்டறிவிற்கு மேலும் வலுச்சேர்த்தன.

*******

யாழ்.குடாநாட்டிற்கு பாதை திறக்கவென சிறிலங்காப் படைத்தரப்பு முன்னெடுத்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது மீண்டும் தென்தமிழீழப் படையணிகள் வன்னி நோக்கி விரைந்தன. எதிர்கொள்ளப் போகும் சமரின் பரிமாணத்தைக் கருத்தில் கொண்டு ஜெயந்தன் படையணி மீள் ஒழுங்கு செய்யப்பட்டது. இதன்போது ஆற்றல் மிக்க அணித்தலைவர்களின் தேவையும் உணரப்பட்டது. இவ் அடிப்படையில் ஒரு கொம்பனி கொமாண்டராக சித்தா நியமனம் பெற்றான். அந்நாட்களில் கொம்பனி கொமாண்டராக, கொம்பனி மேலாளராக, குறித்ததொரு சந்தர்ப்பத்தில் படையணியின் தாக்குதற் தளபதி என, பொறுப்பேற்று களங்களில் அணிகளை வழிநடத்தினான்.

-சுடரவன்-



கந்தசாமி கலைநேசன்
பண்டாரியாவெளி
மட்டக்களப்பு

தாயின் மடியில் : 29.11.1972
தாயக மண்ணில் :27.09.1998

**லெப்.கேணல் சித்தார்த்தன்/சித்தாமாஸ்ரர்**

*******

'ஜெயசிக்குறு' எதிர்ச் சமர்முனையின் மாங்குளப் பிரதேசம், முன்னணிக் காவலரண் பகுதியில் அவனை சந்திக்கிறோம். கையில் ஏற்பட்ட விழுப்புண் முற்றாக மாறாத நிலையில் அவன் இயல்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். 'என்ன சித்தா வழமைபோல காயம் மாறமுதல் வந்தாச்சி போல.... இது எத்தனையாவது....' சித்தாவிடமிருந்து அந்த வழமையான புன்னகையே பதிலாகக் கிடைத்தது.

'முதல் மூண்டு... ஜெயசிக்குறுவில நாலு.... மொத்த ஏழு அருகில் நின்ற போராளி அழுத்தமாய் கூறுகின்றான்.

ஓ... இவன் என்ன மாதிரியான மனிதன். ஏற்கனவே மூன்றுமுறை, அதில் கறப்பளையில் மார்பை ஊடறுத்த ரவை அவனை மரணத்தின் வாசலுக்கே கொண்டுசென்றது. தாண்டிக்குளத்தில் காயமடைந்து அது மாறமுன்பே களம் வந்தான், மீண்டும் பெரியமடுவில்... அது மாறுமுன் மீண்டும் களம், அடுத்தது ஓமந்தையில்... குணமாகும் முன் மாங்குளம் வந்தான், மாங்குளத்திலும் அவனைத்தேடி ரவை வந்தது. இதோ இப்போது கைக்காயத்துடன் முன்னணியில்....

*******

ஓயாத அலைகள் - 2. கிளிநொச்சி பிரிகேட் தளத்தைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல்கள் ஆரம்பமாகின. இத் தாக்குதல்களில் ஜெயந்தன் படையணியின் கொம்பனிகள் வெவ்வேறு முனைகளில் சண்டையிட வேண்டியிருந்தது. சித்தாவின் அணிக்கு கிளிநொச்சி குளப்பகுதி முன்னணி அரண் வரிசையைக் கைப்பற்றி குறித்த இலக்கு நோக்கி தாக்குதல் தொடுக்கும் பணி வழங்கப்பட்டிருந்தது. நீர் நிறைந்திருந்த குளத்தின் ஊடாக மிக இரகசியமாக நகரவேண்டியிருந்தது. நகர்வை மிகச் சிறப்பாகச் செய்த அவ்வணி குள பண்டை கடந்து கொண்டிருந்தபோது அங்கு சண்டை மூண்டது.

சாதகமற்றதொரு சூழ்நிலையில், தரையமைப்பில் சண்டை தொடங்கி விட்டது. உக்கிரமான தாக்குதல், அந்த அணியின் வீரர்கள் அதன் தலைவனைப்போல் உறுதியானவர்கள், இறுதிவரை போராடக்கூடியவர்கள்.....

அடுத்த நாள் கிளிநொச்சி பிரிகேட் தளம் அழிக்கப்பட்டு, கிளிநொச்சி நகர் மீட்பு வெற்றிச் செய்தி வெளியாகிக் கொண்டிருக்கின்றது....

*******

குறித்ததொரு பயிற்சித் திட்டம் தொடர்பாகக் கதைப்பதற்காக தேசியத் தலைவரால் அழைக்கப்பட்டிருந்தோம். மூத்த தளபதிகள் சிலருடன் தேசியத் தலைவர் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது எல்லைப்படை வீரர்களுக்கான பயிற்சிப் பாசறைக்கு பொருத்தமான பெயர் சூட்ட வேண்டும் என மூத்த தளபதி ஒருவர் கோரிக்கை வைக்கிறார். பலரும் பல்வேறு பெயர்களை முன்மொழிகின்றனர். தேசியத் தலைவரின் முகத்தில் சிந்தனை ரேகைகள்.... 'சித்தா பயிற்சிப் பாசறை என்று பெயர் வையுங்கோ.'

'லெப்.கேணல் சித்தா ஒரு அமைதியான சுபாவம் கொண்ட ஆற்றல் மிக்க லீடர், ஒரு நல்ல பயிற்சி ஆசிரியர், களத்தில் பலதடவை காயப்பட்டவர், கடைசிச் சண்டையில்கூட மிக உறுதியாகச் செயற்பட்டவர்....' என சித்தா மாஸ்ரரைப் பற்றி தேசியத் தலைவர் கூறிக்கொண்டு போக எமக்கு ஆச்சரியமாகவும், அதேவேளை மிகப் பெருமையாகவும் இருந்தது. ஒரு உண்மை வீரனுக்குக் கிடைக்கக்கூடிய அதியுயர் கௌரவம் இதைத்தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?.

எமது போராட்ட வரலாற்றில் ஒரே களத்தில் நான்குமுறை விழுப்புண் ஏற்று ஒவ்வொரு விழுப்புண்ணும் மாறும் முன்பே களம் வந்து படைநடத்திய வீரன் அவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெரும் சமர்க்களத்தில் அவன் ஐந்தாவது முறையாகவும் காயப்பட்டான். மீண்டும் அவன் களம் வரவில்லை, வரவேயில்லை.

சித்தா....அமைதியான ஆழுமை. ஆர்ப்பாட்டமற்ற ஆற்றல். ●



# "எங்கட ஊரில நாங்க இருக்கேலாது, ஆனா அவங்க இருக்கிறாங்க"

**தமிழ்மக்கள்** மீதான சிங்களப் படைகளின் படுகொலை வெறியாட்டம் சிறு இடைவெளியின்பின் மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதனால் தமிழ்பேசும் மக்கள் குறுகுகியகால இடைவெளிக்குள் பெருந்தொகையில் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். சிங்களப் படைகளினதும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக் களினதும் இத்தகைய பயங்கரச் செயற் பாட்டால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.



சாவகச்சேரியில் இருந்து இரா ணுவ அச்சுறுத்தல் காரணமாக வன்னிக்கு வந்திருக்கும் சதாசிவம் என்ற 49 வயதுடைய விவசாயி ஒருவரைச் சந்தித்து அங்கு என்ன நடக்கிறது என்று கேட்டோம்.

அவர் எங்களுடன் பகிர்ந்தவற்றில் சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.

'நான் ஒரு விவசாயி. எனது கடுமையான உழைப்பால்தான் குடும்பத்தை கொண்டுசெல்கின்றேன். எனது பிள்ளைகள் நான்கும் கல்வி கற்கிறார்கள். இராணுவ நடவடிக்கையால் நாங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள். 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவம் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றியபோது நாங்களும் இடம் பெயர்ந்து வன்னிக்குப் போனோம். அங்கே யும் கிளிநொச்சியில் இருந்தோம். பிறகு இங்கி ருந்தும் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. கிளிநொச்சியில் இருந்து நாங்கள் இராணு வத் தாக்குதலால் மயிரிழையில் தப்பி அக்கராயனில் வசித்துவந்தோம். இப்படியே நாங்கள் இடம்பெயர்வில் சந்தித்த துன்பங் கள், துயரங்கள் ஏராளம்' என்றார்.

– ஈசன் –

இப்படிக்கூறிய அவர் தொடர்ந் தும் கூறுகையில் 'எனக்கு 49 வயதாகி விட்டது. எனது வாழ்வில் நான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும்போது ஏன் பிறந்தேன் என்ற எண்ணம்தான் வருகிறது. பயமின்றியும், துணிவாகவும் எதையும் செய்யமுடியவில்லை.

வன்னியிலிருந்து வந்துதான் வீட்டையும் திருத்தினனாங்கள். இப்ப அதையும் விட்டிட்டு வரவேண்டிப் போச்சு. விடிய நித்திரையால எழும்பி வீட்டுக் கதவைத் திறந்து வெளியால வந்தால் முன்னுக்கு ஆமிதான் நிற்கிறான். பொம்பிளப் பிள்ளையள் கிணத்தடிக்குக்கூடப் போக ஏலாது. நெடுகலும் வீட்டுக்கு வந்து 'குண்டு கிடக்குதோ?' 'எல்.ரீ.ரீ.ஈ வாறதோ?' எண்டு வெருட்டுறாங்கள். வீட்டுக்குள்ள வரேக்க துவக்க நீட்டிப் பிடிச்சுக்கொண்டு வாறாங்கள், 'ஆமியின்ர முகத்தில ஒரு பயங்கர வெறிதான் தெரியுது' என்னட்ட பொம்பிளப் பிள்ளையள் இருக்குது அதால, 'வன்னிக்கு வந்து கஸ்ரப்பட்டாலும் பரவா யில்லை எண்டு நினைச்சு அங்கயிருந்து தப்பிவந்திட்டம்' என்றார் அவர்.

சிங்களப்படைகளின் அடாவடித் தனம் சாதாரண மனித உயிர்களைக் குடிக்கும் அளவிற்கு மாற்றங் கண்டுள்ளது. பலரை வலைவிரித்துத் தேடியும் வருகிறார் கள். இந்நிலையில் படையினரின் தீவிர தேடுதல்களுக்குள்ளாகியிருந்த யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த அமலநேசன் என்ற 51 வயதுடைய நான்கு பிள்ளை களின் தந்தை இப்படிக் கூறுகின்றார்.

'ஆமிக்காரங்கள் ஏன்தான் சனத்தை இப்படிச் சுட்டுத் தள்ளுறாங் களோ தெரியேல்லை. நான் கடல்தொழில் செய்யிறனான். எனக்கும் இயக்கத்திற்கும் தொடர்பே இல்லை.

எங்கன்ர வீட்டடி எல்லாம் ஆமிக்காரற்ற நடமாட்டம் கூடுகிறது. பிள்ளையள் வெளியால போக ஏலாது. போனால் எங்கபோறாய், எல்.ரீ.ரீயைச் சந்திக்கவோ? உடன வரவேணும் இல்லாட் டில் தெரியும்தானே. எண்டெல்லாம் கடுமை யாக விசாரிக்கத் தொடங்கிட்டான்.

இப்பிடி இருக்க, ஒருநாள் நான் வீட்டில இல்லை. அண்டைக்கு ஆமிக்காரர் போய் என்னைக்கேட்டு வெருட்டி இருக்கி றாங்கள். 'அவர் எல்.ரீ.ரீ எண்டு எங்களுக் குத் தெரியும். ஆனால் நாங்கள் ஒண்டும் செய்யேல்ல. எங்கட காம்புக்கு வந்திட்டுப் போகச் சொல்லுங்கோ' என்று சொல்லிப் போட்டு வீடுமுழுக்கத் தேடிப்பாத்திட்டு போட்டாங்கள்.

ஆமியின்ர இந்த வேலையால வீட்டுக்காரர் பயந்து என்னை வீட்டுக்கு வரவேண்டாம் வன்னிக்குப் போய்த் தப்புங்கோ எண்டு அனுப்பிப்போட்டினம். இதுக்குப் பிறகு நெடுகலும் அவர்கள் வீட்டபோய் அந்த அயல்முழுக்கத் தேடுதல் செய்து வீட்டுக்காரரையும் வெருட்டத் தொடங்கிட்டான். வீட்டுச் சாமானுகள் ஏத்துறதுக்கு வாகனக்காறங்கள் மாட்டன் என்று பயப்பிடுறாங்கள். ஆதால சாமானு களை விட்டுவிட்டு அவையும் தப்பி வந்திட்டினம்.

எங்களுக்கு வன்னியும் இல்லாட் டில் என்ன நிலை. எத்தின காலத்துக்கு இப்படி வாழுறது' என்றார் அவர்.

யாழ்குடாநாட்டிலிருந்து 2005இல் தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியேறியதன் பின்னர் இன்றுவரை 107 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளனர். வயது வித்தியாச மில்லாமலும், யார் எவர் என்றில்லாமலும் மக்களை படையினரும் ஒட்டுக்குழுவின ரும் இணைந்து படுகொலை செய்து வருகி றார்கள். இவர்களால் 28.12.2005 புதன் கிழமை இரவு 11.30 மணிக்கு கொடிகாமத் தில் உள்ள அவரது வீட்டில் தாய், தந்தை, சகோதரர்களின் முன்னால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட மாணவனின் சகோதரி அர்ச்சனா தனது பாச அண்ணாவின் படு கொலை பற்றி இப்படிக் கூறுகின்றார்.

'சம்பவம் நடைபெற்ற தினம் நாங்கள் படித்துவிட்டு இரவு பத்து மணி யளவில் நித்திரைக்குச் சென்றுவிட்டோம். நல்ல இரவு. நாய்கள் குரைக்கின்ற சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் எனக்குப் பயத்தை ஏற்படுத்தியது. சிறிது நேரத்தில் எங்கள் வீட்டு வாசலில் நின்று யாரோ கூப்பிட்ட சத்தம் கேட்டது. அம்மா எழும்பிப்போய் கதவைத் திறந்தார். எல்லோரையும் வெளி யில் வரும்படி கூறினார்கள். இதற்கிடை யில் அண்ணா எழுந்து யாரடா நீங்கள் என்ன வேண்டும் என்று கேட்டபடி வீட்டுக்கு வெளியே போனான். அம்மா அண்ணாவை வீட்டுக்குள்ளே போகும்படி கதவுக்குள் தள்ளிவிட்டார். அதற்கிடையில் அப்பாவும் வெளியால வந்திட்டார்.

துவக்கால சுட்ட சத்தம் கேட்டது. கதவுக்குப் பக்கத்தில நிண்ட அண்ணா, 'அம்மா' எண்டு கத்திக்கொண்டு, தண்ணி தண்ணி எண்டு கத்தினபடி மயங்கிப்போட்டான். சுட்டவங்கள் எப்படி ஓடினாங்கள் எண்டுகூடத் தெரியேல்ல, அவங்கள் போட்டாங்கள்.

நாங்கள் பெரிசாகக் கத்தின சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள்

> **"அடுத்த நாள்தான் கிணற்றில் இருந்து தர்சினியின் உடலை எடுத்தோம். தர்சினியின் இடுப்பிலும் காலிலும் இரண்டு பெரிய கல்லைக் கட்டித்தான் கிணத்துக்குள் போட்டிருக்கிறாங்கள். உடம்பெல்லாம் காயங்கள்தான் இருந்தது."**

எல்லாரும் வந்திட்டினம். அண்ணா இரத்த வெள்ளத்தில துடித்துக்கொண்டிருந்தான். வைத்தியசாலைக்கு அண்ணாவைக் கொண்டுபோறதுக்கு வாகனம் வைச்சிருக் கிற ஆக்களிட்டப்போய் கெஞ்சிக்கேட்டும் பயத்தில அவ ஒருத்தரும் வரமாட்டன் எண்டுட்டினம். அண்ணா அப்படியே அம்மான்ர மடியில எங்களின்ர கண்ணுக்கு முன்னால செத்துப்போனான். எனக்கு அந்தக் காட்சியை நினைக்க பயமாய் இருக்குது' என்று விம்மினாள் அந்தச் சிறுமி.

தமிழினத்தை அழித்து ஒழிக் கின்ற சிங்களப் படைகளின் இரக்கமற்ற கொடூரச்செயல்கள் பல்வேறு வடிவங்களில் நகர்த்தப்பட்டு வருகிறது. அதில் முக்கிய மானது தமிழ்ப்பெண்கள் மீதான படைகளின் அத்துமீறிய நடவடிக்கைகள். இந்த நட வடிக்கை பாலியல் வல்லுறவு வரை சென்று படுகொலையில் முடிவடைகின்றது. இராணுவத்தின் இத்தகைய பயங்கரவாதச் செயல் தமிழ்ப் பெண்கள் அனைவரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அண்மையில் புங்குடுதீவில் தமிழ்ப்பெண் இளையதம்பி தர்சினி சிறி லங்கா கடற்படையினரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடற்படை முகாமிற்கு அருகிலுள்ள கிணற் றில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இதுபற்றி புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கும் 63 வயது டைய பெண்மணி ஒருவரிடம் கேட்டோம். அவர் இப்படிக் கூறுகிறார்.

தர்சினி மிகவும் நல்லபிள்ளை. அவரிடம் அன்பு, பாசம், மனச்சாட்சி, எதையும் செய்துமுடிக்கும் மனவலிமை, நேர்மைத் தன்மை, எவருக்கும் உதவுகிற மனம் இதற்கும் மேலாக உழைப்பால் உயர வேண்டும் என்ற நோக்கம் அனைத்தையும் கொண்டவள். வறுமையான குடும்பம். தந்தையை சிறுவயதிலேயே இழந்து விட்டாள். இவளுக்கு இரண்டு சகோதரிகள். அவர்களில் மூத்த சகோதரியின் கணவரை சிங்களப்படைகள் வவுனியாவில் வைத்து சுட்டுக் கொன்றுவிட்டனர்.

இவற்றால் தர்சினி பெரும் பாதிப் படைந்திருந்தார். நெடுந்தீவில் ஈ.பி.டீ.பியின் கெடுபிடிகள் அதிகம். தர்சினி தனது கல்வியை இடையில் நிறுத்துவதற்கும் ஈ.பி.டீ.பியின் செயற்பாடுகள்தான் காரண மாக அமைந்தது. பாடசாலைக்குச் செல்கின்றபொழுது சேட்டை விடுவதும், கல்லால் எறிவதும் அவர்களுக்கு வழமை யாகி விட்டது. அதனால்தான் இவள் பாட சாலைக்குச் செல்வதை நிறுத்தியிருந்தாள்.

தர்சினியின் வீட்டுக்கு அருகில் பன்னிரண்டுக்கும் அதிகமான மக்களின் வீடுகளையும் ஆக்கிரமித்து பிரமாண்டமான கடற்படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. அன்றும் தர்சினி வழமைபோல மாமா வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தபொழுது ரோந்து செல்கின்ற ஆமிக்காரர் அவளை கடத்திக்கொண்டுபோய் பாலியல் வல்லுறவுக் குட்படுத்திப் படுகொலை செய்துவிட்டார் கள்.

தர்சினிக்கு இந்தக்கதி நேர்ந்த செய்தி அன்றையதினம் எவருக்கும் தெரி யாது. மறுநாள் காலை தர்சினி வீட்டுக்கு வரவில்லை. அதன்பிறகு தேடுவதற்கு ஆரம்பித்தோம். தர்சினியின் ஒருகால் செருப்பு மாத்திரம்தான் இருந்தது. கடற் படையிடம் சம்பவத்தைக் கூறினோம். அவர்கள் தமக்குத் தெரியாது புலிகள் கடத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். பின்னர் சற்றுநேரம் கழித்து ஆயுதங் களுடன் கடற்படையினர் வந்தார்கள். கால்



கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட தர்சினியின் உடல்

செருப்பு இருந்த இடத்தையும் தர்சினியின் வீட்டையும் காட்டுமாறு முறைப்புடன் கேட்டார்கள். இதற்கிடையில் அந்த ஊர் இளைஞர்கள் சேர்ந்து தேடிக்கொண்டுபோய் ஒருவாறு தர்சினியின் உடல் கிணற்றுக்குள் இருப்பதைக் கண்டுவிட்டார்கள். அவர்கள் சடலத்தைக் கண்டவுடன் ஆத்திரத்தில் கத்தியவாறு கடற்படையினரை நோக்கி வர, அந்தச் சத்தத்தைக் கேட்டதும் வீடு விசாரித்து வந்த கடற்படைக்காரர்கள் ஓட்டம் பிடித்துவிட்டார்கள்.

அதன்பிறகு அடுத்த நாள்தான் கிணற்றில் இருந்து தர்சினியின் உடலை எடுத்தோம். தர்சினியின் இடுப்பிலும், காலி லும் இரண்டு பெரிய கல்லைக் கட்டித்தான் கிணத்துக்குள் போட்டிருக்கிறாங்கள் உடம் பெல்லாம் காயங்கள்தான் இருந்தது. அதுக்குப் பிறகு ஆமியின்ர காம்ப்பெல்லாம் சனம் கொழுத்தினது.

இப்படி அவங்கள் அமைதியாய் இருந்த பிள்ளையை இந்தப்பாடு படுத்திக் கொலைசெய்து போட்டாங்கள். பிறகு எப்படி நாங்கள் அங்க குமர்ப் பிள்ளை யளை வைச்சுக்கொண்டிருக்கிறது.

நேவிக்காரன்ர காம்ப்பைக் கொழுத்தினதுக்குப் பிறகு அவ்விடத்துச் சனம் எல்லாத்தையும் பிடிச்சு ஒரே அடி. நாங்கள் எங்கன்ர ஊரில இருக்க ஏலாது, ஆனால் அவங்கள் இருக்கிறாங்கள்.

எங்கன்ர மெயின் றோட்டில பெரிய நேவிக்காம்ப் இருக்கு. அவங்கள் எங்களை வெளிக்கிட விடுறாங்கள் இல்லை. சாமானுகள் ஒண்டையும் எடுத்துவர விடுறா னில்லை. சனங்கள் பயந்துகொண்டிருக் குதுகள். நாங்கள் ஒருமாதிரி வெளிக்கிட்டு வந்திட்டம்' என்றார் அவர்.

'படைகளின் கெடுபிடிகளால் பெருந்தொகையான மக்கள் வன்னிக்கு வரமுடியாமல் இருக்கிறார்கள். அப்படித் தப்பியோடி வந்தாலும் வீட்டுப்பொருட்களை கொண்டுவர முடியவில்லை. கடைக்குச் சாமான் வேண்டப் போனாலும் எங்களுக்கு அளவாய் மட்டும்தான் வேண்டவேணும். கூட வேண்டிக்கொண்டு வந்தால் அதுக்கு ஒரு விசாரணை.

வெளியால வெளிக்கிடவும் ஏலாது. எப்ப யார் வந்து சுடுவானோ தெரி யாது. இந்த நிலைமையில ஒவ்வொரு நாளும் செத்தபடிதான் அங்க இருக்க வேணும். அதுதான் வன்னிக்குத் தப்பி வந்திட்டம்' என்றார் புத்தூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்ற 39 வயதுடைய குடும்பஸ்தர்.

இந்தநிலை யாழ்.குடாநாட்டிற்கு மட்டுமல்ல, தமிழர் தாயகமெங்கணும் தொடர்கின்றது. இராணுவத்தாலும் இராணு வத்துடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களி னாலும் மக்கள் சுடப்படுகின்றனர், கடத்தப் படுகின்றனர். காரணமின்றிக் கைதுசெய்யப் படுகின்றனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டு கோரமாகக் கொலை செய்யப்படுகின்றனர். மொத்தத்தில் மக்கள் மீதான கொடியயுத்தம் சிங்களப் படைகளா லும் சிங்கள தேசத்தாலும் ஏதோ ஒரு வகையில் பிரகடனப் படுத்தப்பட்டே விட்டது.

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்துடன், தமிழரின் போர் எழுச்சி யுடன் கூடிய புலிகளின் பல அதிகரிப்பைச் சமாளித்து போர்புரியக்கூடிய வகையில் சிங்கள முப்படைகளையும் தயார்படுத்த சிங்களத் தளபதிகளுக்குக் கால அவகாசம் தேவைப்படுகின்றது.

இவ்வாறு, சிங்களத்தின் பொருண மிய - இராணுவ நலன்களை அடிப்படை யாக வைத்தே மகிந்த அரசு ஜெனீவா பேச்சுக்குச் சம்மதித்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்த உண்மையை நன்றாக உணர்ந்து கொண்டிருந்தபோதும் கூட சமா தானத்திற்கு ஒரு வாய்ப்பை வழங்கி, மகிந்த அரசை அம்பலப்படுத்த புலிகள் இயக்கம் முடிவெடுத்துள்ளது.

தலைவர் பிரபாகரனை நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் சந்தித்தபோது தமிழர் தாயகத்தின் களநிலைமைகள் பற்றியும் - சிங்கள அரசின் சந்தர்ப்பவாத அரசியல் பற்றியும் தலைவர் அவர்கள் நோர்வே அமைச்சருக்கு விளக்கிக் கூறி யிருந்தார்.

தமிழரின் இனப் பிரச்சினையை அமைதிவழியில் அணுகி - அரசியல் தீர் வொன்றை வழங்க மகிந்த ராஜபக்ஷவிற்கு தலைவர் பிரபாகரன் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளார்.

அமைதி முயற்சி தொடர்பாக சிங் கள தேசம் இனியும் காலத்தைக் கடத்தி - தந்திரங்கள் புரிய முனைந்தால் இது சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பமாவது விளங்கும் என்பது உறுதி. ●

# உலைக்களம்

வியாசன்

வானவில்லின் வண்ணம் கரைய
நிஜத்துக்குத் திரும்புகிறது ஆகாயம்.
பொய்மானில் மின்னிய
தங்கப்புள்ளிகள் மறைய
உண்மையான உருவம் தெரிகிறது.
பலத்த தடல்புடலாக
இல்லாத ஊருக்குப் புறப்பட்ட பயணம்
இடைநிறுத்தப்படுகிறது.
விடிந்தகாலை பகலாக முன்னரே
மீண்டும் இருளத்தொடங்குகிறது பொழுது.
சமாதானக் காற்றின் தாலாட்டில் மயங்கி
ஓட்டுத்திண்ணையில் உறக்கம் கண்டவர்
ஏதோ உள்ளுணர்வின் அருட்டலில்
விழித்தெழத் தொடங்கினர்.
இப்போதாயினும் மயக்கம் தெளிந்ததெண்ணி
மகிழ்ச்சியடைவாயாக.
கனவுகள் தொலைத்த மனிதர்களாக
மீண்டும் இனிப் பயணம் தொடரலாம்.
எங்கள் பயணவழியானது
மலையின் உச்சி நோக்கியது.
இடையில் இளைப்பாற நிழலற்றது.
விழுந்தவரை எடுத்துவரும் வகையற்றது.
இலக்கடையும்வரை சாவொன்றைத் தவிர
வேறொன்றற்றது.
இத்தனை சிலுவைசுமப்பின் பின்னரே
எமது விடுதலை இருக்கிறது.
இதற்கு அத்தரும் ஜவ்வாதும் பூசி
தலைவாரிக்கொண்டு நடக்கமுடியாது
இதன்வழி துயர் நிறைந்தது.
பயணவழி நெடுக்கிலும்
மாயப் பொய்கைகள் மடிநிறைந்திருக்கும்.
பொய் நிழல்கள் படிந்திருக்கும்.
வசமிழக்கச்செய்யும் கனவுகள் சொல்லி
மோகினியரங்குகள் மிளிரும்.
மயக்கும் நறுமணங்களைப் புறமொதுக்கி
முற்றும் துறந்தவராய் முன்னேறவேண்டும்.
சித்தர்களுக்கு ஒப்பான தெளிவும்,
இலக்குமீதான வெறியும்,
பரித்தியாகம் செய்யும் பக்குவமும்
பயணிகளுக்கு இருத்தல் அவசியம்.
ஈழத்தமிழரும் இவ்வாறே கடந்தோம்.
ஏ-9 தெருவின் அகலத்திறந்த கதவூடு
வந்தவர் எறிந்த சின்னச்சிரிப்பில்
கொஞ்சம் வசமிழந்து தடுமாறிவிட்டோம்.
போருக்குச் சென்று பேசத்தொடங்கியதும்
கைக்கு வந்தது காலமெனக் கரைந்து
வந்தவர் எல்லாருக்குமே சந்தனம் வழங்கி
எம்மை நாமே வெடிவைத்துத் தகர்த்தோம்.
நாங்கள் ஒருபடி கீழிறங்கியதும்
பகைவர் பலபடிகள் மேலேறிவிட்டனர்.
எம்மைப் பார்க்கப் பயந்தவரைக்கூட
தொட்டுவிளையாட விட்டுக்கொடுத்தோம்
விளையாடவிட்டதை வெற்றியெனக் கணித்து
சோதிப்பிளம்பையே துண்டாடத்தொடங்கினர்.
தலையைச் சொறிவதற்குக்கூட
அரசன் முடியைக் கழற்றக்கூடாது
அரசன் முடியைக் கழற்றினால்
ஆண்டிகூடப் போருக்கழைப்பான்.
முன்னர் போரென்று போரிட்டதும்
பின்னர் பேச்சென்று பேசவந்ததும்
பாவப்பட்ட சந்திரிக்கா மட்டுமல்ல.
பாவைப்பிள்ளையான ரணிலும் அல்ல
இன்றைய மகிந்த மச்சானும் அல்ல
இவர்களுக்குப் பின்னே இயங்குகின்றன
இன்னும் பல இருட்டு உலகங்கள்.
பேசென்று சொல்லி மேசைக்கனுப்புவதும்
போரிடுவென்று பீரங்கிகள் வழங்குவதும்
இந்த அரூபகரங்கள்தான்.
விடுதலையாளர்களுக்கு எல்லைகள் இருக்கின்றன.
அடக்குமுறையாளர்கள்
அதை எப்போதோ மீறிவிட்டனர்.
இன்று தீர்மானிப்பதுவும்
தீர்ப்பு வழங்குவதும்
அணுக்குண்டுக்காரரின் அரியாசனங்களே.
பூரண விடுதலையென்பது
எங்கள் புண்ணுக்கு எவரோ மருந்திட்டு
எழுந்து நடக்கப் பலம் தருவதல்ல.
அது பூட்டிய விலங்கைப் பொடியாக்கி
உடைத்த விலங்கையுருக்கித் திறப்புச்
செய்து
அந்தச் சாவியால் அரசைத் திறப்பது.
விடுதலைக்கான போர் காற்றைப்போன்றது
எந்தத் தடையையும் எதிர்த்து உட்புகும்.
விடுதலைக்கான போர் தண்ணீர் போன்றது
இறைக்க இறைக்க ஊற்றெடுக்கும்.
விடுதலைக்கான போர் ஆற்றைப்போன்றது
வளைந்தாலும் நெளிந்தாலும்
இலக்கடையும்.
ஈழத்தமிழர் உயிர்ப்புக்கொண்டு
முப்பது வருடங்கள் முற்றுப் பெறுகின்றன.
உயிர்விதைத்துப் புறப்பட்ட பயணம்
வெற்றியின் விளிம்புதொட்டு நிற்கிறது.
எமக்கான ஆதரவும்
எம்மீதான ஆக்கிரமிப்பும்
இனித்தான் பலம்கொண்டு எழும்பும்.
அச்சுறுத்தல்களாலும்
வலைவிரிப்புக்களாலும்
பயணத்தை திசைமாற்ற முயல்வர்.
வெளிச்சத்துக்கு அழைப்பதாய் கூறி
இருளின் இடுக்குகளுக்குள்ளே இழுப்பர்.
பேச்சு,
மீண்டும் பேச்சு,
பேச்சுக்கு முன்னர் பேச்சு,
பேசிய பின்னரும் பேச்சு என
சுற்றிச் சுற்றிச் சுழலவைப்பார்கள்.
அப்போது தலைசுற்றத் தொடங்கும்
பின்னர் தடுமாறவைக்கும்.
தொடக்கமெது முடிவெதென்று தெரியாமல்
நீண்ட பேச்சுக்களால் நியம்மாறியவரே
அதிகம்
நாங்கள் அப்படியல்ல.
நச்சுக் குளத்தில் நீச்சலடித்தவர்
மாயப் பொய்கையிலா
மரணித்துப்போவர்?
சூடுதணியாத சூளைகளாய்க் கனன்று
‘தமிழே எங்கள் தாரக மந்திரம்’ என
நெற்றியில் எழுதியபடி நின்று
நோர்வேக்கு கைகுலுக்குவோம்.
பேசுபவர்கள் மட்டும் பேசட்டும்
மற்றவர் எல்லோரும் வாருங்கள்
நாங்கள் பாசறைகளைப்
பலப்படுத்துவோம்.
பீரங்கிகளுக்கு எண்ணையிட்டு,
இடியன்களுக்கு வெடிமருந்தேற்றி,
விமானங்களைப் பரீட்சித்துப் பார்த்து
தலைவனின் கட்டளைக்குக்
காத்திருப்போம்.
பேச்சு எப்போது முறிவடைகிறதோ
போர் அப்போது எகிறத் தொடங்கும்.

**நச்சுக்குளத்தில்**
**நீச்சலடித்தவர்**
**மாயப்பொய்கையிலா**
**மரணித்துப்போவர்**

